
ஞானச்சுடர்
சந்நிதியான் ஆச்சிரமம்
ஆடி
2019
259 ஆவது மலர்
ஓம்
முருகா
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி**
**மூக்கிற் கரியா ருடைத்து.**

**பொருள் :** குன்றிமணியின் மேற்புறம் போல வேடத்தாற் செம்மை உடையவராய்க் காணப்படினும் மனதிலே குன்றிமணியின் மூக்குப்போல் கறுத்திருப்பவர் இவ்வுலகத்திலுளர்.

(277)

**மனத்தது மாசாக மாண்டார் நீராடி**
**மறைந்தொழுகு மாந்தர் பலர்.**

**பொருள் :** மனத்தில் அழுக்கு இருக்கத் தவத்தால் மாட்சிமைப்பட்டவர் போல் பிறர்க்குக் காட்டி நீரிலே முழுகி நடித்து ஒழுகுவார் பலர் இவ்வுலகில் உளர்.

(278 )

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

## முத்தி நல்குமே

## முழுவதும் உண்மை



**பல்லவி**

முழுவதும் உண்மையென்று
மோனமுனி சொன்னானன்று

**அநுபல்லவி**

பழுதொன்று மில்லையென்று
பண்ணுவாய் சிவதொண்டு (முழு)


**சரணங்கள்**

ஒழிந்துபோ கும்பிறவி அழிந்துபோம் பழிபாவம்
எழுந்திரு விழித்துக்கொள் எல்லாம் உனக்குவெற்றி
(முழு) 1

தளர்ந்துபோ காதேகுரு சாற்றிய ஞானமொழி
தெளிந்துகொண் டாற்சீவன் சிவனெனக் காணலாம்
(முழு) 2

சொல்லித்து திக்கும்யோக சுவாமியைத் தினங்காக்கும்
செல்வன்திருப் பாதமே யல்லும்ப கலுந்துணை
(முழு) 3

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 259

2019 ஆடி

## பொருளடக்கம்



| | | |
|---|---|---|
| அம்மையப்பன் | இ. சரவணபவன் | 01 -05 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 06 -09 |
| ஆயுளை அதிகரிக்கும் செந்தூரம் | செல்வி ச. வர்ணி | 10 -11 |
| ஆனந்தக் கிருஷ்ணனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 12 -15 |
| ஆன்மீக முக்கியத்துவம்... | பூ.க. இராசரத்தினம் | 16 -18 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 19 -22 |
| மனிதத்துவம் | கு. சோமசுந்தரம் | 23 -26 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 27 -28 |
| சிவனடியார்கள் சிவப்... | ஆர்.வீ. கந்தசுவாமி | 29 -30 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 31 -32 |
| கிளிநொச்சியில் ஞானஒளி... | ஆ. சிவநாதன் | 33 -35 |
| ஔவையாரின் பாடற் சிறப்பு | மூ. சிவலிங்கம் | 36 -39 |
| மானிப்பாய் பெரிய தம்பிரான்... | தொகுப்பு | 40 -43 |
| ஆசை | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 44 -45 |
| நந்தனின் பக்திச்சுவை | பு. கதிரித்தம்பி | 46 -47 |
| அன்னையர் தினம் | திருமதி த. வசந்தகுமாரி | 48 -49 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | -50 |
| கதிர்காம யாத்திரை | செல்வி சி. நிலா | 51 -52 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர்
# ஆனிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:

ஞானச்சுடர் 258ஆவது மலருக்குரிய வெளியீட்டுரையினை நீர்வை கு. தியாகராஜசர்மா (நீர்வைமணி) அவர்கள் மேற்கொள்ள இருந்தவகையில் தவிர்க்க முடியாத காரணத்தால் வருகை தராததால் பார்வையாளராக வந்திருந்த இளைப்பாறிய அதிபர் திரு பு. கதிரித்தம்பி அவர்கள் மேற்கொண்டார்கள்.

ஆசிரியர் அவர்கள் ஞானச்சுடர் மலருக்கு ஆக்கங்களை வழங்கி வருபவருள் ஒருவராக உள்ள தன்மையினால் ஞானச்சுடர் போன்ற ஆன்மீக மலர் ஒன்றல்ல நூறு ஆயினும் வெளிவர வேண்டும். அவற்றில் இடம்பெறும் ஆன்மீகக் கருத்துக்கள் சமூக மாற்றத்திற்கு புத்துணர்ச்சி வழங்க வேண்டும் என்று கூறி ஆலயத்திற்கு வந்த என்னை வெளியீட்டுரை வழங்கவைத்த சந்நிதி வேற்பெருமானுக்கு நன்றி கூறித் தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:

ஞானச்சுடர் ஆனிமாத மலருக்கான மதிப்பீட்டுரையினை சைவப்புலவரும், ஆசிரியருமாகிய திரு க. கைலைநாதன் அவர்கள் மேற்கொண்டார்கள்.

ஆசிரியர் அவர்கள் ஆச்சிரமத்தோடு நீண்டகாலமாக இணைந்துள்ளமையால் ஆச்சிரமம் ஆற்றிவரும் பணிகளின் தொகுப்பை சபையில் இருந்த அடியார்களுக்கு விளக்கிக் கூறியதோடு மலர் பற்றிய கருத்துக்களையும் கூறினார்.

மலர் 258இல் வந்திருந்த ஆக்கங்களின் தன்மைபற்றி விரிவாக சபையில் வீற்றிருந்த அடியார்களுக்கு எடுத்துக்கூறியதோடு மதிப்பீடு செய்வதற்கு நேரம் போதாமை என்பதையும் கூறித் தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார். இறுதியாக சுவாமி அவர்களின் நன்றி உரையோடு சிறப்புப்பிரதி வழங்கும் நிகழ்வு முற்றுப்பெற்றது.

# சுடர் தரும் தகவல்

ஆடி மாதம் (சித்திரை நட்சத்திரம்) 21ஆம் நாள் (ஆகஸ்ட் 6) மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசை தினமாகும்.

மிக இளமையிலேயே திருவண்ணாமலை சென்று ரமண மகரிஷியின் சீடராகத் தங்கியிருந்து, பணிகள் பலவும் செய்து வந்த நாளில், ஒருநாள் ரமண மகரிஷியின் ஆசீர்வாதமும், "உன்னிடத்திலேயே உன் பணி காத்திருக்கிறது... சென்று வா... எல்லாம் நல்லபடியே நிறைவேறும்" என வாய்மொழி வாழ்த்தும் பெற்று தாயகம் திரும்பினார் இளைஞர் மயில்வாகனம்.



செல்வச்சந்நிதிச் சூழலில் சிறு குடில் அமைத்து நாடிவரும் அடியவர்க்கு அன்னம் வழங்க ஆரம்பித்தார் வாலிபர் மயில்வாகனம்.

1940 அளவில் தென்னஞ்சோலையின் நடுவே- ஆனந்தமான சூழலில் "ஆனந்தா ஆச்சிரமம்" எனும் பெயருடன் அவரது பணிகள் விரிவடைய நல்ல உள்ளங்கள் பலரதும் ஒத்துழைப்பும் ஒரு காரணமாயிற்று. மயில்வாகனம் சுவாமிகளது பணிகளில் உதவிபுரிய பல இளைஞர்களும் முன்வந்ததால் ஆனந்தா ஆச்சிரமத்தின் அன்னப்பணி உயர்ந்தோங்கியது.

1985இல் மயில்வாகனம் சுவாமிகள் சமாதியடைந்த பின்னரும் சில காலம்வரை அங்கேயே இயங்கி வந்த "ஆனந்தா ஆச்சிரமம்" யுத்தசூழல் இறுக்கமாகிய காலத்தில் ஆச்சிரமக் கட்டிடம் அனைத்தும் தரமட்டமாகியது. மயில்வாகனம் சுவாமிகளின் பிரதம சீடராகவிருந்து ஆச்சிரமப் பணிகள் அத்தனையையும் கற்றுத்தேறிய இளைஞர் மோகனதாஸ் 1998இல் "சந்நிதியான் ஆச்சிரமம் என்னும் பெயருடன் மயில்வாகனம் சுவாமிகளின் வழித்தடத்தில் கால்பதித்து நடந்து செல்கிறார். சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆண்டுதோறும் மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசை தினம் நிறைவாக நினைவு கூரப்படுகிறது.

சந்நிதியான் ஆச்சிரமத்திலிருந்து மாதாந்தம் வெளியாகும் "ஞானச்சுடர்" மலரின் அட்டையில் இடதுபுற மேல் மூலையில் மயில்வாகனம் சுவாமிகளின் திருமுகம் ஒளிர்வது, "மோகனதாஸ் சுவாமிகள்" தம் குருமீது கொண்டிருக்கும் அதீதமான பக்தியின் வெளிப்பாடேயாகும்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 15. புய வகுப்பு

இசைதனி லினிய கயிசிகை கவுட வராளித
னாசி தேசி பயிரவி குச்சரி
பஞ்சு ரந்தெ ரிந்து வீணைக் கிசைந்தன
இறுதியி லுதய ரவிகண நிகரென ஆறிரு
காது தோயு மிலகும ணிக்கன
விம்ப குண்ட லங்கண் மேவிப் புரண்டன
எதிர்படு நெடிய தருவடு பெரிய கடாமுமிழ்
நாக மேக மிடிபட மற்பொரு
திண்சி லம்ப டங்க மோதிப் பிடுங்கின
எழுதரு மழகு நிறமலி திறலிசை யாகவு
தார தீர மெனவுரை பெற்றவ
டங்கலுஞ் சிறந்து சாலத் ததும்பின
இருள்பொரு கிரண விரணிய வடகுல பாரிய
மேரு சாதி யினமென வொத்துல
கங்க ளெங்க ணும்ப்ர காசித்து நின்றன
இயன்முநி பரவ வொருவிசை யருவரை யூடதி
பார கோர இவுளிமு கந்தவள்
கொங்கை கொண்ட சண்ட மார்பைப் பிளந்தன
இபரத துரக நிசிசரர் கெடவொரு சூரனை
மார்பு பீறி யவனுதி ரப்புனல்
செங்க ளந்து ளங்கி யாடிச் சிவந்தன
எவையெவை கருதி லவையவை தருகொடை யான்மணி
மேக ராசி சுரபிய வற்றொடு
சங்க கஞ்ச பஞ்ச சாலத்தை வென்றன:,

# ஆடிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

ந. ஜவகர்லால்நேரு

(லண்டன்)

K. கனகசபேசன்

(கனடா)

செல்வி தம்பு சறோஜா

(சங்கீத முதன்மை இளை. ஆசிரியர், நெல்லியடி)

இ. பேரின்பநாயகன்

(நாவலர் பாலர் பாடசாலை ஸ்தாபகர், சுதுமலை)

Dr. V. ஸ்ரீஸ்காந்தன்

(ரஞ்சிதா மெடிக்கல் கிளினிக், சுதுமலை)

சி. பஞ்சலிங்கம்

(லிகிதர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)

வே. பாராளன்

(தொழில் நுட்ப உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்)

S. தர்மரெத்தினம்

(அதிபர், சிறுப்பிட்டி)

ச. நவரத்தினராசவேல்

(அதிபர், வேல்பதி, புத்தூர்)

நா. இராசலிங்கம்

(இளை. அத்தியட்சகர்)

திருமதி கலாநிதி முரளிதரன்

(யாழ்ப்பாணம்)

ந. சேகர்

(கிராம சேவையாளர், வீரபத்திரர்கோயிலடி, உடுப்பிட்டி)

கு. ஸ்ரீமுருகமூர்த்தி

(கிளை முகாமையாளர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)

சு.பொ. நடராசா

(அண்ணா தொழிலகம், இணுவில்)

த. கந்தசாமி
(இருபாலை வீதி, கோண்டாவில்)
செல்வி இ. வல்லிபுரம் ஆசிரியை
(நவக்கிரி)
செ. ஈஸ்வரன்
(சித்தங்கேணி)
சுப்பிரமணியம் அருளானந்தசிவம்
(அல்லாரைவீதி, மீசாலை கிழக்கு)
பாலசுப்பிரமணியன் ராகுலன்
(யாழ்ப்பாணம்)
ச. இராசரத்தினம்
(நாவலர்வீதி, யாழ்ப்பாணம்)
திருமதி மாலதி இராஜேஸ்வரன்
(உடுப்பிட்டி)
த. திருஞானசம்பந்தர்
(ஏழாலை வடக்கு)
புஸ்பநாதன் பிரதீபன்
(உரும்பராய் வடக்கு)
க. குணசிங்கம்
(சாவகச்சேரி)
இ. சிவஞானம் J.P
(புத்தூர்)
N. குலசேகரம்
(வருணன், அச்சுவேலி)
க.ம. செல்வரெத்தினம்
(நவாலி கிழக்கு, மானிப்பாய்)
சி. தனபாலசிங்கம்
(புலோலி)
ஆ. குலசிங்கம்
(இணுவில்)
சிதம்பரப்பிள்ளை அனுஜா
(அல்வாய்)
செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளை
(பொலிகண்டி)

**திருமதி உ. பேரானந்தம்**
(தெல்லிப்பழை)
**வி. சிவபாலசிங்கம்**
(கரன் பான்சி, சுன்னாகம்)
**க. ஸ்ரீஸ்கந்தராசா**
(கிராமசேவகர், சிறுப்பிட்டி கிழக்கு)
**ந. இராமரூபன்**
(நீர்வேலி)
**மு. இராஜேந்திரன்**
(முருகையா கோவிலடி, புலோலி)
**பொன். சற்குணநாதன்**
(வேம்பன் வீதி, உரும்பராய்)
**சொ. செல்லத்துரை**
(பத்திரகாளி ஒழுங்கை, பருத்தித்துறை)
**நா. தெய்வேந்திரம்**
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
**வி. தவத்துரைராசா**
(மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய்)
**சு. அனுஷியாதேவி**
(முருகவாசா, சித்தங்கேணி)
**சி. கணேசமூர்த்தி**
(அல்வாய்)
**தயானந்தன் சுஜந்தன்**
(அச்சக வீதி, கொக்குவில்)
**உரிமையாளர்**
(சுந்தர்சன்ஸ், மானிப்பாய்)
**ச. சூரியப்பெருமான்**
(ராகுலசூரியன், பருத்தித்துறை)
**மா. அருட்செல்வம்**
(எழுதுவினைஞர், புலோலி வடமேற்கு)
**ச. சிவரூபன்**
(சிறுப்பிட்டி)
**செல்லையா சர்வேஸ்வரன்**
(செல்வறங்கம், இணுவில்)

ஆ. மகேந்திரலிங்கம்
(வேம்போலை, இணுவில்)
உரிமையாளர்
(நாதன் அன் பிறதேர்ஸ், இணுவில்)
**கணேசலிங்கம் ஞானாமிர்தம்**
(குப்பிளான்)
**செல்வன் சி. கௌதமன் C/O சி. சிவபாலன்**
(யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(ரேவதி நகைமாடம், யாழ்ப்பாணம்)
**செ. வாமதேவன்**
(இணுவில் மேற்கு, இணுவில்)
**V. சேனாதிராசா**
(கரவெட்டி கிழக்கு, கரவெட்டி)
**பிறேமதாஸ் சசிகலா**
(K.K.S வீதி, யாழ்ப்பாணம்)
**செல்வி தர்மினி ரவிச்சந்திரன்**
(கட்டுடை, மானிப்பாய்)
**க. சிவஞானசுந்தரம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**திருமதி பொ. இரத்தினசோதி**
(கதிரவேற்பிள்ளை வீதி, பருத்தித்துறை)
**ச. கிருஷ்ணமூர்த்தி**
(கணாதிபன் அச்சகம், கரணவாய்)
செ. அட்செயலிங்கம்
(ஆசிரியர், அல்வாய்)
மூ.சிவலிங்கம்
(காரைக்கால் வீதி, இணுவில்)
க. விகர்ணன்
(குமரகோட்டம், கோண்டாவில்)
R. பொன்னுராசா
(வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை)
S. தர்மலிங்கம்
(கமலபதி மாதர்சங்க வீதி, சித்தங்கேணி)
சி. குகநாதன்
(கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)

# அம்மையப்பன்

– **திரு இ. சரவணபவன்** அவர்கள் –

சிவன் என்பதற்கு நிறைந்த மங்கலமுடையவன். நிறைந்த இன்பத்தையுடையவன் என்பதே பொருள். அன்பே சிவம் என்பதே திருமந்திரத்தின் சாரம். திருக்கையிலாய கிரியில் பார்வதி சமேதரராக பரமேஸ்வரன் வீற்றிருக்கிறார். உலகிற்குக் கர்த்தா சிவபெருமானே. அவர் என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர். சிவபெருமானுக்கு நான்கு திருக்குமாரர்கள். விநாயகர், வீரபத்திரர், பைரவர், வேலவர்.



உயிர் தத்துவம் சிவம். உடல் தத்துவம் சக்தி. உயிர் இல்லாமல் உடல் உதவாது. உடல் இல்லாமல் உயிர் தன்னை விதம்விதமாக விளக்காது. உயிரும் மெய்யும் சேர்ந்த கூட்டுறவாய் இயற்கைத் திட்டம் நிறைவேறுகிறது. சிவ சக்தியின் ஐக்கியத்தால் உயிர்கள் அனைத்தும் தோன்றியுள்ளன என்பதைக் குறிக்கிறது.

சிவன் முப்புரமெரித்த முதல்வன். சத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களும் மூன்று அரக்கர்கள். இம் மூன்றையும் ஒடுக்கினால் ஜீவன் முத்தி அடைகிறான். அதற்குக் கடவுளைச் சார்ந்து இருக்க வேண்டும். அவருடைய அருளால் அம்மூன்று புரங்களும் அழிக்கப்படுகின்றன. சிவசாயுஜ்யம் கிட்டுகிறது. மகாதேவனுக்கு ருத்திரன் என்பது ஒரு பெயர். உயிர்களை அழச்செய்பவன். அழுகையின்மூலம் உயிர பண்பாடு அடைகிறது. கங்கையை ஜடாபாரத்தில் வைத்திருப்பதால் கங்காதரர் எனப்படுகிறார். அவர் தியாகராஜன். விசுவத்துக்கே நாதன். அகிலாண்டத்துக்கும் அவரே தலைவன். அவர் மயானத்தில் ஆடுவார். அந்த இடத்தை உரிமைப்படுத்த யாரும் வரமாட்டார்கள். "கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை, தாயுமிலி, தந்தையிலி, தான் தனியன். பாற்கடலைக் கடைந்தபோது வந்த விஷத்தை தான் உண்டு நீல கண்டன் ஆனார். உலகை விழுங்க வந்த விஷம் ஒன்றுமல்ல; மரணம். அதனின்றும் தப்பிக்க முடியாது சங்கரனைச் சரணடைவதே தப்புவதற்குபாயம். விஷத்தைத் தாம் ஏற்றுக்கொண்டு, மற்ற நலன்களையெல்லாம் மாந்தர்க்குக் கொடுத்து விடுகின்றார். துறவி வேந்தனாகிய சிவபெருமான், நீலகண்டன் ஆனது தியாகத்தின்

*மற்றவர்களைச் சந்தோசப்படுத்துபவனே உண்மையில் சந்தோசப்படுகிறான்.*

உச்சநிலை, தேவியின் திருநடனமாகத் தொடங்கிய வாழ்க்கைமுறை அம்பலக் கூத்தனுடைய திருநடனமாக முற்றுப்பெறு கிறது. சித் ஆகாசம் அல்லது அறிவு வெளி ஐயனுக்கு ஆடுமிடம். இந்த அறிவு வெளி யானது சித் அம்பரம் என்றும் சித்சபை என்றும் இயம்பப்படுகிறது. அதனிடத்து கிளம்பும் ஒளியை முன்னிட்டு கனகசபை எனப்படுகிறது. ஆரம்பத்தில் அன்னையினால் பராமரிக்கும் குழந்தைகள் யௌவன தசை யில் பிதாவினால் பயிலுவிக்கப்படுகின்றனர். சித்சபைக்குத் தலைவனாய் இருக்கும் சபா பதியை வணங்க வேண்டும். முயலகன் என்ற அரக்கனை ஒரு காலால் மிதிக்கின்ற பாங்கில் அண்ணல் ஆடுகின்றார். முக் குணமாயுள்ள மாயைக்கு அடிமைப்படாதே. அதை உதைத்துத் தள்ளு. பிரகிருதியின் ஆதிக்கத்தை புறக்கணித்தாலொழிய ஞான வாழ்க்கைக்கு சாதகன் தகுதியுடையவனாக மாட்டான் என்பதை இச்செயல்மூலம் உல குக்கு விளக்குகிறார். தூக்கிய பாதமோ, விழிப்பு, கனவு, உறக்கம் ஆகிய மூன்று அவஸ்தைகளை நாள்தோறும் ஜீவர்கள் அனுபவிக்கின்றன. துரியநிலை என்பது ஜீவர்களுக்குண்டு. அவஸ்தை மூன்றுக்கும் அப்பாற்பட்டதாய் அது இருக்கிறது. அதை உணர்பவனே ஞான வாழ்க்கைக்குத் தகுதி உடையவன். அப்போது உண்மையான ஆனந்த தாண்டவம் அவனுக்குத் தொடங்கு கிறது. குஞ்சிதபாதம் இதை விளக்குகிறது. ஆணவ அகங்காரம் புலியைப்போன்று பொல்லாதது. அதைக் கொன்றாலொழிய ஆத்ம சொரூபத்தின் மகிமை தோன்றாது. அகங்காரம் எனும் புலியை சிவகுருநாதன் தானே கொன்று அதன் தோலைத் தமது அரையில் அணிந்திருக்கிறார்.

மனிதனுடைய மனது மான் போன்றது. துள்ளிக் குதித்து நிலைத்து இராது ஓடித்திரியும் மனதை அடக்கத் தெரிந் தவனே மகாயோகி. ஆடும் தெய்வமாகிய பெருமான் ஒரு கையில் மான் வைத்திருக் கின்றார். அந்த மான் புறத்திலுள்ள பொருட் களைப் பாராமல் சதாசர்வ காலமும் அவ ருடைய முக விலாசத்தைப் பார்த்தவண்ணம் இருக்கிறது. ஆத்மசாதகர் மனது சிவ சொரூ பத்தைச் சிந்திப்பதல்லாது வேறு செயல் செய்யலாகாது.

உடுக்கை ஒரு கையில் பிடித்திருக் கிறார். அது ஓசையை உண்டுபண்ணவல் லது. கடவுள் நாதப்பிரம்மம். நாதம் எனும் விந்துவிலிருந்து உலகு அனைத்தும் உண் டானது. நாதத்தை நிறுத்திவிட்டால் பிர பஞ்சம் ஒடுங்கிவிடும். ஒவ்வொரு ஜீவனிலும் ஓசை உதித்துக் கொண்டிருக்கிறது. இறை வனுடைய திருநாமம் எனும் ஓசையை தன் னிடத்திலிருந்து கிளப்புவானானால் அதன் மூலம் தன் சொரூபத்தை தெய்வ சொரூப மாகத் திருத்தியமைக்கலாம். பிறகு அந்த சொரூபத்தையும் கடந்த பெரிய நிலைக்குப் போக வல்லவனாகிறான். ஓசைமூலம் ஜீவாத் மன் தன்னை மேலானவனாகவோ, கீழான வனாகவோ மாற்றமுடியும் என்பதை உடுக் கையின்மூலம் புகட்டுகின்றார்.

மற்றொரு கரத்தில் கனலை ஏந்தி நிற்கின்றார். அது ஞானத்தின் சின்னம். எல்லாவற்றையும் சாம்பலாக்கும். எஞ்சுவது நீறு அதைத் தகிக்க தீக்கு இயலாது. சிவ ஞானம் எனும் அக்கினி கர்மத்தையும், அதிலிருந்து வந்த உலக வாழ்க்கையையும் எரிக்க வல்லது. சிவஞானம் அமிர்தம்போன்று பெருவாழ்வும், பேரானந்தமும் உடையது. அது பிரகாசம் வாய்ந்தது. இனிமையும், தூய்மையும் நிறைந்தது. இதனை ஜடாபாரத் திலுள்ள சந்திரனைக் கொண்டு புகட்டுகிறார்.

அண்ணலுடைய தாண்டவத்திலே ஊர்த்துவதாண்டவம் ஒன்று உண்டு.

*உழைத்துச் சம்பாதித்த பொருளுக்கு எப்போதும் மதிப்பு அதிகம்.*

சிவமும் சக்தியும் சேர்ந்து பிரபஞ்சத்தை அமைத்து நடாத்துகின்றனர். அந்த ஆனந் தத்தில் இருவரும் தாண்டவமாடுகின்றனர். ஊர்த்துவ தாண்டவத்தில் மட்டும் சக்தி சிவனுக்கு நிகராகவில்லை. ஜீவன் ஒருவன் பலவிதமான ஞான பூமிகளைக் கடந்து சஹஸ்ராரம் எனும் ஏழாவது ஞானபூமிக்குப் போகும்போது ஜீவபோதம் மிச்சமிருப்பதில்லை. தனது வியக்தி எல்லாம் கடலில் கலக்கும் நதிபோல் இழந்துவிடுகிறான். சுத்தசிவம் ஒன்றே எஞ்சியிருக்கிறது. சக்தியும் தனது இயல்பை இழந்து விடுகிறாள். இதுவே ஊர்த்துவ தாண்டவத்தின் தத்துவம்.

சிவ சொரூபத்தின் உச்சநிலை தட்சிணாமூர்த்தி, பிரம்மாவின் புத்திரர்களான சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் தமக்கு ஞானத்தை உரைத்தருள வேண்டு மென சிவபெருமானை வேண்டினர். "ஞானம் நாவினாலே நவிலற் பாலதன்று" என சின் முத்திரை பிடித்து ஒருகணம் யோக சமாதி யில் அமர்ந்தார். பெருவிரல் இறைவனைக் குறிக்கிறது. சுட்டுவிரல் ஆன்மா. மூன்று விரல்களும் மும்மலங்களைக் குறிக்கும். கல்லால மரத்தினடியில் தென்முகமாக வீற்றிருந்து சின்முத்திரை தரித்துள்ளார். பேச்சுக்கு ஆங்கே இடமில்லை. அந்த ஆனந்தத்தில் ஒரே மௌனம். ஜீவன் அடைய வேண்டிய முடிவான நிலை. தாமே அப்பெரு நிலையில் இருந்து பக்குவமடைந்த ஜீவர் களுக்கு அதைக் காட்டியருளுகின்றார். "பாசத்திலிருந்து ஆன்மா விடுபட வேண்டு மாயின், பதியோடு சேர வேண்டும் என்பதே பொருள்.

இடையறாத மௌனோபதேசம் அவ ரது சொரூபத்தில் நடைபெற்றுக்கொண்டிருக் கிறது. கருவி கரணங்கள் ஒய்ந்த மாமுனி வர்கள் மௌனோபதேசத்தின் உட்கருத்து. தெளிந்த கண்ணாடி போன்று அவர்கள் உள்ளத்தில் உள்ளபடி விளங்கிவிடுகிறது. ஆத்மாவின் நிஜ சொரூபம் பற்றிய ஞானம் ஒளிர்கிறது. பேரானந்தப் பெருநிலை எனும் கடலினுள்ளே ஜீவன் எனும் நதி நுழைந்து கடலில் கடலாய் விடுகிறது. வீடு என்பதும், சிவசாயுஜ்யம் என்பதும், முத்தி என்பதும் இதுவே. எல்லாம் சிவ சொரூபமாய் விடு கிறது. ஜீவனை இப்பெருநிலையில் கொண்டு சேர்ப்பவர் தட்சிணாமூர்த்தி.

துன்பங்களுக்கெல்லாம் மூலகாரணம் பற்றுவிடாமையே. புறப்பற்று, அகப்பற்று இரண்டுமற்ற இடமே இறைவனுடைய திருவடி களாகும். அப்பாதமலர்களைப் பற்றிப் பற்றற் றுப் பரம சுகத்தைப் பெறவேண்டும். சிவ மாகும் தன்மையைச் சீவர்கள் பெற வேண் டும், சீவன் சிவ சொரூபம், சித்தமலம் அறு வித்துச் சிவமாக்கி என்கிறார் மணிவாசகர். சிவத்தைத் தவத்தால் அடையலாம். தவம் என்பது, "சிந்தையையடக்கிச் செந்நெறி நிற் றல்". பக்தி நெறியில் நின்றால் பழவினை கள் கெட்டு, மலநீக்கமுற்று சிவமாந் தன்மையை எளிதில் பெறலாம். இறைவன் திருவடிகளுக்கு அன்பு செய்து, ஆனந்தத் தேன் சொரிகின்ற இறைவனுடைய இணையடி களை இயலிசைகள் என்ற நல்ல தமிழினால் பாடிப்பரவி பரகதி பெறவேண்டும். இறை வனை அடைவதற்குரிய நெறிகள் பலவாயி னும், அவற்றுள் தலைசிறந்தவை பக்தியும் ஞானமும். இறைவனிடம் இதயத்தைத் தந்து விட்டால் எல்லாப் பொருள்களையும் அவன் எடுத்துக்கொள்வான். மனத்தை அவனிடம் தருவது மட்டும்தான் நமது வேலை. அந்த மனதை அனைவராலும் தந்துவிட முடியுமா? எத்தனை கவலைகள், ஆசைகள். அந்த மனக்குரங்கைக் கட்டுக்குள் கொண்டுவர பக்தியினால்த்தான் முடியும், "காதற்ற ஊசி யும் வாராது காண் கடை வழிக்கே" என் பதை உணர்ந்து, எத்தனையோ

அருளாளர்களும், சித்தர்களும் நமக்குப் பக்தி வழியை அமைத்துத் தந்திருக்கிறார்கள். நாமும் பக்தி வழி நின்று ஞானப் பயிரை வளர்க்க வேண்டும். நாவைப் படைத்ததன் பயன் சர்வேஸ்வரனை வாழ்த்துவதற்கே மனத்திற்கும், வாக்கிற்கும் எட்டாத ஆண்டவனை மலர்களைக் கொண்டு அர்ச்சிப்பதனால் அவர் எளிதில் நம்வசம் ஆகிறார்.

கண்ணபிரான் பூபாரம் தவிர்த்தபின் வைகுந்தஞ் செல்ல எழுந்த காலை அடியார்கள் வணங்கி வாசுதேவரே! வருகிறது கலியுகமாயிற்றே! பாவம் மிகுந்த அக்கலியுகத்தில் யாம் எவ்வாறு உய்வோம்? என்று வினவ, கண்ணபிரான், "சந்திரசேகரராகிய சிவபெருமானது திருவடித் தாமரையிருக்கிறது. அதனை அர்ச்சிக்க வாசனை தங்கிய மலர் இருக்கிறது. அபிஷேகிப்பதற்கு குளிர்ந்த நீரிருக்கிறது. கலியுகத்திற்கு அஞ்ச வேண்டாம்" என்றார்.

இரு கரங்களையும் கூப்பி சதா சர்வ காலமும் தொழுவதே முத்திவீட்டிற்கு முதற்படியாகும். நாம் பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்காவண்ணம் இறைவன் பேதகஞ் செய்துகொண்டேயிருக்கின்றான். பேதகம் செய்வதாவது, "புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம் நன்னெறி ஒழுகச் செய்வதாகும்". ஆண்டவன் திருவருள் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்ப் பொங்கித் ததும்பிப் பூரணமாய் நிறைந்திருக்கின்றது. பண்பட்ட உள்ளம் பற்றிப் பிடிக்கிறது. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க இதயம் நல்லதாகும். அப்போது தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகிச் சிந்தையிற் சிவம் தெரியும். சித்தத்தைச் சிவன்பாலே வைக்கின்ற இன்பத்திற்கு இணையில்லை. "ஆராத இன்பம் அருளும் மலை" ஈசன். சிவனுடைய விரதங்களிலே மிகவும் சிறந்தவை சிவராத்திரி, சோமவாரம், பிரதோஷம் சிவனுக்குகந்த இராத்திரி சிவ ராத்திரி. சிவபுராணம் தினம் படிக்க வேண்டும். சிவபுராணத்திற்கு நிகராக ஒன்றுமில்லை. எம்மைக் காக்கவல்லது சிவபுராணம் என்ற நம்பிக்கையோடு ஓதிவர சிந்தையில் தெளிவு தானே வரும். சீவன், சிவனென்ற நிலையில் பேரின்பமுண்டாகும்.

சிவாயநம என்று சிந்திப்போருக்கு அபாயம் ஒரு நாளுமில்லை. "நற்றுணை யாவது நமச்சிவாயவே". "வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே" "நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே". "நானேயோ தவஞ் செய்தேன் சிவாய நம வெனப் பெற்றேன்".

இரு வினைகளால் கட்டுண்டு பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து கிடக்கின்றோம். இக்கடலினின்றும் கரையேறத்தக்க தோணி திருவைந்தெழுத்தேயாகும். நமசிவாய திருவைந்தெழுத்து மந்திரத்தைப் பற்றிப் பாவக் கடலைக் கடக்க முயல்வோமாக.

அண்டசராசரங்களையும் படைத்தலும், காத்தலும், அழித்தலும், மறைத்தலும், அருளலும் இறைவனது இடையறாத திருவிளையாடல்கள். ஐந்தொழில் புரியும் அம்பலவாணனுடன், அகிலாண்ட கோடி, பிரம்மாண்ட நாயகியாகிய உலகமாதா ஆன்மாக்களுக்கு அருள்புரிய அன்பே உருவாகக் காத்திருக்கின்றாள். ஜகன்மாதாவாகிய ஆதி பராசக்தி கிரியாசக்தி, இச்சாசக்தி, ஞானா சக்தி என மூன்றுவித தேவிகளாகப் பிரபஞ்சம் முழுவதற்கும் அருள்பாலிக்கின்றாள். சக்தியில்லாவிட்டால் பக்தியுமில்லை. முத்தியுமில்லை எல்லாவற்றிலும் நிறைந்த சக்தி. எல்லாவற்றையும் கடந்த சக்தி. மெய்ப்பொருளான அன்னை மாதேவி கருணைக் கடலாக நம்மையெல்லாம் காத்து ரட்சிக்கிறாள். ஆன்மா இருளகல சக்தி வழிபாடு அவசியம். சக்தி

என்பது, தடையிலா ஞானமாகும். ஒளி பொருந்திய அம்பிகையின் ஞானப்பார்வை நம்மேல் பட இருள் அகலும், தீமைகள் ஒழிந்து, எல்லா வெற்றிகளையும், மங்களங் களையும் அளிக்கும்படி வேண்டி அருளாளர் களுக்குக் கிடைத்த முத்திப்பேறு கிடைக்க அம்பாளைத் துதிப்போமாக.

அம்மையப்பனை, சிவபெருமானை அடைய விரும்புவோர், முதலில் ஆதிபராசக்தி யாகிய உமையம்மையை வழிபட்டு, பின்னர் அப்பனை அடைதல் வேண்டும். "அருளது சக்தியாகும் அரன் தனக்கு" என்கிறது சிவ ஞானசித்தி. கருணைக் கடலான அன்னை தனம், கல்வி, தளர்வறியாமனம், தெய்வவடி வம், வஞ்சமில்லா இனமும், நல்லன எல்லா மும் தருகின்ற தாயினும் சிறந்த தயை உடையவளாக அருள்பாலிக்கின்றாள். சிவம் வேறு சக்தி வேறு அல்ல. பாலும், வெண் மையும்போல், நெருப்பும் ஒளியும்போல் ஒன்றின் அம்சமாய் மற்றொன்று விளங்குவதே சிவமும் சக்தியுமாகும். அண்டங்களனைத் தும் சிவசக்தி மயமானது. ஜகன்மாதா வாகிய அன்னை அன்னபூரணியாக வயிற் றுக்கு உணவையும், வாழ்க்கைக்கு செல்வங் களையும், ஞானத்தையும் தருபவள். ஜனன மரணச் சுழலிலிருந்து விடுவிப்பவளும் அவளே. அர்த்தநாரீசுவர ஸ்வரூபத்திலே விளங்கும் அம்மையப்பனை நித்தமும் நினைந்துருகி வழிபட்டு, பிறவித் துயரிலிருந்து விடுபட்டு இறை தாளினை அடைவோமாக.

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார் தான் வருவார்"

அம்பாளோடு சேர்த்தே ஈஸ்வரனைத் தியானிக்க வேண்டும். பரமேஸ்வரனுக்கு எத்தனையோ நாமங்கள் இருந்தாலும், "நம: பார்வதிபதயே" என்று சொல்ல "ஹர ஹர மகாதேவா" என்கிறோம். மகாவிஷ்ணுவுக்கு எத்தனையோ நாமங்கள் இருந்தாலும் "லட்சமீகாந்த ஸ்மரணம்" என்று சொல்ல, "கோவிந்தா, கோவிந்தா" என்று கோஷிக்கிறோம். இரு அவதாரக் குழந்தைகளே இந்த நாமங்கள் எல்லோரிடமும் தழைத்தோங்க ஆக்ஞை போட்டனர். ஒருவர் முருகனாகப் போற்றப்படும் திருஞானசம்பந்தப் பெருமான். "அரன் நாமமே சூழ்க" என்கிறார். ஹர ஹர என்று எங்கு பார்த்தாலும் சனங்கள் கோஷிக்க வேண்டும். கோவிந்த நாமத்தைச் சொன்ன குழந்தை ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியார்களே. "பஜ கோவிந்தம், பஜ கோவிந்தம்" என்று பாடினார். பரமேசுவர அவதாரமான குழந்தையின் கட்டளைப்படி "கோவிந்தா, கோவிந்தா" என்று கோஷிக்கிறோம்.

"நம: பார்வதீபதயே"
"ஹர ஹர மகாதேவா"

அன்னையப்பனும் நீயென மகிழ்ந்தே
அகங்குளிர்ந்து நான் ஆதரித்திருந்தேன்
என்னையிப்படி இடர் கொள விடுத்தால்
என் செய்கேன் இதையாரொடு புகல்வேன்

பொன்னை யொத்த நின் அடித்துணை மலரைப்
போற்றுவார்க்கு நீ புரிகுவது இதுவோ
உன்னை எப்படியாயினும் மறவேன்
உனையலா எனை உடையவர் எவரே.

(திருவருட்பா)

தடித்தவோர் மகனைத் தந்தையீண்டடித்தால் தாயுடனணைப்பள்
தாயடித்தால் பிடித்தொரு தந்தையணைப்பன் இங்கெனக்குப் பேசிய தந்தையும் தாயும்
பொடித்திருமேனி அம்பலத்தாடும் புனித நீ ஆதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும் அம்மை அப்பாஇனி ஆற்றேன்.

*வீழ்வதல்ல தோல்வி, விழுந்த இடத்திலேயே கிடப்பதுதான் தோல்வி.*

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 09. ஆனந்த பரவசம்

87 அடியேன் அல்லேன் கொல்லோ தானெனை ஆட்கொண்டிலை கொல்லோ
அடியா ரானார் எல்லாரும் வந்துன் தாள் சேர்ந்தார்
செடிசேர் உடலம் இதுநீக்க மாட்டேன் எங்கள் சிவலோகா
கடியேன் உன்னைக் கண்ணாரக் காணுமாறு காணேனே.

**ப-ரை:**

எங்கள் சிவலோகா- எங்கள் சிவலோகநாதனே, அடியார் ஆனார் எல்லாரும் வந்து உன் தாள் சேர்ந்தார்- உன் மெய்யடியாராயினார் எல்லோரும் நின்பால் வந்து நின் திருவடி நிழலை அடைந்தனர். செடி சேர் உடலம் இது நீக்கமாட்டேன்- துன்பத்தினைத் தருகின்ற உடலமாகிய இதனை ஒழிக்கவும் மாட்டேன்; கடியேன்- கசிவில்லாத கடின மனத்தையுடைய வனாகிய யான்; உன்னை கண் ஆர காணும் ஆறு காணேன்- நிலை பேறான பேரின்பத்தினைத் தரும் நின்னைக் கண் குளிரக் காணும் வழியையும் கண்டிலேன்; ஆதலால், அடியேன் அல்லேன் கொல்லோ- யான் நினக்கு அடியேன் அல்லேனோ? தான் என்னை ஆட்கொண்டிலை கொல்லோ- நீதான் என்னை ஆட்கொண்டதில்லையோ?

எங்கள் சிவலோகா, உன் மெய்யடியாராயினார் எல்லாரும் வந்து உன் திருவடி நிழலை அடைந்தனர். செடிசேர் உடலமாகிய இதனை ஒழிக்கவும் மாட்டேன்; கடியவனாகிய யான் உன்னைக் கண்ணாரக் காணும் வழியையும் கண்டிலேன்; ஆதலால் யான் நினக்கு அடியேன் அல்லேனோ? நீதான் என்னை ஆட்கொண்டிலை கொல்லோ? ஆட்கொண்டதுண்டாயின் நின்னைக் காணுமாறு காட்டியருள்க என்பதாம்.

இறைவனுடன் போந்த மெய்யடியார்கள் எல்லாரும் இறைவன் தாளைச்சேர, தாம் அங்ஙனம் சேராமைபற்றி, அடியேனல்லேன் கொல்லோதானெனை ஆண்டிலை கொல்லோ என்றருளிச் செய்வாராயினர். "அரத்த மேனியாய் அருள் செய் அன்பரும் நீயும் அங்கெழுந்தருளி இங்கெனை இருத்தினாய் முறையோ?" (சத93) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க. கொல் இரண்டும் அசைநிலை. கொண்டது என்னும் முற்று வினை கொண்டு எனச் செய்யுள் விகாரத்தால் திரிந்து நின்றது. அடியாரானார் என்றது இறைவனுடன் போந்த மெய்யடியார்களை. உன் தாள் சேர்ந்தார். அவர்கள் நின் திருவடி நிழலையடைந்தனர்.

*வாய்ச் சொல்லைவிட செயலின் குரலே உரக்க ஒலிக்கும்.*

"அன்றுடன் சென்ற அருள்பெறு மடியவர்
ஒன்ற ஒன்ற உடன் கலந் தருளியும்
.......................................................
பாதம் எய்தினர் பாதம் எய்தவும்"

கீர்த்தி 130-7

என அடிகள் அருளியவாறுங் காண்க.

அடியாரானார் நின் தாள் சேர்ந்தார், உடலம் இது நீங்க மாட்டேன் என்றது நின் மெய்யடியாராயினார் நின் திருவடி நிழலை அடைந்தனர்; யானோ இவ்வுடலோடிருந்து வருந்துவேனாயினேன்; இதனை ஒழிக்கவும் மாட்டேனாயினேன் என்றவாறு.

"அடியார் சிலருன் அருள் பெற்றார் ஆர்வம் கூர யான் அவமே
முடையார் பிணத்தின் முடிவின்றி முனிவால் அடியேன் மூக்கின்றேன்"

(பிராத்த 2)

"அருளா ரமுதப் பெருங்கடல்வாய் அடியா ரெல்லாம் புக்கழுந்த
இருளா ராக்கை இது பொறுத்தே எய்தேன் கண்டாய் எம்மானே"

(பிராத்த 3)

செடி- பாவம். "செடியேறு தீமைகள் எத்தனையும் செய்திடினும்" (குலாப் 2) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. "தீவினை மறமே செடியே யகமே துரிதங் கலுடம் பாவமாமே" (7-140) எனப் பிங்கலந்தை கூறுதலுங் காண்க. செடி ஈண்டுப் பாவத்தின் பயனாய துன்பத்தை உணர்த்தியது. உடலம் துன்பத்தினைப் பயத்தலின் செடி சேருடல் என்றார். "செடிசேருடலைச் சிதையாதது எத்துக்கு" (குழைத் 2) என வருதலும் காண்க. உடலம்- உடல், "வம்பு பழுத்துடலம் மாண்டிங்ஙன் போகாமே" (குலாப் 6) என வருதலுங் காண்க.

சிவலோகத்தை அடைதற்குத் தடையாயுள்ள செடி சேருடலை நீக்கக் கருதியும் அதனை நீக்கமாட்டாமையின் "செடி சேருடலம் இது நீக்கமாட்டேன்" என்றார். "செடி சேருடலைச் செலநீக்கிச் சிவலோகத்தே நமைவைப்பான்" (யாத் 4) என்பதனால் சிவலோகத்தை அடைதற்கு உடலம் தடையாதலறிக. உடலை நீக்க மாட்டேன் என்றார், உடலை நீக்கின் அது தற்கொலையாகிய பாவத்தைத் தருவதுடன் கோலமார் தருபொதுவினில் வருகென்ற கட்டளையைக் கடந்த தீமையையும் தருதல் பற்றியென்க. நீக்கவும் என்ற உம்மை தொக்கது.

கடியேன்- உருக்கமில்லாத நெஞ்சுடையேன், "கல்வகை மனத்தேன் (சத 48). கல் நேரனைய மனக்கடையாய" (ஆனந்த 1) என வருவன காண்க. கடியேன் என்று அடிகள் தம்மைக் கூறுதலை "கடியேனுடைய கடுவினையைக் களைந்து" (பிரார்த்த 2) என்புழியும் காண்க.

கண்ணாரக் காணல்- கண்குளிரக் காணல். என்றது நன்றாகக் காணல். ஞானாசாரி யனாக எழுந்தருளி வந்த திருக்கோலத்தை மீண்டும் கண்ணாரக் காண்டற்குரிய நெறியையும் அறிந்திலேன் என்பார். "காணுமாறு காணேன்" என்றார். காணுமாறும் என்னும் உம்மை தொக்கது. காட்டியருளுதி என அவாய் நிலையால் வருவித்து முடிக்க. இங்ஙனம் காட்டியருளுதி என வேண்டியருளுதல் இறைவன் கட்டளையைக் கடந்ததாகாதோவெனின் இறைவனைப் பிரிந்த ஆற்றாமை மிகுதியால் வேண்டிக்கொள்ளப்பட்டதாகலின் ஆகாதென்க.

இதன்கண், கண்ணாரக் காணுமாறு காணேன் காட்டியருளுதி என வேண்டிக் கொள்ளுதலால் ஆனந்த பரவசம் என்னும் ஒன்பதாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க.

**88 காணு மாறு காணேன் உன்னை அந்நாட் கண்டேனும்**
**பாணே பேசி யென்றென்னைப் படுத்ததென்ன பரஞ்சோதி**
**ஆணே பெண்ணே ஆரமுதே அத்தா செத்தே போயினேன்**
**ஏணாண் இல்லா நாயினேன் என்கொண் டெழுகேன் எம்மானே.**

**ப-ரை:**

பரஞ்சோதி- மேலான ஒளிப்பிழம்பாக உள்ளவனே; ஆணே, பெண்ணே ஆர் அமுதே- ஆணாகவும், பெண்ணாகவும் அரிய அமுதமாகவும் உள்ளவனே; அத்தா- எங்கள் தந்தையே; எம்மானே- எங்கள் தலைவனே; உன்னை அந்நாள் கண்டேனும்- உன்னை ஆட்கொண்டருளிய அந்நாளில் காணப்பெற்றும்; காணும் ஆறு காணேன்- இப்பொழுது உன்னைக் காணும் நெறியைக் கண்டிலேன், பாணே பேசி என்தன்னை படுத்தது என்ன- இச்சக வார்த்தையைப் பேசி என்னை அகப்படுத்திக் கொண்டது யாது பயன் கருதி; அத்தா செத்தே போயினேன்- எங்கள் தந்தையே நின் பிரிவைப் பொறாது இறந்து போகும் நிலையிலுள்ளேன்; ஏண் நாண் இல்லா நாயினேன்- வலிமையும் நாணமும் இல்லாத நாயினேன்; என் கொண்டு எழுகேன்- எதனைப் பற்றுக்கோடாகக் கொண்டு உய்ந்தெழுவேன்.

பரஞ்சோதி, ஆணாகவும் பெண்ணாகவும் அரிய அமுதமாகவும் உள்ளவனே எம்மானே, ஆட்கொண்ட நாளில் உன்னைக் காணப்பெற்றும் இப்பொழுது உன்னைக் காணும் நெறியைக் கண்டிலேன், பாணே பேசி என்னை அகப்படுத்திக் கொண்டது யாது பயன் கருதி? அத்தா, நின் பிரிவைப் பொறாது செத்துப் போகும் நிலையிலுள்ளேன்; வலியும் நாணமும் இல்லாத நாயினேன் எதனைப் பற்றுக் கோடாகக் கொண்டு எழுவேன்; யான் பற்றாகப் பற்றி எழுதற்கு நின் அருளன்றிப் பிறிதொன்றுமில்லை என்பதாம்.

உன்னை அந்நாட் கண்டேனும் காணும் ஆறுகாணேன் என்றது திருப்பெருந்துறையிற் குருந்த மரநிழலில் ஆட்கொண்டருளிய அந்நாளில் உனதருளால் உன்னைக் காணப்பெற்றும் இப்பொழுது காணும் நெறியைக் காணாதவனாயினேன், என்றவாறு. அந்நாட் கண்டமை "கண்ணால் யானுங் கண்டேன் காண்க" (திருவண்ட 581) "கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன் கண்கள் களிகூர", "திகழா நின்ற திருமேனி காட்டி என்னைப் பணி கொண்டாய்" (குழைத்த 9:10) என வருவனவற்றாலும் அறிக. காணுமாறு காணாமை "கடியேன் உன்னைக் கண்ணாரக் காணுமாறு காணே" (சத 83) என்பதனாலுமறிக. காண்பதற்கும் இறையருள் வேண்டுமென்பது "காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே" (தே. நாவு 309:3) என்னும் அப்பர் அருண்மொழியானுமறிக. கண்டேனும்- உம்மை உயர்வு சிறப்பு.

பாண்- இச்சக வார்த்தை. பாண் குலாய்ப் படுக்கல் வேண்டா (சீவக 2515) இனி, பாண்- கள்; அது ஆகுபெயராய் மயக்கந்தரும் சொற்களை உணர்த்தியது என்பாருமுளர். படுத்தது- அகப்படுத்திக் கொண்டது என்றது அடிமை கொண்டது. என் என்றது யாது பயன் கருதி "யாது நீ பெற்ற தொன்றென் பால்" (கோயிற் 10) என அடிகள் அருளியவாறுங் காண்க.

*எந்த இலட்சியமும் இல்லாதது எண்ணெய் இல்லாத விளக்குக்குச் சமம்.*

நினக்கு என்னால் யாதும் பயனில்லை என்பது கூறவேண்டா... எனக்குப் பயன் கருதியே என்னை அகப்படுத்திக் கொண்டாயாயின் இப்போது உன்னைக் காணும் நெறியறியாதவனாய் இருத்தலால் எனக்கும் பயனின்றாகின்றதே, காணுமாறு காட்டியருள் என்பது குறிப்பு. பரஞ் சோதி- எல்லாப் பொருட்கும் அப்பாலாகியவொளி (திருக்கோவை 131 பேர்)

எல்லாவுயிர்க்கும் தந்தையாந் தன்மையும் தாயாந் தன்மையும் உடையவன் இறை வனாதலின் "ஆணே, பெண்ணே" என்றார். இனி ஒரே திருமேனியில் இவ்விருவடிவும் உண்மை பற்றி இங்ஙனம் கூறினார் எனினுமமையும். "மாதுற்ற மேனி" (கோவை 174) ஆரமுதேயென்றார் கழிபெருஞ் சுவை யோடுறிதி பயத்தலுடைமையான்.

நின் பிரிவாற்றாது செத்தே போவேன் என்பதைத் துணிவு பற்றிப் போயினேன் என இறந்த காலத்தாற் கூறினார். ஏண்- நின்னைக் காணும் வலி. ஏண்- வலி என்னும் பொருட்டாதல் "ஏணிலான் சேவகமும்" (சிறு பஞ்ச 12) என்புழியுங் காண்க. ஏண்- திண்மை (சீவக 770 நச்.) நான்- நின்னைக் காணமுடியாதபோது இறந்துபட வேண்டிய நாணம்.

"பூணொ ணாததொ ரன்பு பூண்டு பொருந்தி நாடொறும் போற்றவும்,
நாணொ ணாததொர் நாண மெய்தி"

(திருக்கழு 4)

என வருதலுங் காண்க. என் கொண்டெழுகேன் என்றது எதனைப் பற்றுக் கோடாகக் கொண்டு உய்ந்தெழுவேன்? யான் பற்றுக் கோடாகப் பற்றி எழுவதற்கு நின்னருளன்றிப் பிறிதொன்றுமில்லை என்றவாறு.

இதன்கண், "காணுமாறு காணேன்" என்பதாலும் "என் கொண்டெழுகேன்" என்பதாலும் நின்னருளால் காணுமாறு காட்டியருள வேண்டுமென்பது பெறப்படுதலின் ஆனந்த பரவசம் என்னும் ஒன்பதாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 84. (தொடரும்...

## நீங்கும் வினை!

**பல்லவி**

அற்புதங்கள் செய்கின்ற கற்பக விநாயகனின்
பொற் பதங்களே என்றும் எனக்குத் தஞ்சம்! (அற்பு)

**அனுபல்லவி**

வற்றா அருள் சொரியும் வள்ளலை தினந்தினமும்
வணங்கிட மறக்காது என் நெஞ்சம்! (அற்பு)

**சரணம்**

கணங்களின் தலைவனை கணபதியை நினைத்தால்
காரியங்கள் யாவையுமே கைகூடும்!
குணநிதி அவனை நிதம் கும்பிட்டுத் தொழுவார்தம்
குறைகளெலாம் தீர நல் வழி பிறக்கும்!
(அற்பு)

வெற்றி புனைந்த விழி மூன்றுடை ஐங்கரனை,
வேதத்தின் பொருளாக விளங்கிடும் வித்தகனை,
ஒற்றை மருப்புடைய ஓங்கார நாயகனை
ஒருபோழ்தும் மறவாது வணங்கிட நீங்கும் வினை! (அற்பு)

-கி. குலசேகரன் -

# ஆயுளை அதிகரிக்கும் செந்தூரம்

– **செல்வி ச. வர்ணி** அவர்கள் –

ஸ்ரீராமதாசன் ஒருநாள் தர்ப்பாருக்குச் செல்ல இருக்கும் ஸ்ரீ ராமனை அலங்கரித்துக் கொண்டிருந்தார். ஆபரணங்களையும், வஸ்து ஆபரணங்களையும் அன்புடன் எடுத்து அலங்காரம் செய்துகொண்டிருந்தார். இராமனுடைய அலங்காரங்கள் முடியும் தறுவாயில் ஓரக்கண்ணால் அன்னை சீதையைப் பார்த்தார். இராமரிடம் விடைபெற்றுக்கொண்டு அன்னை சீதையிடம் சென்றார்.

அன்னை சீதையோ தர்பார் செல்ல ஆயத்தமாகி இறுதியில் தனது நெற்றியின் உச்சியில் திலகத்தை இட்டார். இச் செயலைப் பார்த்துக் கொண்டிருந்த ஹனுமான், "மாதா! தங்களிடம் ஒரு வினா எழுப்பலாமா?" என்று வினவ, "மகனே! என்னிடம் வினா எழுப்ப ஏன் இவ்வளவு தயக்கம் நீ விரும்பிய வினாவினைக் கேள்" என்றார். "தாயே, தமது நெற்றியில் சிருங்காரமாக ஏற்கும் அந்தச் சூரணம் என்ன?" என்றான். இதனைக் கேட்ட சீதை சிரிப்புடன் கலந்த ஆச்சரியத்தில், "என்ன! இது சூரணம் அல்ல மகனே இதன் பெயர் சித்திராங்கம்" என்றார். ஹனுமனோ, "இச் சித்திராங்கத்தை தாம் ஏற்கக் காரணம் என்ன?" என வினவினான். சீதை, "இதனை நான் அணிந்து கொண்டால் என் அகம் கொண்டவரின் ஆயுள் அதிகரிக்கும் அத்தோடு என்னவர் பரவசம் அடைவார். இதனைக் கண்டு மனமகிழ்வடைவார். என் ஜனனத்திற்குரிய பரிபூரண நிலையை இதனை சரீரத்தில் அணிந்ததன் பிற்பாடே அடைந்தேன்" என்று கூறிவிட்டு தர்ப்பாருக்குச் சென்றுவிட்டார்.

ஹனுமனோ தாய் சீதாவின் அலங்கார அறையினைவிட்டு அகலவில்லை. அன்னையின் செந்தூரத்தைக் கையில் எடுத்தவண்ணம் களஞ்சியசாலையினை நோக்கி நடந்தார். அங்கே கையிலிருக்கும் செந்தூரத்தை ஒவ்வொரு பாத்திரமாகத் திறந்து ஒப்பிட்டுப் பார்த்தார். இறுதியில் செந்தூரத்தைக் கண்டுவிட்டார். சந்தோஷம் மேலிட அதனை அள்ளி தன் சரீரத்தில் பூசினார். "அன்னையின் சரீரத்தோடு இணையும் இந்த வஸ்து ஏன் என் சரீரத்தோடு இணைய மறுக்கிறது? சாமானிய வஸ்துவாகத்தானே தென்படுகிறது" என வருத்தமுற்றார். பின்பு களஞ்சியசாலையில் நெய்யினைக் கண்டார். நெய்யில் சித்திராங்கத்தைக் கலக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டார்.

அங்கோ! தர்ப்பாரில் அமைதி நிலவுகின்றது. ஸ்ரீராமர் சீதையை நோக்கி, "ஏன் ஹனுமன் வரவு தாமதமாகின்றது ஒருபோதும் இவ்வாறில்லையே" என்று வினவ, அன்னையோ, "அவன் நமது அறையில் இருக்கிறான். இன்று என்றும் இல்லாததுபோல சித்திராங்க சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறான்" என்றார். "என்ன சித்திராங்க சிந்தனையா?" "ஆம் சுவாமி. என்னிடம் இன்று ஹனுமன் சித்திராங்கத்தைப்பற்றி வினவினான்" என்று கூறி முடிக்க முன்பே சபையில் பாரிய சிரிப்பொலிகள் சிதறின. என்னவென்று இராமரும் சீதையும் சபையை நோக்க, ஹனுமன் செந்நிறமாக உருமாறி உச்சி முதல் பாதம் வரை செந்தூரம் பூசி கம்பீரமாக, நிறைந்த குதூகலத்தோடு சிரிப்போரை அலட்சியம் செய்யாது நடந்து வந்தான்.

இராமர், ஹனுமனை நோக்கி "ஹனுமான் உனது இக்கோலத்திற்குக் காரணம்?"

என்று வினவ, "பிரபு இது என் கோலத்தினால் உதித்ததல்ல, மாதாவால் அளிக்கப்பட்ட ஞானம்" என்றான். "சீதா உன்னிடம் என்ன கூறினாள்?" என ராமன் கேட்க, "இச் சித்திராங்கத்தை தாம் கண்டால் உள்ளம் மகிழ்வடைவீர்கள் என்றும் அதனால் தமது ஆயுளும் விருத்தியடையும் என்று கூறினார்" என்றான் ஹனுமன். ஆதலால், நானும் சித்திராங்கத்தை அணிந்தேன். அதுவும் ஒரு சிறிய திலகம் தமக்கு மகிழ்வையும் ஆயுள் விருத்தியையும் தரும் என்றால், தினமும் நான் உடல் முழுவதும் இதனை அணிந்தால் அளவில்லா உவகையைத் தாம் அடைவீர்கள். அத்தோடு தமது ஆயுளும் நன்கு விருத்தியடையும் என்றான் ஹனுமன். இராமரோ ஹனுமனை கட்டித் தழுவி, "என் பக்தர்களில் சிரேஷ்டன் நீ! பக்த சிரோன் மணி! உன் பக்தியினால் சேவைக்குப் புதிய அர்த்தம் கற்பித்தாய். உலகில் பக்தியின் சர்ச்சைகள் எழும்போதெல்லாம் உன் பெயரையே அவசியம் ஸ்மரனை செய்வார்கள். இன்று செவ்வாய்க்குரிய நாளாகையால் நான் உனக்கு ஆசி வழங்குகின்றேன். எவன் ஒருவன் செவ்வாய்க்கிழமையில் வாயு மைந்தனுக்கு செந்தூர அபிஷேகம் செய்கின்றானோ அல்லது அச் செயலுக்குத் துணை செய்வாரோ அவர்களது மனோரதங்கள் பூர்த்தியாவதோடு ஆயுளும் அதிகரிக்கும். அவர்கள் அனுமனுக்கு அன்புக்குரியவர்கள் ஆவதோடு என் இதயத்திற்குப் பிரியமானவர்களாகவும் ஆவர். இன்றிலிருந்து ஹனுமானை "செந்தூரவாசன்" எனவும் அழைக்கட்டும் என்று கூறினார்.

எனவே இப்பூவுலகில் சிரஞ்சீவியாய் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஹனுமன் ஆயுளுக்கு பெயர்போனவன். உங்கள் மனோரதங்கள் பூர்த்தியாக ஆயுள் விருத்தி அடைய செவ்வாயில் செந்தூர அர்ச்சனை, அபிஷேகங்கள் செய்யுங்கள். நலமோடு வாழுங்கள்.

## ஒரு வளையல் ஓசை எழுப்பாது

காட்டில் தவம் செய்துகொண்டிருந்த துறவி ஒருவரை வணங்கினான் அரசன். கண் விழித்த துறவி அவனை வாழ்த்தினார். துறவி இளைஞராக இருப்பதைக் கண்டு வியப்பு அடைந்தான் அரசன். "இந்த இளம் வயதிலேயே தன்னந் தனியாகத் தவம் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது" என்று கேட்டான்.

"அரசே! இளம்பெண் ஒருத்திதான் எனக்கு இந்த ஞானத்தை வழங்கினாள்" என்ற துறவி, "ஓர் ஊரில் இளம்பெண் ஒருத்திக்குத் திருமணப் பேச்சு நடந்தது. யார் மணமகன் என்பதும் உறுதியாயிற்று. அந்த மணமகன் ஒருநாள் அவள் வீட்டிற்கு வந்தான். அப்பொழுது அவளுடைய பெற்றோர்கள் வீட்டில் இல்லை. வெளியூர் சென்றிருந்தார்கள். அவனை வரவேற்று அவள் கூடத்தில் தங்க வைத்தாள். உணவு தயாரிக்கச் சமையல் அறைக்குச் சென்றாள்.

நெல்லைக் குத்தி அரிசியாக்க வேண்டியிருந்தது. உரலில் நெல்லைப் போட்ட அவள் உலக்கையால் குத்தத் தொடங்கினாள். அவள் கையில் அணிந்திருந்த வளையல்கள் ஒன்றோடு ஒன்று மோதி ஓசை எழுப்பின. தான் வேலை செய்வதை அவர் அறிவாரே என்று நாணப்பட்டாள் அவள். என்ன செய்வது என்று சிந்தித்தாள். தன் கையிலிருந்த வளையல்களில் ஒன்றைத் தவிர மற்றவற்றை உடைத்து விட்டாள். அதன்பிறகு எந்த ஓசையும் எழாமல் தன் வேலைகளைச் செய்து முடித்தாள்.

இதைக் கேள்விப்பட்ட நான், ஞானி எப்பொழுதும் தனிமையில் இருக்க வேண்டும் என்று புரிந்துகொண்டேன். தனிமையில் இருந்து தவம் செய்யத் தொடங்கினேன்" என்றார். அவரை வணங்கிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான் அரசன்.

*ஆலோசனைக்குப் பின்னரே எல்லாச் செயல்களையும் தொடங்க வேண்டும்.*

# ஆனந்தக் கிருஷ்ணனின் அற்புத லீலைகள்

(தொடர்ச்சி...

– **திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்** அவர்கள் –

## கோவிந்த நாமம்

தேவேந்திரரும், காமதேனுவும் கிருஷ்ணரிடம் வந்தார்கள். தேவேந்திரர் தம் திருமுடி பதிய கிருஷ்ணரின் திருவடியில் வணங்கினார். மன்னிப்பும் கோரினார்.



பகவான், "தேவேந்திரா, உனது கர்வத்தை அடக்குவதற்காகவே யாகத்தை நிறுத்தினேன். இதன்மூலம் உனக்கு அனுக்ரகத்தையே செய்துள்ளேன். இனி கர்வமற்று உனது காரியத்தை நடத்து அதனால் நலம் பெறுவாய்" என்றார். காமதேனு தன் பிள்ளைகளுடன் கிருஷ்ணரை நமஸ்கரித்து "பகவானே, பிரம்மதேவர் எங்களை அனுப்பியுள்ளார். தங்களை எங்கள் இந்திரனாக நாங்கள் அபிஷேகம் செய்யப் போகிறோம்" என்று தமது பாலால் கிருஷ்ணருக்கு அபிஷேகம் செய்தது. தேவேந்திரரும் தேவ ரிஷிகளுடன் கூடி ஐராவத யானை தன் துதிக்கையால் கொணர்ந்த ஆகாச கங்கையால் அபிஷேகம் செய்தார். பின் "கோவிந்தன்" என்ற நாமம் சூட்டினார். அப்போது நாரதர், தும்புரு, கந்தர்வர்கள் ஹரியின் புகழைப் பாடினார்கள். அப்சரப் பெண்கள் ஆடினார்கள். தேவர்கள் துதித்து மலர்களைப் பொழிந்தார்கள்.

அச்சமயம் மூவுலகங்களுமே ஆனந்தமடைந்தன. பசுக்களிடமிருந்து பால் பெருகி பூமி நனைந்தது. மரங்களிலிருந்து தேன் பெருகியது. பயிர்கள் உண்டாயின. மலைகள் உள்ளிருந்த இரத்தினங்களையெல்லாம் வெளியே தெரியும்படி கொணர்ந்தன. கோவிந்த பட்டாபிஷேகம் செய்ததும் விரோதிகளான பிராணிகளும் விரோதமின்றி இணைந்து இருந்தன. தேவேந்திரரும் காமதேனுவும், மற்றவர்களும் விடை பெற்றுச் சென்றார்கள். உங்கள் குழந்தைகளுக்குப் பகவானின் நாமத்தை இடுங்கள். அவர்களை நீங்கள் அழைக்கும்போது பகவான் தன்னையே அழைப்பதாக நினைக்கிறான்.

*மேன்மையை நாடிச் செல்பவனுக்கு சிறு குறைகளும் இருக்காது.*

அப்பெயர் தாங்கிய குழந்தைகளும், பெற்றோர்களும் நலமடைவார்கள் என்கிறது திருமொழி. கோவிந்தன் என்று பெயரிட்டால் நரகமில்லை.

**மலமுடையூத்தையில் தோன்றிற்றோர் மலவூத்தையை**
**மலமுடையூத்தையின் பெயரிட்டால் மறுமைக்கில்லை**
**குலமுடைக் கோவிந்தா கோவிந்தா என்றழைத்தக்கால்**
**நலமுடை நாரணன் தம்மன்னை நரகம்புகாள்**

கோடி புண்ணியம் தரவல்லது கோவிந்தன் எனும் திருநாமம். பூமியைத் தாங்குபவன், பசுக்களுக்குத் தலைவன், வேத வாக்கியங்களால் அடையப்படுபவன் என்றெல்லாம் இப் பெயருக்குப் பொருள் கூறுவர். ஆதி சங்கரர், "பஜகோவிந்தம் பாடு. அப்போதுதான் மரணத்தை வெல்ல முடியும். மற்ற கல்வியாவும் இறுதிக் காலத்தில் துணை செய்யாது" என்கிறார்.

**பஜகோவிந்தம் கோவிந்தம் பஜகோவிந்தம் கோவிந்தம்**
**பஜகோவிந்தம் கோவிந்தம் பஜகோவிந்தம் கோவிந்தம்**
**கோவிந்தா கோவிந்தா கோவிந்தா கோவிந்தா**
**ஜனன மரண பிணியைத் தீர்க்கும் கோவிந்தனைப் பாடுவோம்.**

**(பஜகோவிந்தம்)**

**கீதை எனும் அமுதம் தந்த ஸ்ரீ கிருஷ்ணனைப் பாடுவோம்**
**மதுராபதியினை மதுரமிக்க ஹரியினைப் பாடுவோம்**
**குருவாயூரின் குழந்தையை பால கோபாலனைப் பாடுவோம்**
**அரு மறைகள் போற்றும் ஆதிமூலத்தைப் பாடுவோம்.**

**(பஜகோவிந்தம்)**

**குழலூதிக் கன்றுகள் மேய்த்த கண்ணனைப் பாடுவோம்**
**கோவர்த்தன கிரிதாரியைக் கோவிந்தனைப் பாடுவோம்**
**கோபியர்கள் இன்னுயிரை கோலோக பிருந்தாவன கிருஷ்ணனைப் பாடுவோம்**
**கலியுகத்தில் கல்கியின் வடிவில் வரும் பரம்பொருளைப் பாடுவோம்.**

**(பஜகோவிந்தம்)**

## நந்தகோபர் கண்ட லோகம்

ஒரு சமயம் ஏகாதசி விரதமிருந்த நந்தகோபர் துவாதசியன்று நீராடுவதற்காக யமுனையில் இறங்கினார். அப்போது விடியவில்லை. பிரம்ம முகூர்த்தத்திற்கு முன்பான அசுரநேரம். உடனே வருணருடைய வேலைக்காரனான அசுரன் ஒருவன் அவரைப் பிடித்து வருணரிடம் சேர்த்தான்.

தண்ணீரில் இறங்கிய நந்தகோபர் வெகுநேரமாக வெளிவராததைப் பார்த்து, அவருக்கு ஆபத்து என கிருஷ்ணரிடம் தெரிவித்தார்கள். உடனே கிருஷ்ணர் வருணலோகத்திற்குப் போனார். கிருஷ்ண தரிசனம் கிட்டியதால் பரமானந்தமடைந்த வருணதேவர், கிருஷ்ணரை முறைப்படி பூஜித்துத் துதித்தார். "பிரபுவே, இன்றுதான் என் விருப்பங்கள் நிறைவேறின. மூடனான என் வேலையாள் தங்கள் தந்தையைக் கொண்டுவந்து விட்டான். அக் குற்றத்தை மன்னியுங்கள். தங்கள் தந்தையை அழைத்துச் செல்லுங்கள். பகவானே, எனக்கும்

*எல்லா ஒழுக்க நெறிகளுக்கும் பணிவுதான் உறுதியான அடித்தளமாக இருக்கிறது.*

தங்கள் அனுக்கிரகத்தையளியுங்கள்" என்று பிரார்த்தித்து நந்தகோபரை கிருஷ்ணரிடம் ஒப்படைத்தார்.

திரும்பி வந்த நந்தகோபர் வருணலோகத்துச் செல்வத்தையும் வருணதேவர் கிருஷ் ணருக்குச் செய்த பூஜைகளையும் ஆச்சரியத்தோடு மற்றவர்களிடம் கூறினார். அதனைக் கேட்ட கோபர்களுக்கு கிருஷ்ணர் சாட்சாத் சர்வேஸ்வரனே, கிருஷ்ணனுடைய பிரம்ம சொருபத்தை நாம் பார்க்கமுடியுமா? என்ற நினைப்பு ஏற்பட்டது.

கிருஷ்ணருக்கு இவர்களுடைய விருப்பம் புரிந்தது. அதை நிறைவேற்ற அவர்களுக்கு சிறிதுநேரம் வைகுண்ட லோகத்தைக் காட்டினார். வைகுண்டத்தில் வேதங்களால் துதிக்கப் படுகின்ற கிருஷ்ணரைப் பார்த்து நந்தகோபரும், மற்றும் அனைவரும் பரமானந்தமடைந்தார்கள்.

## கோபிகைகளின் பிரேம பக்தி

கோகுலத்தில் செல்லப்பிள்ளையாக, கோபியர்கள் அனைவரின் பந்துவாக, நண்பனாக, கண்ணன் குழலூதி, ஆனிரை மேய்த்து, ஆடிப்பாடி அக மகிழ்ந்து வாழ்ந்த இளமைப் பருவ நாட்கள் அவை. கோபியருடன் ராஸ லீலைகள் புரிந்து மகிழ்ந்த இன்ப நாட்கள். ஸ்ரீ கிருஷ்ணன் நைஷ்டிகப் பிரம்மச்சாரியாக பதினாயிரம் கோபியர்களுடன் ஆடிப் பாடி ராஸ லீலை புரியும் கண்ணன், அவர்கள் ஒருவருடனும் ஈடுபாடு கொள்ளாமல், பற்றற்ற நிலையில், பரப்பிரம்மமாகவே இருக்கிறார். அவர் அன்பும், அருளும் அனைவர்க்கும் சொந்தம். பிருந்தாவனத்துப் பசுக்களும், கோபிகைகளும் அவர் கண்களுக்கு ஒன்றுதான்.



அவரை மற்றவர்கள் பிள்ளையாய், தந்தையாய், நண்பனாய், காதலனாய், குருவாய், தெய்வமாய்ப் பாவிப்பது அவரவர் மகிழ்ச்சிக்காகவே. அவன் தண்ணீரில் உள்ள தாமரை

*எப்போதும் அதிக தேவையை விரும்புவதைவிட குறைந்த தேவையை தேர்ந்தெடு.*

இலை. இராமனாக வனவாசத்திலே வாழ்ந்த போது, மகரிஷிகளும், தபஸிகளும், ஸ்ரீ ராமன் தங்களுடன் தங்கி வாழவேண்டுமென விரும் பினர். ராமனோ ஓரிடத்தில் தங்காமல் வனத் தில் திரிந்து கொண்டிருந்தான். முனிவர் களும், தபஸிகளும் பகவானின் அன்புக்காக வும், பிரேமைக்காகவும், ஆலிங்கனத்திற்காக வும் ஏங்கித் தவித்தனர். அவர்களின் தவத் தையும், கோரிக்கையையும் நிறைவேற்றவே, அடுத்த யுகத்தில் அவர்களைப் பிருந்தா வனத்தில் கோபிகளாக்கி, ஸ்ரீ கிருஷ்ணன் தன் அன்பினாலும், பிரேமையினாலும் ஆட் கொண்டிருக்கிறான். கோபிகள் எல்லாம் அவ னது பக்தர்கள். அவனது பிரேமை பவித்திர மானது. அதில் காமத்திற்கு இடமில்லை. அவன் அன்புக்கும், அருளுக்கும் ஆண், பெண் என்ற பேதமில்லை. அவன் ஜீவாத் மாக்களை உய்விக்க வந்த பரமாத்மா.

கிருஷ்ணனின் இளமை நிரம்பிய சொரூபத் தின் தெய்வீகக் கவர்ச்சியை யாரால் வர்ணிக்க முடியும்? அவருடைய முத்துப்பல் வரிசைச் சிறப்பினைக் கண்டவர்கள் இதயத் தில் அளவுகடந்த பக்தியில் கட்டுண்டு பர வச உணர்ச்சியடைந்தனர். ஒருமுறை கிருஷ்ணனைப் பார்த்தால் போதும் அவரின் அழகில் மதிமயங்கி பிரமித்துப்போய், கல் லில் செதுக்கிய சிலைபோல் நின்றுவிடுவர். மரம், செடி, கொடி எல்லாவற்றிலும் கண்ண னின் அருள் நிறைந்திருக்கும் என்று கருது கிறார்கள். அவர்களின் உயரிய உணர்வு களைக் கொண்ட பக்திக்கும், விசுவாசத்திற் கும், எல்லையும் வரையறையும் இல்லை. கிருஷ்ணனின் லீலைகளைக் கண்டும், நினைவு கூர்ந்தும், கோபியர்களின் ஆத்மா பரமாத்மாவான கிருஷ்ணனில் ஐக்கியமாகித் தேனாமிர்தப் பேரின்பத்தைப் பருகினர்.

கோபியர் கொஞ்சும்ரமணா கோபால கிருஷ்ணா
மாபாரதத்தின் கண்ணா மாயக்கலையின் மன்னா
மாதவா மதுசூதனா கார்மேக வண்ணா
கோபியர் கொஞ்சும் ரமணா ரமணா.

(தொடரும்...

## அற்புதங்கள் புரிந்தருளும் ஆறுமுக வடிவேலன்

இல்லற வாழ்க்கையை இனிதாக வாழ்வித்து
நல்லதையே செய்ய வைத்து நாளுமுனை வணங்க வைத்தாய்
கற் சிலையாய் இருந்தாலும் கந்தா உன் மகிமை கண்டேன்
கரும்பை விரும்பும் எறும்பு போல் எனை இழுத்தாய்
சக்தி உமை தாய் மகனே சண்முகனே வா ஐயா
அற்புதங்கள் புரிந்தருளும் ஆறுமுக வடிவேலவனே
நித்திரைக்குப் போனாலும் நெடுவேலை எண்ண வைத்தாய்
நினைந்துருகி மகிழ்வுறுதே என்மனம் முருகா

-சின்னப்பு தனபாலசிங்கம்-

# ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த ஆடி அமாவாசை

– **திரு பூ.க. இராசரத்தினம்** அவர்கள் –

காலத்துக்குக் காலம் நல்ல சமயக் கோட்பாடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஒன்று சைவசித்தாந்தத் தத்துவ நெறியாகும். சித் என்றால் அறிவு. அந்தம் என்றால் முடிவு. சுருங்கக் கூறின் சித்தாந்தம் அறிவை அடிப்படையாகக் கொண்ட கோட்பாடு என்று பொருள்.

அறிவு படைத்தவர்கட்கு மாத்திரம் சைவசித்தாந்தம் பற்றிய விளக்கம் உண்டு என கருதுபவர்கள் இருக்கிறார்கள். எளிமையாக விளக்கப்பட்டால் பலரும் விளங்கிக் கொள்வார்கள். மக்கள் நன்கு விளங்கி தமது இலட்சியங்களை அடையவும் வாழ்க்கை என்னும் பயணத்தை நம்பிக்கையுடனும் மேற்கொள்ளவும் உதவும்.

எனவே சமயம், கிரிகைகள் பற்றிய பொது அறிவு எல்லாச் சமயத்தவர்கட்கும் தேவைப்படுகிறது. சமயத்தின் ஊடாக ஒழுக்கக் கல்வி போதிக்கப்படுகிறது. ஒவ்வொருவரும் தமக்குமேல் உயர்ந்த சக்தி உண்டு என விளங்கிக்கொண்டால் கட்டுப்பாடான வாழ்வை நன்கு மேற்கொள்வார்கள். சட்டத்திலும் பார்க்க சமய போதனைகள் ஒழுக்கமான வாழ்வுக்கு வித்திடும் என்பது சான்றோர் வாக்கு. எனவே சமயத்தின் பெயரில் சில கிரிகைகள், விழாக்கள் எடுக்கப்பட்டு வருகின்றன. கிரிகைகள் ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆனால் கிரிகைகள் பற்றி விளக்கம் பெற வாய்ப்பு இல்லாதவர்கள் இவற்றின் முக்கியத்துவத்தை அறிய விரும்புகிறார்கள். உடல், மனம், வாக்கு ஆகிய மூன்றையும் கொண்டு இறைவனை வழிபடுதல் நன்று. இத்துடன் தியானத்தையும் மேற்கொள்ளலாம்.

மேலும் ஆடி அமாவாசை என்ற கிரிகையை ஏன் நாம் புரியவேண்டும் என விளக்குவது காலத்தின் தேவையாகும். இந்த மாதம் ஆடிமாதமாகும். இந்துக்களுக்கு ஒரு புனிதமான மாதம். ஆடி மாதத்தின் பிறப்பை ஆடிப் பிறப்பென்று கொண்டாடுகிறார்கள். வீட்டில் விசேடமாக கூழ், கஞ்சி பரிமாறப்படுகிறது. இந்த மாதம் மறைந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய "பிதிர் கடன்" மறைந்தவர்களை நினைவு கூருதல் விரதம் அனுஷ்டித்தல் நெருங்கிய உறவினர் கடமை ஆகும். ஆடி அமாவாசை விரதம் பிரதான விரதங்களில் ஒன்றாகும். இக்கிரியை ஞாபகத்துக்கு எட்டாக் காலம் தொடக்கம் புரியப்பட்டு வருகிறது. ஒரு வருடத்தில் 12 அமாவாசைகளும் 12 பௌர்ணமிகளும் உண்டு. சூரியனும் புதிய சந்திரனும் ஒரே வீட்டில் சந்திக்கும் காலம் ஆடி அமாவாசை எனப் பொதுவாகக் கருதப்படுகிறது. சூரியன் சங்கேதக் குறிகளால் அறிவையும் ஒளியையும் பிரதிபலிக்கின்றது. மனதின் பிரபு எனச் சந்திரன் கருதப்படுகிறது.

பாரம்பரிய பிரதான அம்சங்களாக தர்ப்பணம், சிரார்த்தம், பிண்டம் கருதப்பட்டு வருகின்றன. இவைகளைப் புரிவதால் நாம் மறைந்தவர்களை நினைவில் கொள்வதற்கும் நன்றிக் கடன்களை செலுத்தவும் உதவியாக அமைகின்றது. பொதுவாக சிரார்த்த தினம்

பிதிர்கள் சாந்தமடைய அனுஷ்டிக்கப்படு கிறது. இத்தினத்தில் மறைந்தவர்களை நினைவு கூருதலும் பிரார்த்தனை செய்வதும் பெருமளவுக்கு மன ஆறுதலை வழங்குவ தாகப் பலரும் நம்புகிறார்கள். இத்தினத்தில் விரதம் அனுஷ்டித்து வீட்டிலும் ஆலயங் களிலும் கிரிகைகளை புரிவதில் ஆர்வம் உடையவர்களாக இந்துக்கள் காணப்படு கிறார்கள். உறவினர்களோடு உணவை அருந்துவதும் ஏழைகட்கு அன்னதானம் செய்வதும் பிரதான நிகழ்வுகளாகும்.

இத்தினத்தின் முக்கியத்துவம் பற்றி மகாபாரதம் என்ற இதிகாசத்தில் குறிப்பிடப் பட்ட நிகழ்வை கருத்தில் கொள்வது பொருத் தமாகும். துரியோதனன் சகாதேவனை யுத் தம் ஆரம்பிப்பதற்கு பொருத்தமான சிறந்த நாளைக் கூறும்படி கேட்டான். சகாதேவ னுடைய நேர்மையையும் சாஸ்திர அறிவை யும் மனதில் கொண்டு சாதுரியமாகத் துரி யோதனன் சகாதேவனைக் கேட்டான். "அமா வாசை தினத்தில் ஆரம்பித்தால் வெற்றி உறுதியாகும்" என சகாதேவன் பதிலளித் தான். இத் தகவல் பாண்டவர்கட்கு பிரச்சினை களை உண்டாக்கும் என உணர்ந்த கிருஷ் ணர் தமது தெய்வீக சக்தியால் அமாவாசையை ஒரு நாள் முன்பு இடம்பெற ஆவன செய் தார். இதனால் எதிர்பார்க்கப்பட்ட வெற்றி இடம்பெறவில்லை.

மேலும் புரட்டாதியிலுள்ள மகாலய அமாவாசை, மகாபாரத்தில் உள்ள கர்ண னின் கதையோடு இணைக்கப்பட்டுள்ளது. கர்ணன் தருமம் புரிவதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தான். பலருக்கு பொருட்களைத் தானமாக வழங்கினான். ஆனால் ஏழை களுக்கும் தேவைப்பட்டோருக்கும் உணவை வழங்க மறந்து விட்டான். குருசேஷ்திரப் போரில் கொல்லப்படுகின்றான். விண்ணுலகம் சென்றான். ஆனால், ஏழைகட்கும் தேவைப் பட்டோருக்கும் உணவை வழங்காத காரணத் தால் பூவுலகத்துக்குத் திரும்பி வந்து அக் கடமையைப் புரட்டாதி மாதம் அமாவாசை தினத்தில் புரியவேண்டிய நிலை ஏற்பட்டது.

மறைந்த மூதாதையோர் பிதிர்கள் என அழைக்கப்பட்டு அவர்கள் நன்கு கௌர விக்கப்பட்டார்கள் என வேதங்களில் குறிப் பிடப்பட்டுள்ளன. ஒரு பிதா இறக்கும்பொழுது பிள்ளைகள் மரணக் கிரிகைகளை நன்கு புரியக் கடமைப்பட்டுள்ளார்கள். வணக்கத் துக்குரிய பிராமணர்களின் உதவியுடன் பூசைகளைப் புரிந்து பிராமணர்களுக்கு தானங்கள் வழங்கிக் கௌரவிக்க வேண்டிய கடப்பாடு இருந்து வருகின்றது.

ஆடி அமாவாசை சிரார்த்த தினத் தில் பிதா, பாட்டன், பூட்டன் மூவருடைய பெயர்களும் குறிப்பிடப்பட்டு எள்ளும் தண் ணீரும் ஊற்றப்பட வேண்டும். கிரிகைகள் செய்வதனால் இறந்தவர்களையும் அவர் களால் புரியபட்ட அரும்பெரும் சேவைகளை யும் நினைவில் கொள்ளவும் நன்றி பாராட்ட வும் அவர்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த் திப்பதற்கும் வாய்ப்புகள் கிடைக்கின்றன.

இலங்கையில் இந்துக்கள் வீட்டிலும் ஆலயங்களிலும் கிரிகைகளைப் புரிய வாய்ப்புக்கள் உண்டு. உதாரணமாக ஆடி அமாவாசை தினத்தில் விசேட வழிபாடு கீரிமலையிலுள்ள நகுலேஸ்வர ஆலயத்தில் இடம்பெற்று வருகிறது. கீரிமலைக் கடற் கரையில் பல அர்ச்சகர்கள், பக்தர்கள் தமது கடமைகளைத் திருப்திகரமாக நிறைவேற்ற உதவி புரிந்து வருகிறார்கள். இவ்விரதம் அனுஷ்டிப்பதால் இந்துக்களுக்கு உள இயல் ரீதியிலும் ஆரோக்கிய ரீதியிலும் நல்ல நற்பயன்களை அடைய வாய்ப்புகள் உண்டு. உதாரணமாக அமாவாசை, பௌர் ணமி தினங்களில் கால நிலைகளில் மாற்றங் கள் ஏற்படுவது இயற்கையே. இந்த இரு

தினங்களில் வடஇந்தியாவிலுள்ள கங்கை, யமுனை நதிகள் பெருக்கெடுப்பதால் ஆறுகள் புனிதத் தன்மை அடைகின்றன. இதனால் தொற்றுநோய்கள் பரவும் வாய்ப்பும் மட்டுப் படுத்தப்படுகின்றன.

மக்கள் வீடுகளை தொற்று நீக்கி களைப் பயன்படுத்தி சுத்தமாக வைத்திருப் பார்கள். இத் தினங்களில் பூச்சிகள் அல்லது ஊர்வன தீண்டினால் அவைகளின் விஷம் இரட்டிப்பாக உண்டு என்பதை மக்கள் அறி வார்கள். மேலும் விரதம் அனுஷ்டித்து உணவு உட்கொள்வதில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி ஆரோக்கியமாக வாழ்கிறார்கள். விஞ்ஞான அடிப்படையிலும் நாம் ஆய்வை மேற்கொண்டால் ஆடி அமாவாசை விரதம் அனுஷ்டிப்பதில் பற்பல நன்மைகள் உண் டென்பதையும் சிறந்த மனித வாழ்வுக்கு இறையுணர்வும் அறநெறியும் பிரதானமான வழிகாட்டிகள் என்பதை உணர்வோமாக.

## ஆடிப் பிறப்பு

– நவாலியூர் சோமசுந்தரப் புலவர் –



ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப்பனங் கட்டி கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

பாசிப் பயறு வறுத்துக் குத்திச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி
வாசப் பருப்பை அவித்துக் கொண்டு - நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து.

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரிற் சர்க்கரையும் கலந்து
தோண்டியில் நீர் விட்டு மாவை அதில் கொட்டி
சுற்றிக் குழைத்துத் திரட்டிக் கொண்டு.

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளேயிட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே.

பூவைத் துருவி பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுருண்டை பயறுமிட்டும்
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவாள்
மணக்க மணக்க வாயூறிடுமே.

குங்குமப் பொட்டிட்டுப் பூமாலை சூடியே
குத்து விளக்குக் கொழுத்தி வைத்து
அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப்படைப்பும் படைப்போமே.

வண்ணப் பலாவிலை ஒடிப் பொறுக்கியே
வந்து மடித்ததை கோலிக் கொண்டே
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப் புதுக் கூழ் குடிப்போமே.

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச்சுட ஊதிக் குடித்துக்
கொழுக் கட்டை தன்னைக் கடிப்போமே.

*உண்மையான அடக்கமே எல்லா நற்குணங்களுக்கும் பிறப்பிடமாக இருக்கிறது.*

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம்

## அருளிய

# திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)



முனைவர் ஆ. ஆனந்தராசன்

### 99. அந்நிலையை இந்நிலையில் அடைதல்

மும்மை தரும் வினைகள் மூளாவாம் மூதறிவார்க்கு;
அம்மையும் இம்மையே யாம்.

**பொருள்:**

வினைகள் இம்மை, அம்மை, மறுமை என்னும் மூவகைப் பயனையும் தருவன. அவ்வினைகள் உயர்ந்த ஞானம் உடையவரிடத்தில் மூண்டு வளர்தல் இல்லை.

அதனால் அவர்க்கு இவ்வுடம்பு நீங்கிய பின் எய்தும் பேரின்ப நுகர்ச்சியாகிய பரமுத்தி நிலை இவ்வுடம்பு உள்ள இப்பொழுதே உண்டாவதாகும்.

**சொற்பொருள்:**

மும்மை- உடம்போடு இவ்வுலகில் வாழும் நிலையாகிய இம்மை, இறந்தபின் சுவர்க்கம், நரகம் ஆகிய உலகங்களிற் செல்லும் நிலையாகிய அம்மை, மீள இந்நிலத்திற் பிறக்கும் நிலையாகிய மறுமை ஆகிய மூவகைப் பயனையும், தரும்- நம் போல்வார்க்குத் தரக்கூடிய, வினைகள்- வினைகள், மூதறிவார்க்கு- உயர்ந்த ஞானம் உடையவரிடத்தில், மூளா- வளரமாட்டா (அதனால்), அம்மையும்- அவர்களுக்கு உடம்பு நீங்கியபின் எய்தும் பேரின்ப நிலையாகிய பரமுத்தி நிலை, இம்மையே- உடம்பு உள்ள இப்பொழுதே, ஆம்- உண்டாகும்.

**விளக்கம்:**

முகந்து வந்த வினை தம் பயனைத் தந்து முடிவெய்தும் வரையில் இவ்வுடம்போடு இவ்வுலகில் வாழும் நிலை இம்மை எனப்படும். இறந்தபின் வேறுடல் கொண்டு சொர்க்கம் நரகம் ஆகிய உலகங்களில் சென்று, வினைக்கேற்றபடி அங்குள்ள இன்ப துன்பங்களை அனுபவிக்கும் நிலை அம்மை எனப்படும். அவ்வாறு அனுபவித்தபின் எஞ்சியுள்ள வினைக்கேற்ப மீளவும் இந்நிலத்தில் வந்து பிறக்கும் நிலை மறுமை எனப்படும்.

*நம்பிக்கையும் தைரியமும் வெற்றிக் கிரீடத்தின் இரு ஒளிமிகு வைரங்கள்.*

"துறக்கப் படாத உடலைத் துறந்து வெந்தூதுவரோடு
இறப்பன்; இறந்தால் இருவிசும்பு ஏறுவன்; ஏறி வந்து
பிறப்பன்; பிறந்தால் பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன் கொலோ என்று என் உள்ளம் கிடந்து மறுகிடுமே"

(4; 113:8)

என்பதில் இம்மை, அம்மை, மறுமை ஆகிய மூன்றும் ஒருவாறு கூறப்பட்டுள்ளமை காணலாம்.

இம் மூவகைப் பயனையும் தருவனவாகிய வினைகள் உடம்பின்மேல் பற்றுடையார்க்கே மூளும்; அவருணர்வையே தாக்கும் சீவன் முத்தராகிய சிவஞானிகளுக்கு உடலின் கண் பற்று இன்மையால் வினைகள் மூள்வதில்லை. அவருணர்வை வேறுபடுத்துவதில்லை; அவர் நுகரும் சிவானந்த நுகர்ச்சிக்கும் தடையில்லை. அது பற்றியே "அம்மையும் இம்மையே யாம்" என்றார் ஆசிரியர்.

"அம்மை" என்பதற்கு வேறு உலகங்களிற் செல்லும் நிலை என்று மேலே பொருள் கூறினோம். அதுவே அச் சொல்லுக்குரிய நேரான பொருள். ஆயினும் "அம்மையும் இம்மையே யாம்" என்ற தொடரில் அம்மை என்பது வேறு உலகங்களில் செல்லும் நிலையைக் குறிக் காமல் பரமுத்தி நிலையைக் குறிக்கும் வகையில் ஆளப்பட்டுள்ளது. இம்மை என்பது சீவன் முத்தி நிலையைக் குறிப்பதாகும். சீவன் முத்தி நிலையும் பரமுத்தி நிலையும் ஒன்றேயாம் என்பது அத்தொடரின் கருத்தாகும்.

பரமுத்தி என்பது உடம்பைவிட்டு இறைவனோடு கலந்து முத்தியின்பத்தை நுகர்ந்து கொண்டிருக்கும் நிலையாகும். சீவன் முத்தி என்பது உடம்பு உள்ளபோதே முத்தியின்பத்தை நுகரும் நிலையாகும். பரமுத்தியில் உடம்பு இல்லை; சீவன் முத்தியில் உடம்பு உண்டு. அவ்வளவே வேறுபாடு. பேரின்ப நுகர்ச்சியின் தன்மையில் இவ்விரண்டிற்கும் வேறுபாடு என்பது அறவே இல்லை. இதனால் பரமுத்தியை அடைந்தோர் உடம்பு நீங்கிப் பெறும் இன்பத்தைச் சீவன் முத்தர் உடம்போடு நின்றே பெறுகின்றனர் என அறியலாம்.

சீவன் முத்தர்க்குப் பிராரத்தவினை உள்ள வரையில் உடம்பு இருக்கும். பிராரத்தவினை முடிந்தால், உடம்பு வீழ்ந்துவிடும். உடம்பின் வீழ்ச்சி, மேலும் வினையுடைய உலகர்க்கு இறப்பு எனப்படும்; வினையில்லாத சீவன் முத்தர்க்கு வீடுபேறு அல்லது பரமுத்தி என்று சொல்லப்படும்.

## 100. உலகின் மேல் கருணை

கள்ளத் தலைவர் துயர் கருதித் தம்கருணை
வெள்ளத்து அலைவர் மிக.

**பொருள்:**

உலக மாந்தர் இறைவனை மறந்து தம்மையே தலைவராகக் கருதி "நான்" எனத் தருக்கி வாழ்வர். அத்தருக்கினால் விளைவது வினையாகும். அவ்வினையினால் விளைவது துன்பமேயாகும். இவ்வாறு மாந்தர் தம் அறியாமையினால் படும் துன்பத்தைக் கண்டு ஞானிகள் அவர்மீது இரக்கம் கொள்வர். அவ் இரக்க மிகுதியால், அவர் கேட்பினும்

கேளாது போயினும், அவர்க்கு உண்மையினை எடுத்துரைக்க முற்படுவர்; கனிவாகவும் சில சமயங்களில் கடுமையாகவும் அறிவுரை கூறுவர்.

இவ்வாறு சிவனை அணைந்தோர் சிவனைப் போலவே பேரருள் உடையவராய் இருந்து உலகிற்கு உய்யும் நெறி காட்டுவர்.

**சொற்பொருள்:**

கள்ளத் தலைவர்- எச்செயலுக்கும் தம்மையே தலைவராகக் கருதி, இறைவனுக்குரிய தலைமையைத் தமதாக்கிக் கொள்ளுகின்ற அறியாமையை உடைய உலக மாந்தர், **துயர் கருதி-** அவ்வறியாமை காரணமாகப் படும் **துன்பத்தை** எண்ணி, தம் கருணை **வெள்ளத்து-** (சிவனை அணைந்தோராகிய ஞானிகள்) தமது இரக்க மிகுதியால், மிக **அலைவர்-** மிகவும் பரிவுகொண்டு உய்யும் நெறியைக் காட்ட முற்படுவர்.

**விளக்கம்:**

சிவத்தை அணைந்து இன்புறுபவர்கள் மற்ற மாந்தரைப் போலவே உடம்புடன் உலகில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு இரண்டு நிலைகள் உண்டு. ஒன்று, இந்த உலகையும் உடலையும் மறந்து இன்பத்தில் தோய்ந்திருக்கும் நிலை. மற்றொன்று, அந்த நிலையிலிருந்து மீண்டு உலக நினைவுக்கு வரும் நிலை. முன்னைய நிலை பேசாத மோன நிலை; ஆனந்த நிலை. பின்னைய நிலை அருள் நிலை; உலக நினைவுக்கு வந்து பேசும் நிலை.

பேசுகிற நிலைக்கு வரும்போது அவர்கள் தாம்பெற்ற சொல்லொணாத இன்ப அனுபவத்தினை உலகிற்கு உணர்த்தி நிற்பர். மேலும் உலகத்தார் நிலையைக் காணும்போது அவர்கள் மேல் கருணை கொண்டு அறிவுறுத்த முற்படுவர்.

அவர்கள் உள் முகமாக ஒன்றி நுகர்ந்த அனுபவத்தை வெளிமுகத்துக்கு வந்து கூறும்போது தாம் பெற்ற இன்பத்தைப் பெருமித உணர்ச்சியோடு பேசுவார்கள். பருந்து தன் இரு சிறகுகளையும் விரித்து எல்லையற்ற வானத்தில் எந்தப் பறவையும் செல்லாத உயரத்தில் பறந்து மிதப்பதைப் போன்றது அந்த நிலை.

இனி உலகத்தார் படுந் துன்பங்களை உளங்கொண்ட போது அவர்கள் உள்ளத்தில் கருணை பிறக்கும். அப்போது மக்களைப் பார்த்துப் "பயனற்ற வழியில் செல்லாதீர்கள்; இப்படிச் செல்லுங்கள்" என்ற உபதேசம் பிறக்கும்.

புகழும் செல்வமும் சேர்த்த மருத்துவர் ஒருவர் நோயாளிக்கு என்று பெரிய மருத்துவமனை கட்டியிருப்பார். தனக்கு என்று தனியே ஒரு மாளிகையை அமைத்துக் கொண்டிருப்பார். தன்னுடைய வளமனையில் இருக்கும்போது அவர் அங்குள்ள வசதிகளை அனுபவித்துக்கொண்டு கவலையின்றியிருப்பார். அவரைப் பார்த்தால் மருத்துவர் என்றே சொல்லமுடியாது. அவரிடம் மருத்துவருக்குரிய கோலத்தைப் பார்க்க முடியாது. கழுத்திலே கருவியை மாட்டியிருக்க மாட்டார். கையிலே மருந்துச் சீட்டு வைத்திருக்கமாட்டார். ஒரு செல்வரைப் போலத் திகழ்வார்.

அவரே மருத்துவமனைக்கு வந்து விட்டால் அவர் நிலையே வேறாக இருக்கும். அவரது கருத்தெல்லாம் நோயாளிகளின் மீதே இருக்கும். நோயின் தன்மையைக் கண்டறிந்து அவரவர் நிலைக்கு தகுந்தபடி மருந்து எழுதிக் கொடுப்பதிலேயே அவர் மூழ்கியிருப்பார்.

அந்த மருத்துவரைப்போலச் சீவன் முத்தராகிய ஞானிகளும் திருவருள் இன்பமாகிய மாளிகையிலேயே எப்பொழுதும் திளைத்திருக்கமாட்டார்கள். உலகமாகிய மருத்துவமனையில் நடமாடும் நோயாளிகளைக் குணப்படுத்த வருவார்கள். அவர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற கருணையினால் உபதேசம் என்ற நன் மருந்தினைத் தருவார்கள்.

ஞானசம்பந்தப் பெருமான் அப்படிப்பட்டவர். இம்மையிலே இன்பமாய் வாழலாம் என்பதைப் பல இடங்களில் வலியுறுத்தி மக்களுக்கு நம்பிக்கையூட்டியவர். "உங்களுக்கு உடற்பிணி தீர வேண்டுமா? திருக்கானப்பேர் என்ற தலத்திற்குச் சென்று வழிபாடு செய்யுங்கள்" என்கிறார் அவர். யார் போனாலும் உறுபிணியைப் போக்கிக்கொள்ள முடியுமா? எனில், போய் வழிபடுகிற முறையிலே வழிபட்டால் பயன் உண்டாகும். கைகளிலே வெறும் மலர் களை எடுத்துச் சென்றால் போதாது. உள்ளத்தில் ஞானமாகிய மலரை ஏந்திச் சென்று பூசிக்க வேண்டும். ஞான மலர் என்பது என்ன? திருக்கானப்பேர் இறைவனே நமக்கு எல்லாம் தருபவன் என்ற உறுதி வரவேண்டும்; அவன் பிறவி நோயையே போக்கவல்ல பெருமான். அவன் உடம்பில் உற்ற பிணியையும் கெடும்படி செய்வான் என்ற தெளிவு வர வேண்டும். இந்தத் தெளிந்த அறிவே ஞானம். அதுவே ஞானமலர். அந்த மலரோடு சென்று, மனம் பொருந்திச் செய்யும் வழிபாடே நற்பயனைத் தரும்.

"மானமா மடப்பிடி வன்கையால் அலகிடக்
கானமார் கடகரி வழிபடும் கானப்பேர்
ஊனமாம் உடம்பினில் உறுபிணி கெட எண்ணின்
ஞானமா மலர் கொடு நணுகுதல் நன்மையே"

அணைந்தோராகிய பெருமக்கள் உலகின்மேல் கருணை கொண்டு அறிவுறுத்த முற்படுவர் என்பதனை இதுபோலும் திருமொழிகளால் உணரலாம்.

திருச்சிற்றம்பலம்.

(தொடரும்...

# குருபூஜை தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஆகஸ்ட் 06 | ஆடி 21 | செவ்வாய் | மயில்வாகனம் சுவாமி |
| ஆகஸ்ட் 07 | ஆடி 22 | புதன் | சுந்தரமூர்த்தி நாயனார் |
| ஆகஸ்ட் 13 | ஆடி 28 | செவ்வாய் | பட்டினத்தடிகள் |
| செப்ரெம்பர் 07 | ஆவ 21 | சனி | குங்குலியக்கலயர் |
| செப்ரெம்பர் 30 | புர 13 | திங்கள் | சங்கரபண்டிதர் |

*யோசனைகள் நேரத்தையும், அலையையும்போல யாருக்கும் காத்திருப்பதில்லை.*

# மனிதத்துவம்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

வாழுகின்ற சமுதாயத்திலும் சரி; குடும்பத்திலும் சரி; தொழில் தலங்களிலும் சரி; பொது இடங்கள், வீதிகள், வணக்கத் தலங்கள் ஆகியவற்றிலும் சரி; பொது நிகழ்வு களிலும் சரி; மற்றைய மனிதர்களின் உரிமை களை மதித்து மீறாமல் அவற்றின் நலம் பேணி வருதல், மிகவும் இன்றியமையாத தாகும். மனித உரிமைகள் மதிக்கப்படும் போதுதான்; குடும்பத்திலோ, நாட்டிலோ மற்றும் சமூகங்களிலோ அமைதி நிலவும் என்பதை மனிதர்கள் உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியம் ஆகும்.

பிறரின் மனித உரிமைகளை மறுத் தலோ; வாழும் உரிமையைப் பறித்தலோ; அபகரித்தலோ; மனிதாபிமானம் இல்லாமல் நடந்துகொள்வதோ மனித இயல்பு அன்று. அவை மனிதத்துவம், மனிதத்தன்மை, மானு டம், மனிதம் என்பவற்றை மீறும் செயல்கள் என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

எமக்கு இருக்கின்ற உரிமைகள் அனைத்தும் மற்றைய மனிதர்களுக்கும் உண்டு என்பதைச் சிறுபராயத்தில் இருந்தே பிள்ளைகள் அறிந்து, தெளிந்து கொள் ளுதல் வேண்டும். பெற்றோர், ஆசிரியர்கள், மூத்தோர், சமய மற்றும் சமூகத் தலைவர்கள், பெரியோர்கள் ஆகியோர் முன்மாதிரிகள் ஆக விளங்கவேண்டியது இன்றியமையாத தாகும். இன்று, முன்மாதிரிகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டுள்ளமையே; சமூகத்தில் காணப்படு கின்ற மனித உரிமை மீறல்கள், வன்செயல் கள், ஊழல்கள், கொலைகள், கொள்ளை கள், போதைப்பொருள் பாவனைகள் போன்ற அனைத்துக் குற்றச் செயல்களுக்கும் முக் கிய காரணம் என்பதைப் புரிந்துகொள்ளு தல் வேண்டும்.

தத்தம் உரிமைகளுக்கு உரிமை கோருபவர்கள்; மற்றையவர்களின் உரிமை களுக்கு குந்தகம் விளைவிக்க முயலக் கூடாது. அவ்வாறு செய்தல், அதிபாதகச் செயல் என்பதை அறிந்து கொள்ளுதல் வேண்டும். மீறிச் செய்தால் செயலுக்கேற்ற விளைவு நிச்சயம் கிடைக்கும்.

தற்காலத்தில் வலியார், மெலியா ரைத் துன்புறுத்துவதையும்; கைமுந்துபவர் கள், பிந்தியவர்களைப் படுகுழியில் தள்ளி வீழ்த்துவதையும் சர்வசாதாரணமாகக் காணக் கூடியதாக உள்ளது. அவை யாவும்; தப்பு கள், தவறுகள் என்பதும் சம்பந்தப்பட்டவர் களுக்கு நன்கு தெரியும். அப்படியிருந்தும் அவர்கள் தொடர்ந்தும் செய்துகொண்டே இருக்கிறார்கள்.

வீதிகளிலும், நடைபாதைகளிலும் போவோர், வருவோர்களை அவதானித்துப் பார்த்தால் உண்மை புலப்படும். பிறர்மீது கரிசனைகொள்ளல் என்னும் விழுமியப் பண்பு, பெரிதும் மனிதர்களால் புறக்கணிக் கப்பட்டு வருதலைக் காணலாம். நலிந்தோர், வயோதிபர், ஊனமுற்றோர், உடல் நலம் குன்றியோர், குழந்தைகள் என்றும் கூடப் பார்க்காமல் எல்லோரையும் முட்டி மோதி, இடறித் தள்ளிவிட்டு விரைபவர்களைக் காணும்போது; இவர்களும் மனிதர்கள்தானா?

*மனிதன் மிக உயர்ந்த உச்சியை அடையலாம். ஆனால் அங்கேயே தங்கிவிட முடியாது.*

என்று எண்ணத் தோன்றுகிறது. பலம் குன்றியவர்கள் வீதிகளில் பாதுகாப்பாகச் செல்வதற்கு உரிமை மறுக்கப்பட்டுள்ளதா? என்ற வினாவும் கூடவே எழுகிறது. "மெலியாரை வலியார் தாக்கினால்; வலியாரை வாசல்படி தாக்கும்" என்பது ஆன்றோர் வாக்கு.

மழைக்காலங்களில், வீதிகளில் நீர் தேங்கிநிற்கும்போது, நீர்த்தேக்கத்தின்மீது செலுத்தப்படுகின்ற வாகனங்கள் நீருடன் சேர்த்துச் சேற்றையும் அள்ளிப் பாதசாரிகள் மீது வாரி இறைத்துவிட்டு விரைந்து செல்கின்றனவே! அப்பொழுது வாகனத்தில் செல்லும் பயணிகள், ஓட்டுனர் எவராவது பாதிக்கப்பட்ட பாதசாரிகளின் அவலநிலை பற்றிச் சிந்தித்துப் பார்க்கிறார்களா? என்றால், அதுவும் இல்லை. "பிள்ளைக்கு விளையாட்டாம்; சுண்டெலிக்குச் சீவன் போகுதாம்" என்ற பழமொழிதான் நினைவுக்கு வரும்.

பாதாதி கேசம்வரை, உடலும் உடுப்பும் உள்ளமும் சேற்று நீரினால் நனைக்கப்பட்ட நிலையில், மேற்கொண்டு போகவேண்டிய இடத்தை நோக்கிச் செல்ல முடியாமல் சபித்துக்கொண்டு வீடு திரும்பும் அந்த அப்பாவிப் பாதசாரிகளின் அவல நிலையைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால்; வாகன ஓட்டுனர்கள் இப்படிக் கண்மூடித்தனமான செயல்களைச் செய்வார்களா? மேலும், நாள்தோறும் பெருகி வருகின்ற வீதி விபத்துக்கள்; பல மனித உயிர்களைப் பலி கொள்கின்றன; பலரின் உடல் அவயவங்களைச் சூறையாடுகின்றன. இவற்றால் எத்தனையோ மனிதர்கள், வாழும் உரிமையை இழக்கின்றார்கள்; அவர்களின் குடும்பங்கள் உழைக்கும் கரங்களை இழந்து வாழமுடியாமல் தவிக்கின்றார்கள். இவற்றைப் பற்றிச் சற்றுநேரம் ஓரிடத்தில் ஆற, அமர இருந்து சிந்தித்தால், அவர்களின் மனம் தெளிவுபெறும். அதன்பின், இப்படியான ஈனச் செயல்களில் ஈடுபடாமல் தம்மைப் பார்த்துக் கொள்வார்கள்.

பிறரின் வாழும் உரிமையை மதிப்பவர்கள் இவ்வாறான மனிதாபிமானமற்ற ஈனச் செயல்களைச் செய்யமாட்டார்கள்.

நடைபாதைகள், வீதிகள், தெருக்கள், நாற்சந்திகள் ஆகியவற்றில் நடந்து செல்பவர்கள் மற்றும் இரு சக்கர வண்டிகளில் செல்பவர்கள்; தமக்கு வேண்டியவர்களைச் சந்திக்குமிடத்தில் நடுவழியில் நின்றவண்ணம் கூடிக் கதைத்துக் குசலம் விசாரித்து மகிழ்கின்ற காட்சி, இன்று சர்வ சாதாரணமாகிவிட்டது. அப்பாதையில் பயணிப்பவர்களுக்கு எத்துணை இடையூறுகள், இடைஞ்சல்கள் செய்கிறார்கள் என்பதை அவர்கள் கருத்திற் கொள்வதாகத் தெரியவில்லை. நடுவழியில் நட்ட கல்லைப்போல் அசையாமல் நின்று, பேசி மகிழ்பவர்கள் எதையுமே கருத்தில் கொள்வதில்லை.

அவ்வாறே, வீதிகளிலும், சந்திகளிலும், பொது இடங்களிலும்; போவோர் வருவோர்களைக் கிண்டல், கேலி செய்பவர்களும்; பகிடி வதையில் ஈடுபடுவோரும் மனித உரிமையை மீறுபவர்களாகவே கொள்ளப்பட வேண்டும். மனிதரின் வாழும் உரிமைகளை மதிப்பவர்கள், இத்தகைய ஈனச் செயல்களில் ஒருபோதும் ஈடுபாடு கொள்ள மாட்டார்கள். "பிள்ளைக்கு விளையாட்டுச் சுண்டெலிக்குச் சீவன் போகுதாம்" என்ற பழமொழி இன்றைய நிலையில் மிகப் பொருத்தமாக உள்ளமை நோக்கற்பாலது. பகிடிவதை என்றாலும் வதை, வதைதானே; துன்பம் தருவது வதை; என்னும் உண்மையை மனதில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு குடும்பங்களிலும், வீதிகளிலும், பொது இடங்களிலும், வேலைத் தலங்களிலும், கல்வி நிலையங்களிலும், சமூகங்களிலும் மற்றும் மக்கள் கூடும்

*தைரியப்படுத்துவது ஒருவனுக்குச் செய்யும் உதவியில் மூன்றில் ஒரு பங்கு.*

இடங்களிலும் ஏதோ ஒரு விதத்தில் மனித உரிமை மீறல்கள், வதைகள், சீண்டல்கள், தினமும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக் கின்றன. பலம் கூடியவர்கள் பலம் குறைந்த வர்களின் மனித உரிமைகளை; அலட்சியம் செய்தல்; பலம் கூடியவர்கள் பலம் குறைந் தவர்களை வேண்டுமென்றே சீண்டுதல், பரிகசித்தல், நையாண்டி செய்தல், வம்புக் கிழுத்தல், தூற்றுதல், புறங்கூறல், சொட்டை சொல்லுதல், வசை மொழிதல்- இவையாவும் மனித உரிமை மீறல்கள் என்பதை சம்பந் தப்பட்டவர்கள் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். மனிதரின் மன அமைதி இச் செயல்களால் பெரிதும் பாதிப்பிற்குள்ளா கிறது என்பது யாவராலும் உணரப்படவேண் டிய உண்மை.

எறும்புகள், பறவைகள்கூட ஓர் ஒழுங்குமுறையைக் கடைப்பிடிக்கின்றன. எறும்புகள் வரிசையாக, ஒன்றோடொன்று முட்டி மோதாமல், ஊர்ந்து செல்கின்ற காட்சி; ஒழுங்கின் அவசியத்தை, மனிதர் களுக்கு உணர்த்துவதாகவே அமைகின் றது. வானத்திலே பறவைகள் சிறகடித்துப் பறக்கின்றன. அவை முட்டி மோதினால் அனர்த்தங்கள் தடுக்கமுடியாதனவாகி விடும். அப்படியொன்றும் ஏற்படுவதில்லை. காரணம், அவைகள் பின்பற்றுகின்ற ஒழுங்கு முறைமை ஆகும். அந்த ஒழுங்கு முறை மைதான் அவைகளை வாழ்விக்கின்றது; அழகையும் தருகின்றது. ஒழுங்குதான் அழகு; அழகுதான் ஒழுங்கு. யாவும் ஒழுங் காக இருந்தாலேயே; அங்கு அழகு குடி இருக்கும்.

ஊர்வனவும், பறப்பனவும், நீர் வாழ் வனவும் ஒழுங்கில் அழகு காணும்போது ஆறறிவு படைத்த மனிதர்கள் ஒழுங்கீனத் தில் அழகினைக் காண முயற்சிக்கின்றனர். பெரும்பாலான மனிதர்கள் எதிர்நோக்கும் துன்பங்கள், கவலைகளுக்கு அவர்களின் ஒழுங்கு பேணாமையே பிரதான காரணம் என்றால் மிகையாகாது. வாழ்க்கையில் ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றைப் பேண மறுப்பவர்கள் நல்லமுறையில் ஒழுங்கு பேணி மகிழ்ச்சியாக வாழ மறுப்பவர்கள் ஆகிவிடுகின்றனர்.

மனித விழுமியங்களைச் சிறுபராயத் திலிருந்தே பிள்ளைகளில் விருத்திசெய்ய வேண்டும். இதற்கு அவர்கள் வாழும் சமூகச் சூழல் உகந்ததாக அமையவேண்டியது அவசியம். கேட்டுச் செய்தல், பார்த்துப் பழகுதல்; குழந்தைகளின் இயல்பு. எனவே வீட்டில் பெற்றோர்கள், மூத்த உறுப்பினர்கள் மற்றும் அடிக்கடி வீட்டுக்கு வந்து போகும் உறவினர், சுற்றத்தவர், நண்பர்கள் ஆகி யோரும்; பாடசாலையில் ஆசிரியர்களும்; நடத்தை முறைகளில் பிள்ளைகளோடு பழகும் விதத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டியது இன்றியமையாததாகும். "இளமை யிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது முதுமொழி.

பாடசாலைகளில் ஆசிரியர்கள், பாடங் களைக் கற்பிக்கும்போது; பாடங்களுடன் இணைத்து மனித விழுமியப் பண்புகள், நடத்தை முறைகள் பற்றிய விடயங்களை யும் மாணவர்கள் அறிந்துகொள்ளும்படி கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளை அமைத்துக்கொள்ள வேண்டும். பாடசாலை களில் மேற்கொள்ளப்படுகின்ற இணைப் பாட விதான நிகழ்ச்சிகள் மற்றும் புறக்கிருத் தியங்கள், கலை விழாக்கள் மூலம் மனித விழுமியங்கள் மற்றும் குடியியற் பண்புகள் ஆகியவற்றை மாணவர்களில் விருத்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மாறாக போட்டி, பொறாமைகள்

*நற்காரியங்கள் செய்வதில் அஞ்சவேண்டாம். அது ஆனந்தத்திற்கும் மறுபெயர்.*

ஏற்பட அநுமதித்தல் ஆகாது. ஒரு குடிமகனுக்கு இருக்கும் வாழும் உரிமை, ஏனைய குடிமக்களுக்கும் உண்டு. ஒவ்வொருவரினதும் உரிமைகள் பேணப்படுதலும் மதிக்கப்படுதலும் அவசியம். உரிமைகள் மறுக்கப்படுதல், மீறப்படுதல் என்பன குற்றம் ஆகும் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்படுதல் மனித தர்மம் ஆகும். பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்தும் உரிமை உண்டு. ஆனால், அவற்றைத் துர்ப்பிரயோகம் செய்யவோ, நாசம் செய்யவோ எவர்க்கும் உரிமை இல்லை; நாம் எல்லோரும் அவற்றின் பாதுகாவலர்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். மனிதத் தன்மைகளைப் பேணி, நல்ல மனிதனாக வாழ முயல்வோமாக.

வாழ்க வளமுடன்; வாழ்க வையகம்.

## கடமையே மனிதனுக்கு அழகு

குழந்தை சிரிக்கும் சிரிப்புத்தானே கொள்ளை அழகு
கோயில் தெய்வம் காட்டும் சிரிப்பும் கொள்ளையழகு
பழங்கள் எம்மைப் பார்க்கும்போது கொள்ளையழகு
பாட்டி கதைகள் சொல்லும்போது கொள்ளையழகு.

கடமை செய்யும்போது மனிதன் கொள்ளை அழகு
கதிரவன் எழும் காலைப்பொழுது கொள்ளை அழகு
படம் எடுக்கும் நாகபாம்பும் கொள்ளை அழகு
பால் தரும் அந்தப் பசுவும் கன்றும் கொள்ளையழகு.

அன்பைக் காட்டும் போதுதானே அம்மா அப்பா அழகு
ஆசிரியரும் தன்னை மறந்து போதிப்பதுவே அழகு,
இன்பநிலை எய்திவிட்டால் எல்லோருமே அழகு,
இந்த மண்ணை அலங்கரிப்பதுதான் கல்வியழகே அழகு.

வயல்களில் பயிர்விளையும்போது கொள்ளை அழகு
வறுமை விட்டு விலகும்போது வாழ்வும் அழகு
மயில் நடனமாடும் போது தோகை அழகு
மாணவர்களைப் பாதுகாத்தல் எதிர்காலத்திற்கழகு.

-கே.எஸ். சிவஞானராஜா-

# வழித்துணை 25

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 நீதி சிலருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்
இன்னும் சிலருக்கு வெகிழ்ச்சியைக் கொடுக்கும்
மகிழ்ச்சியும் வெகிழ்ச்சியும் வேறுவேறு ஆனாலும்
நீதி எல்லோற்கும் ஒன்றேதான் அறிந்திடுவீர்.

02 வெள்ளியும் செவ்வாயும் ஆலயம் செல்வதற்கு
அன்றிறை அங்கிருக்கும் என்பதன்று அர்த்தம்
செவ்வாயில் கஸ்ரமுண்டு வெள்ளியில் செல்வமுண்டு
இரண்டிற்கும் இறைவணக்கம் அவசியம் என்பதாலாம்.

03 ஒலியாக ஒளியாக இருப்பவனும் அவனே
மணமாக சுவையாக மலர்பவனும் அவனே
உணர்வாக உள்நின்று துடிப்போனும் அவனே
உணர்ந்திடுவீர் புலன்ஒன்றாய்க் குவிவதுவே இறையாம்.

04 நாமும் இறைவனதே நமதும் இறைவனதே
வாழ்வும் இறைவனதே வளமும் இறைவனதே
பிறப்பும் இறைவனதே இறப்பும் இறைவனதே
தருவதை வாங்கிடுவோம் தராததை வேண்டிடுவோம்.

05 மணியதில் ஒலியாக மலரதுள் மணமாக
கனியதுள் சுவையாக தீபத்துள் ஒளியாக
உடலுக்குள் உணர்வாக மறைந்துள்ள இறைவனை
உன்னுக்குள் ஒன்றாக்கி உணர்ந்திடுவாய் எழுந்தருள்வான்.

06 அட்டாங்கம் பஞ்சாங்கம் நிலவணக்கம் ஆகும்
ஆலயத்துத் தீர்த்தமுண்ணல் நீர்வணக்கம் ஆகும்
கற்பூரம் ஊதுபத்தி தீகாற்று வணக்கமென
கோபுர வணக்கமும் ஆகாய ஐம்பூத வணக்கங்களாம்.

*நட்பு ஆண்டவன் அளித்த பரிசு, மனிதன் பெற்றுள்ள வரங்களில் தலைசிறந்தது.*

07 உயரமோ அகலமோ மரியாதையின் சின்னமன்று
உள்ளத்தின் அளவே மரியாதைக் குரியதாம்
குழந்தைபோல் பிறர்முன்னே குழைவோடு நிற்போரை
மூத்தோர்போல் மற்றோர்கள் முன்னின்று மதிப்பர்.

08 நிலவணக்கம் இல்லையெனில் நிலம் நடுங்கி ஆடும்
நீர்வணக்கம் இல்லையெனில் கடல் தரையுட்பாயும்
தீகாற்றை வணங்கிடில்நாம் அனல்கக்கும் புயல்வீசும்
ஆகாய வணக்கமின்றேல் ஓயாது துன்பமதே.

09 ஆசிரியம் இல்லையெனில் அகிலம் இல்லை
நேசித்த மாணவற்குத் துயரம் இல்லை
பூசிப்போம் அவர்தம்மை கோசிப்போம் அவர்பெயரை
வாசித்தே வாழ்த்துரைகள் ஆசிரியம் வாழ்கவென்றே.

10 கல்வியினைக் கற்காமல் காலத்தைக் கடத்துவோரும்
உண்கின்ற உணவினை உதாசீனம் செய்வோரும்
இல்லத்தை இடிப்போரும் உடைகளைக் கிழிப்போரும்
பின்னொருநாள் அதற்காகத் தவம்கிடக்க நேரும்.

---

## துறவியும் வில்வித்தை வீரனும்

ஓர் புகழ்பெற்ற வில்வித்தைக்கார சென் துறவி இருந்தார். அவருடன் போட்டியிட ஓர் திறமை வாய்ந்த இளம் வில்வித்தைக்காரர் முன் வந்தார். துறவிக்கு சவால்விடக் கூடியவராய் அந்த இளம் வில்வித்தை வீரர் இருந்தார். இருவரும் பல போட்டிகளிலும் வென்று முன்னேறினர். தூரத்தில் இருக்கும் ஒரு மாட்டுப் பொம்மையின் கண்ணில் மிகச் சரியாக முதல் அம்பால் அடித்து, பின் அடுத்த அம்பால் அந்த அம்பையே இரண்டாய்ப் பிளந்து சாதனை செய்து காட்டினார் இளம் வீரர். "அருமை" என்று பாராட்டிய துறவி, "என்னுடன் ஒரு இடத்துக்கு வா. அங்கு வந்து ஜெயிக்க முடிகின்றதா என்று பார்ப்போம்" என்றார். அடக்க முடியா ஆவலுடன் துறவியைப் பின் தொடர்ந்தார் இளம்வீரர்.

ஒரு பெரிய மலைச்சிகரத்தில் ஏறிய துறவி, மிக உயரத்தில் இரண்டு மலைகளினிடையே நடந்து செல்வதற்காக போடப்பட்டிருந்த சின்னஞ் சிறிய மரப்பாலத்தின் நடுவில் சென்று நின்றார். பாலம் ஒருவர் மட்டுமே செல்ல முடிந்ததாய் இருந்தது. கீழே பாதாளம், கொஞ்சம் சறுக்கினால் மரணம் நிச்சயம். தன் வில்லை எடுத்த துறவி, அம்பைத் தொடுத்து தூரத்தில் இருந்த ஒரு மரத்தின் கனியில் மிகச் சரியாக அடித்தார். அடித்துவிட்டு, "இப்போது உன் முறை" என்றபடி பாலத்தில் இருந்து மலைப்பகுதிக்குச் சென்று நின்றுகொண்டார். இளம் வீரருக்கோ கை, கால் எல்லாம் உதறியது. கனியைச் சரியாக அம்பால் எய்ய முடியவில்லை. அவரது முதுகைத் தடவிக்கொடுத்த துறவி, உன் வில்லில் இருக்கும் உறுதி, மனதில் இல்லை" என்றார்.

கதையின் நீதி: மனவுறுதி இல்லாதவனின் உள்ளம் குழம்பிய கடலுக்கு நிகரானது. மனவுறுதி இல்லாவிட்டால் உலகில் எந்தச் செயலையும் சாதிக்க முடியாது.

*நீ சிறந்தவனாய் திகழ விரும்பினால் தன்னடக்கமும் பணிவும் கொண்டவனாய் இரு.*

# சிவனடியார்கள் சிவபரம்பொருளுக்காக எதையும் செய்யத் துணிந்தவர்கள்

– திரு ஆர்.வி. கந்தசுவாமி அவர்கள் –

சிவனடியார்களான அறுபத்துமூன்று நாயன்மார்களும் கொள்கையால், உணர்வால் ஒன்றுபட்டவர்கள். அவர்கள் சிவனுக்கு அடிமைகள். உடல், பொருள், ஆவி எல்லாம் சிவபெருமானுக்கு அர்ப்பணிப்புச் செய்தவர்கள். இன்பத்திலும் துன்பத்திலும் ஒரே நிலையில் உள்ளவர்கள். "அவனன்றி ஒரு அணுவும் அசையாது" என்ற உறுதிப்பாட்டில் எந்தச் சூழ்நிலையிலும் மாறாதவர்கள். ஈசன்பால் அன்பு என்பதே முடிவான பொருளாக உள்ளத்தில் வைத்திருந்தவர்கள். இறைவனுடைய நாமமும், உருவமும் தங்களுடைய நெஞ்சிலிருந்து ஒருபோதும் நீங்கக்கூடாது என்பதையே குறிக்கோளாக இறைவனிடம் வேண்டி வந்தார்கள். சிவப்பரம்பொருளுக்காக எதையும் செய்யத் துணிந்தவர்கள்.

கருவூரில் சிவகாமி ஆண்டார் என்னும் ஒரு சிவபக்தர் ஒருநாள் சிவபூசைக்காக கூடையில் மலர்களைக் கொண்டுவரும்போது வழியில் வந்த அரசனுடைய யானை, பூக்கூடையைப் பறித்து வீதியில் மலர்களைச் சிதறியது. அதைப் பார்த்த எரிபத்த நாயனார் என்ற சிவனடியார், சிவபூசைக்கு கொண்டு வந்த மலர்களை யானை பாழாக்குவதா? எனக் கடும் சினங்கொண்டு அந்த யானையைக் கோடாரியால் வெட்டிக் கொலை செய்தார். அவருக்கு இவ்வளவு மனத்தைரியம் எங்கிருந்து வந்தது என்பது சிந்திக்க வேண்டியது.

இன்னும் கடவுளுக்காக கண்களைத் தரத்துணிந்த கண்ணப்ப நாயனார், பைரவ முனியாக வந்த பரமனுக்காக பாச மகனையே உணவாகப் படைக்க முன்வந்த சிறுத்தொண்டர், மகேசனுக்கு உரிய மலரை முகர்ந்து பார்த்த மனைவியின் நாசியை அறுத்த கழச்சிங்கர், அன்னம் கொடுக்க மறுத்த மனைவியின் கைகளைத் துண்டித்த கலிக்கம்ப நாயனார் ஆகிய இவர்களின் வரலாறுகளையெல்லாம் மேலெழுந்த வாரியாகப் படிக்கும்போது, கொடூரமான செயல்களாகத் தோன்றும்.

அடியார்களுடைய மனநிலை வேறு. நம்முடைய மனநிலை வேறு.

சொந்தத் தகப்பனாருடைய காலை யாராவது வெட்டுவார்களா? விசாரசருமன் என்னும் சிறுவன் இதைச் செய்தான். சிவபெருமான் இதை ஏற்றுக்கொண்டு சண்டேஸ்வரர் என்கின்ற பதத்தையும் அவனுக்குக் கொடுத்தார். சிவபெருமான் திருக்கோவில்களில் பிரகாரத்தில் மூலவர் அருகே தெற்கு நோக்கி அமர்ந்திருப்பவர் இவரே. திருமூல நாயனார் இவருடைய வரலாற்றை இரண்டாம் தந்திரத்தில் லிங்கபுராணம் என்கின்ற தலைப்பில் ஒரு மந்திரத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"உறுவது அறிதண்டி ஒண்மணற்கூட்டி
அறுவகை ஆன் ஐந்தும் ஆட்டத்தன்தாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழுவால் வெட்டி மாலை பெற்றானே"

திருசேய்ஞலூர் என்னும் நாட்டிலே ஏச்சதத்தர் என்பவருக்கும் பவித்திரை என்பவருக்கும் பிறந்த தவப்புதல்வர் விசாரசருமர். முற்பிறப்பின் பயனாக சிறுவயதிலேயே

வேத ஆகமங்களின் பொருளை உணர்ந்து இறைவன் திருவடிகளில் அன்பு கொள்வதே முத்திக்கு வழி என்றும் அறிந்துகொண்டார்.

ஒருநாள் அவர் பாடசாலைக்குச் செல்லும்போது மாடு மேய்க்கும் இடையன் ஒருவன் ஒரு பசுவைத் தடிகொண்டு அடிப் பதைக் கண்டு மனம் வருந்தி, பசு தெய் வீகப் பிராணி ஆயிற்றே. அதை வருத் தலாமா என அன்பு மேலீட்டினால் மாடு களை மேய்க்கும் தொழிலைத் தானே மேற் கொண்டார். அதுவே இறைவனுக்குச் செய் யும் சிறந்த தொண்டும், வழிபாடும் ஆகும் எனக் கருதினார். பசுக்களை அன்புடன் பாதுகாத்து வளர்த்த காரணத்தால் பசுக்கள் செழிப்புற்று அதிக பாலைச் சுரந்தன. அபரி மிதமாகக் கிடைக்கும் பாலைக் கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்யவேண் டும் என்ற ஆசையால், ஆற்றங்கரையில் மணற்கோவில் அமைத்து, மணலால் சிவ லிங்கம் செய்து, பாலால் அபிஷேகம் செய்து வழிபட்டு வந்தார்.

பால் வீணாகிறது என்று ஒருவன் ஊராரிடமும் விசாரசருமனின் தந்தையிடமும் கூறினான். நடப்பதைத் தானே நேரில் காண விரும்பி மறுநாள் ஆற்றங்கரைக்குச் சென் றார் எச்சதத்தர். வழக்கம்போல் மணலால் லிங்கம் செய்து, பூக்களால் அர்ச்சித்து, பாலால் அபிஷேகம் செய்தார் விசாரசருமன். எச்சதத்தனுக்கு பெரும் கோபம் வந்தது. மகனை ஒரு தடியால் கடுமையாக முதுகில் அடித்தான். தகாத வார்த்தைகளைப் பேசி னான். விசாரசருமர் சிவபெருமானின் அர்ச் சனையில் ஈடுபட்டிருந்தார். வேறு ஒன்றையும் அறியவில்லை. வெகுண்ட எச்சதத்தன் பால் நிரம்பிய குடம் ஒன்றைக் காலால் இடறிப் பாலைச் சிந்தினான்.

இது ஒரு பெரும் பாவம். தந்தை ஆனாலும் தண்டனைக்குரியவன் என எண்ணிய மகன் தந்தையைத் தண்டிக்க ஒரு தடியை எடுக்கும்போது அதுவே ஒரு கோடாரி ஆயிற்று. கோடரியால் தகப்பனின் கால்களை வெட்டி மீண்டும் இறைவன் வழி பாட்டைத் தொடர்ந்தார். சிவபெருமான் அவர் முன் தோன்றி "நானே உனக்குத் தந்தை" என்று சொல்லி விசாரசருமருக்கு சண்டேசுர பதவியை அளித்துத் தான் அணிந்திருந்த கொன்றை மாலையையும் சூட்டினார்.

தந்தை, தாய், மனைவி, மகன் போன்ற உலகப் பற்றுக்களை அறவே நீக்கி இறை வன்பால் ஒன்றித்த மனம் வைக்கும்போது இறைவனே வெளிப்பட்டு அருளுவார் இறை வன்பால் அன்பு வைத்து தம்மை ஒப்புவிக் கும் அடியவர்கள் செய்கைகள் எல்லாம் தவ மாகும். சிவவழிபாடு சிறப்பாக நடைபெறு வதற்கு நாம் மேற்கொள்ளும் காரியங்கள் எல் லாம் சிறந்த சிவபுண்ணியங்களே. அவற்றை நாமும் எம் வாழ்வில் கடைப்பிடிப்போமாக.

---

ஆன்மிகச் சிந்தனைகள் அனைத்தும் மனித மேம்பாட்டுக்காகவே அமைந்தவை. இம்மை, மறுமை வாழ்க்கையை மேம்படுத்துபவை. மனிதன் அறிவோடும், புகழோடும், ஒழுக்கத்தோடும், பக்தியோடும் வாழ வழிகாட்டுவது ஆன்மிகம். இறைவனின் திருவருளுக்கிணங்கி வாழ்வதைத் தவிர ஜீவாத்மாவுக்குத் தனியே சுதந்திரம் கிடையாது. பாதுகாப்பும் கிடையாது. இந்த உண்மையை உணரும்போது சரணாகதி மனப்பான்மை தலையெடுக்கிறது. அவனின்றி ஓர் அணுவும் அசையாது. இறைவனின் கருணையால்த்தான் நாம் ஒவ்வொரு நிமிடமும் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். மனதை இறைவனிடம் நிலை நிறுத்திவிட்டு தனக்கு வாய்த்த உலகக் கடமைகளில் ஈடுபடுபவன் பந்தங்களில் சிக்கிக்கொள்ள மாட்டான். இறைவனை மறந்தால் உலக பந்தங்களில் சிக்கிக்கொள்வோம். மாயை பற்றிக்கொள்ளும். எனவே எப்போதும் இறைவனை நினைக்க வேண்டும். எந்தச் செயல், சிந்தனை, சொல்லிலும் இறைவனை நினைத்து ஈடுபட வேண்டும்.

*உயர்வாகக் கருதினால் மட்டுமே உயர்ந்திட முடியும்.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| சிந்துஜா பாஸ்கரன் | சித்தங்கேணி | 20000. 00 |
| N. சுப்பிரமணியம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| S. சத்தியராம் | ஹற்றன் | 3புட்டி அரிசி |
| கு. சூரியகுமார் | திருகோணமலை | 1000. 00 |
| ரா. புவனேஸ்வரி | பருத்தித்துறை | 10000. 00 |
| கெ. வதனி | உடுப்பிட்டி | 1மூடை அரிசி, மரக்கறி 2000. 00 |
| சி. சிவபாதசுந்தரம் | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி 2000. 00 |
| பு. பிரசாந் | பிரான்ஸ் | 2000. 00 |
| ஜெ. சிறீதரன் | கோப்பாய் | 1000. 00 |
| கதிரவேலு நினைவாக திருமதி சிவபாதசுந்தரம் மூலம் | கோப்பாய் | 10000. 00 |
| V. செல்லம்மா | லண்டன் | 1000. 00 |
| S. கௌரிபாலன் | வவுனியா | 500. 00 |
| கணேஸ் சாயினி | கனடா | 5000. 00 |
| N. சுதாகரன் | சுவிஸ் | 5000. 00 |
| பரிமளாதேவி பத்மராஜன் | ஜேர்மனி | 55யூரோ |
| T. மணிவண்ணன் | உடுப்பிட்டி | 5000. 00 |
| து. கடம்பமூர்த்தி | மாதகல் | 2000. 00 |
| செ. ஜெகதீஸ்வரி ஆசிரியை | மாதகல் | 3000. 00 |
| இ. தவராசா | இமையாணன் | 1மூடை அரிசி |
| க.ச. கணபதிப்பிள்ளை | கைதடி | 2000. 00 |
| க. செல்வராசா குடும்பம் | மல்லாகம் | 4000. 00 |
| திருமதி அ. விஜயகிருஷ்ணன் | மல்லாகம் | 1000. 00 |
| இ. தர்மலிங்கம் | கொடிகாமம் | 10000. 00 |
| சி. மகேந்திரராசா | லண்டன் | 20000. 00 |
| செ. சிவாஜினி | கொழும்புத்துறை | 5000. 00 |
| கே. தர்சிகா | ஆவரங்கால் | 2000. 00 |
| சுமன் வீடியோ | உடுப்பிட்டி | 25000. 00 |
| சி. யோகநாதன் | கனடா | 5000. 00 |
| S. சேரன் | இத்தாலி | 10000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 3000. 00 |
| இ. கஜன் (வனிக்கா மெடிக்கல்) | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| கஜமுகன் சியாமளா | நீர்வேலி | 20000. 00 |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |

*மேன்மையான எண்ணங்களுடன் இருப்போர் எப்போதும் தனித்திரார்.*

| | | |
|---|---|---|
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 5புட்டி பருப்பு |
| திருமதி அ. குணநாயகம் | திருநெல்வேலி | 6000. 00 |
| பா. பாலச்சந்திரன் மயிலணி | சுன்னாகம் | 1000. 00 |
| பாபு வெதுப்பகம் | புன்னாலைக்கட்டுவன் | 5மூடை அரிசி |
| மு. கௌரிகாந்தன் | ஏழாலை | 5000. 00 |
| சீ.சி. கந்தையா | புத்தூர் | 5000. 00 |
| ஜெ. குணாளன் | சங்கானை | 500. 00 |
| மூ. குணநாதன் | உடுப்பிட்டி | 6000. 00 |
| ஸ்ரீ. தர்மினி | கொழும்பு | 2000. 00 |
| த. செந்தூரன் | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| அரன் ரமணன் | டென்மார்க் | 5000. 00 |
| சி. செல்வராசா | உடுப்பிட்டி | 2000. 00 |
| சு. விஜயசீலன் | உடுப்பிட்டி | 1000. 00 |
| கு. சிதம்பரேஸ்வரசர்மா | நீர்வேலி | 1புட்டி அரிசி 1000. 00 |
| த. ஜீவராசா குடும்பம் | வல்வெட்டி | 2000. 00 |
| ம. சபாநாதன் | சுதுமலை | 1000. 00 |
| ச. அன்பழகன் குடும்பம் | நுணாவில் | 2000. 00 |
| வை. இரத்தினசிங்கம் | மானிப்பாய் | 3000. 00 |
| ஆ. நவரெத்தினம் | எழுதுமட்டுவாள் | 1500. 00 |
| வை. தெய்வானை | எழுதுமட்டுவாள் | 1000. 00 |
| ஜீ. நிருஜன் | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| திருமதி அ. ராசமலர் | லண்டன் | 5000. 00 |
| V. பத்மசீலன் | பத்தமேனி | 10000. 00 |
| திருமதி சிவசுப்பிரமணியம் | பத்தமேனி | 5000. 00 |
| க. ஆதித்யன் | உடுப்பிட்டி | 2000. 00 |
| A. பிரதாபன், A. கதிர்காமநாதன் | உடுவில் | 2000. 00 |
| மோகன் மதி | கொடிகாமம் | 5000. 00 |
| ம.செ. சபாநாயகம் | கரவெட்டி | 1000. 00 |
| பிரவீன் துளசி | மட்டுவில் | 2000. 00 |
| த. கந்தசாமி நினைவாக | கொழும்பு-6 | 6000. 00 |
| ப. சஸ்வின் | அராலி | 1000. 00 |
| S. பிரவீனன் | அச்சுவேலி | 5000. 00 |
| கு. சண்முகராஜா | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| நா. அழகராசா | நாகர்கோவில் | 10000. 00 |
| கிருத்திக், காயா, ராஜ்குமார், தவராஜா, சறோஜா | துன்னாலை (கனடா) | 50டொலர் |

(தொடரும்...

# கிளிநொச்சியில் ஞானஒளி ஏற்றிய வடிவேற் சுவாமிகள்

– **திரு ஆ. சிவநாதன்** அவர்கள் –

ஒரு பிரதேசம் வளர்ச்சி அடைந்திருக்கும்போது, வாழ்வதற்கு வசதியும் வளமும் கிடைக்கும்போது அப்பகுதியை நோக்கிய மக்கள் நகர்வு சாதாரணமான விடயமாகும். ஒரு பிரதேசம் காடடர்ந்த பிரதேசமாகவும், பாதுகாப்பற்றதாகவும், அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் அப்பகுதிக்கான மக்களின் நகர்வு அதிலும் பார்க்க கஷ்டப் பிரதேசத்தில் வாழ்ந்தோர்களால் முடியுமேயன்றி மற்றையோர்க்கு முடியாது என்பது வெளிப்படை உண்மை. இவ்வகையில் கிளிநொச்சி குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது அரசாங்கம் விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதற்காக மக்களின் அடிப்படைத் தேவைகளை வழங்கி மக்களைக் குடியேற்றுவதற்கான செயற்பாட்டை வெற்றிகரமாக மேற்கொண்டது.

இந்நிலையில் துறவு வாழ்க்கையை மேற்கொண்ட வடிவேற் சுவாமிகள் தனது குருநாதனின் சமாதி அமைந்துள்ள யாழ்ப்பாணம் கந்தர்மடம் குமாரசாமி வீதியில் அமையப் பெற்றுள்ள சிவகுருநாதபீடத்தில் அமர்ந்து சமய சமூகப் பணிகளில் ஈடுபட்டிருந்தால் எவ்வித இடையூறுமின்றி தன் பணியை நிறைவு செய்திருக்க முடியும். இத்தகைய வாய்ப்பும் வசதியும் கிடைத்த போதும் தூர நோக்கு, விரிந்த சமய, சமூக சிந்தனை, யோகர் சுவாமிகளின் அருள் வாக்கு இவையாவும் ஒருங்கே இணைந்து வடிவேற் சுவாமிகள் கிளிநொச்சியில் வாழ்நாள் முழுவதும் பணிசெய்ய வழிவகுத்ததுடன் கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்திலேயே அவரது சமாதிக் கோவிலும் அமைய வழிவகுத்தது.

இணுவில் பெரிய சந்நியாசியாரின் பிரதம சீடரான காசிநாதனின் இறுதி ஆண் மகனாக 1906ஆம் ஆண்டு அவதரித்தவரே வடிவேல் ஆவார்கள். பெரிய சந்நியாசியாரின் ஆசீர்வாதத்துடன் அவதரித்த வடிவேல் அவர்கள் கருவிலே திருவுடையார். அவரை ஆட்கொண்டு தொன்மை சிவாலயங்களில் ஒன்றான உருத்திரபுரம் சிவாலயம் புனரமைக்கப்பட வேண்டுமென யோக சுவாமிகள் ஞான திருஷ்டியினால் உணர்ந்தார். ஒருநாள் வடிவேற் சுவாமிகள் தோளில் மண்வெட்டியுடன் தோட்டத்திலிருந்து வீடு நோக்கிச் சென்றார். பின்னால் வந்த மாட்டுவண்டி அவரை முந்திச் செல்கிறது. வண்டியின் பின்னாலிருந்த யோகர் சுவாமிகள் அவரை நோக்கினார். இருவரும் முற்பிறப்புத் தொடர்பினால் உள்ளத்தால் இணைந்தனர். வடிவேலரின் பக்குவநிலைகண்ட யோகர் சுவாமிகள் அவர் உடுத்திருந்த வேட்டியை உரித்தெடுத்துக் கொண்டார். அவர்மீது போர்த்திருந்த ஆடையை (இருளை) களைந்து உள்ளிருக்கும் ஒளியைக் காண்பித்தார். ஞான ஒளி பெற்ற வடிவேலரை உருத்திரபுரம் செல்லுமாறு ஆசி கூறினார். நயன தீட்சையும் நிர்வாண தீட்சையும் பெற்ற வடிவேலருக்கு உருத்திரபுரம் செல்லுமாறு குரு உபதேசமும் கிடைத்தது. இவ்வுபதேசமே வடிவேற்சுவாமி கிளிநொச்சி செல்லவும் மகாதேவ ஆச்சிரமத்தை அமைத்து உருத்திரபுரம்

சிவாலயப்பணி மட்டுமன்றி கிளிநொச்சி மாவட்டம் முழுவதும் சமயப் பணி, சமூகப்பணி ஆற்றுவதற்கு வழிவகுத்தது எனலாம்.

யோகர் சுவாமிகள் வடிவேலரை ஆட்கொண்டபோதும் அவரது ஆன்மீக ஈடேற்றத்துக்கு மட்டும் வழிகாட்டாமல் உலகம் நலமுடன் வாழ வடிவேலர் பணி ஆற்றவேண்டுமென சித்தங் கொண்டார். மக்களுக்கு பணி ஆற்றவேண்டுமாயின் முறைப்படி குருவிடம் சமய சாஸ்திரங்களைக் கற்றுத் தேற வேண்டும் என எண்ணி வேதாந்த மடத்தில் சமய தத்துவங்களை கற்குமாறு வழிகாட்டினார்.

இவ்வழிகாட்டலினால் யாழ்ப்பாணத்தில் வளர்ச்சி அடைந்த குரு பரம்பரையினருள் சாஜன் சுவாமிகளின் பரம்பரையினரை அடையும்பேறு வடிவேலருக்குக் கிடைத்தது. இவ்வகையில் சாஜன் சுவாமிகளின் முதல் மாணாக்கரே கனகரத்தினம் சுவாமிகள் ஆவார்கள். அவரின் மாணாக்கரே மகாதேவ சுவாமிகள் ஆவார்கள். இம் மகாதேவ சுவாமிகளை வடிவேலர் அணுகி அவர் ஆசீர்வாதத்துடன் குரு உபதேசமும் பெற்று வேதாந்த ஞான சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்து தலை மாணாக்கராகத் திகழ்ந்தார். பெற்றோரின் கடமை செய்யவேண்டிய ஏக புத்திரனாக இருந்தமையால் குருவினால் வழங்கப்பட்ட காவி வஸ்திரத்தை பெற்றோரின் கடமையை நிறைவு செய்த பின்னரே அணிந்து வடிவேற் சுவாமியானார்.

வடிவேற்சுவாமி அவர்கள் வேதாந்த சாஸ்திரம், பகவத்கீதை, திருமுறை ஆகியவற்றில் மிகுந்த புலமை மிகுந்தவராக இருந்தமையால் கிளிநொச்சியில் அமர்ந்தபோது மாணாக்கர்கள் சூழ்ந்து கொண்டார்கள். அவ்வகையில் சூழ்ந்து கொண்ட மாணாக்கர்களில் ஒருவராகிய திரு த. நல்லதம்பி அவர்கள் கிளிநொச்சி ஜெயந்திநகரில் கிடைத்த ஒரு ஏக்கர் காணியைக் குருநாதரிடம் ஒப்படைத்து அதில் ஆசிரமத்தை அமைக்க இணங்கியமையால் தமது குருநாதரின் பெயரால் 1950களில் மகாதேவ ஆசிரமத்தை அமைத்து அங்கிருந்தவாறு கிளிநொச்சியில் பல பாகங்களுக்கும் சென்று ஆலயங்களையும் கல்விச்சாலைகளையும் அமைப்பதில் ஈடுபட்டார். இவரது மாணாக்கர்களில் இன்னொருவரான திரு வே. கதிரவேலு அவர்கள் வடிவேற்சுவாமிகளின் ஆசீர்வாதத்துடன் ஆதாரக் கல்வி குருகுலத்தை அமைத்து காந்தீய முறையில் ஆதாரக் கல்வியை வழங்க முயன்றார். இதனால் பல பிள்ளைகள் இன்றும் வளமாக வாழ்கிறார்கள். அவ்விடமே தற்போது மகாதேவ சுவாமிகள் சிறுவர் இல்லம் என்ற பெயருடன் இயங்குகிறது.

வடிவேற்சுவாமி அவர்கள் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆலயங்கள், கல்விச்சாலைகள் ஆகியவற்றுக்குச் சென்று மக்களிடத்தில் சமய விழுமியங்களை உணரவும் வாழவும் வழி செய்தார். சுவாமிகளிடம் சரணடைந்த பலர் தமது மனக்குறை நீங்கப் பெற்று பெருவாழ்வு பெற்றனர். பல குடும்பத்தவர்கள் தமது இல்ல சுபகாரியங்களை எல்லாம் சுவாமியின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பித்து நிறைவு பெற்று மனமகிழ்வடைந்தனர். வடிவேற் சுவாமி அவர்களிடம் கல்வி பயின்று ஞான உபதேசம் பெற்று சந்நியாச தீக்ஷை பெற்ற சுவாமி கணேசானந்தா வடிவேற் சுவாமிகளின் சமாதியின் பின்னர் அவரது பணியைத் தொடர்ந்தமை மகாதேவ ஆசிரமத்தின் வளர்ச்சிக்குப் பேருதவியாக அமைந்தது.

இவ்வகையில் வடிவேற்சுவாமி அவர்கள் குருநாதனின் கட்டளையை ஏற்று கிளிநொச்சிக்குச் சென்று தொன்மையான ஆலயங்களைப் புனரமைப்புச் செய்யவும், புதிய ஆலயங்கள் அமையப்பெறவும் வழிவகுத்து மக்கள் வாழ்வியலில் சமய உணர்வை

ஊட்டியமையால் அவரால் இன்றும் கிளி நொச்சி நகரம் ஞான ஒளிபெற்று விளங்கு கிறது எனலாம். தனது வாழ்வை கிளி நொச்சியின் உயர்விற்காக அர்ப்பணித்த வடிவேற் சுவாமிகள் 1990ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 26ஆம் திகதி ஆயிலிய தினமன்று மகா சமாதி அடைந்தார். அவரது நினைவு நாளில் அவரது பெரும் புகழைச் சிந்தித்து உய்தி பெறுவோமாக.

## திருத்தொண்டர் புராணம் அருளிய நாயன்மார்களின் அற்புத வரலாறு

திருத்தொண்டர் புராணம் என வழங்கப்பெறும் பெரியபுராணத்தை அருளிச் செய்தவர் சென்னையை அடுத்த குன்றத்தூரில் பிறந்த சேக்கிழார் பெருமான் ஆவார்.

இவர் மாபெரும் கவிஞராக, புலவராக, அறிஞராக இருந்ததோடு மட்டுமல்லாமல் சோழப் பேரரசின் தலைமை அமைச்சராகவும் பல்லாண்டுகாலம் பணிபுரிந்தார்.

சோழப் பேரரசன் 2ஆம் குலோத்துங்கனுடைய காலத்தில் அவனுக்குத் தலைமை அமைச்சராக இருந்து பணியாற்றிய பெருமை சேக்கிழாருக்கு உண்டு.

திருத்தொண்டர் புராணத்தின் மூலவேராக சமயகுரவர் நால்வருள் ஒருவராகிய சுந்தமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய திருத்தொண்டத்தொகை உள்ளது. அதனால் திருத்தொண்டர் புராணத்துக்கு பெரியபுராணம் என்றும் பெயர் உண்டு.

சைவ சமய வரலாற்றில் நாயன்மார்களிற்கு முக்கிய இடமுண்டு. நாயன்மார்கள் என்பது தலைவர் அல்லது முதன்மையானவர் என்ற பொருளைக் குறித்து நிற்கின்றது. திருத்தொண்டர் புராணத்தில் அறுபத்திமூன்று (63) தனி அடியார்களையும் ஒன்பது (9) தொகை அடியார்களையும் 4286 இனிய தமிழ்ப்பாக்களால் பாடியருளினார் தெய்வச் சேக்கிழார். 63 அடியவர்களின் தொண்டினையும் அவர்கள் காலச் சூழலையும் ஆண்டவன் ஆட்கொண்ட பாங்கையும் ஒன்பது தொகையடியார்களின் இயல்புகளையும், பண்புகளையும் எழுபத்திரண்டு தலைப்புகளில் பாடியருளினார். இக்காவியத்தை ஒரு வரலாற்றுக் கருவூலமாகவும், அறிவுக் களஞ்சியமாகவும் தமிழ்க் கவிதை உலகின் மணிமுடியாகவும் பக்திக் காவியமாகவும் படைத்துள்ளார்.

படிப்போர் நெஞ்சங்களில் பக்திப் பயிரை வளர்த்து உள்ளத்தை உருக்கி, அன்பினைப் பெருக்கி, பண்பினை ஊட்டி வளர்க்கக்கூடியது. சேக்கிழார் பெருமான் பிள்ளைத்தமிழ் பாடிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் "பக்திச்சுவை சொட்டச் சொட்டப் பாடிய கவிஞர்" என்று சேக்கிழார் பெருமானைப் பாராட்டி வணங்கினார்.

நாயன்மார்களின் வரலாற்றையும் சேக்கிழார் செந்தமிழ்ப் பாக்களின் விளக்கத்தையும் இன்றைய சமுதாய ஆன்மீக மக்களிற்கும், அடியவர்களிற்கும் இந்நூல் காட்டும் நல்வழியையும் எடுத்துச் சொல்கின்றன.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்படும் வாராந்த நிகழ்வின்பின் நடைபெறும் அன்னதான நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக அமையும் அறுபத்திமூவர் குருபூசை நிகழ்வில் முருகப்பெருமானையும் ஒருவராக இருத்தி அறுபத்தி நான்கு நாயன்மாருக்கும் நடைபெறும் குருபூசையில் பங்குகொள்ளும் அடியவர்கள் யாவரும் பக்திபூர்வமாக சிவபுராணம் ஓதுவதைக் காணும்போது பக்தி வெள்ளமாக உள்ளத்தை உருக்கும் காட்சியாகும்.

-த. தயாபரன்-

*சுறுசுறுப்புடன் செயற்படுகிறவனுக்குத்தான் இந்த உலகம் சொந்தம்.*

# ஔவையாரின் பாடற் சிறப்பு

(தொடர்ச்சி...

– **திரு மூ. சிவலிங்கம்** அவர்கள் –

**ஒட்டக்கூத்தரின் கர்வம் அடக்கியது**

ஒரு நாள் ஔவையார் வெகுதூரம் நடந்து வந்த அசதியால் உறையூரிலுள்ள வீட்டின் வெளிப்புறத் திண்ணையில் இரு கால்களையும் நீட்டியவாறு அமர்ந்திருந்தார். அவ்வேளை குலோத்துங்க சோழனும் பட்டத்துராணியும் சமஸ்தான வித்துவான் ஒட்டக்கூத்தரும் புகழேந்திப் புலவரும் உடன் பாதசாரியாக உலா வந்தனர். சோழ மன்னனைக் கண்டதும் ஔவையார் மரியாதைக்காக ஒரு காலை மடக்கினார். அடுத்து வந்த புகழேந்திப் புலவர் வந்தபோது மறுகாலையும் மடக்கினார். தொடர்ந்து வந்த ஒட்டக்கூத்தரைக் கண்டதும் தமது இரு கால்களையும் நீட்டினார்.

இதனால் சீற்றமடைந்த ஒட்டக்கூத்தர் அவமானத்தால் ஔவையாரை நோக்கி "ஓ கிழவி இவ்வாறு ஏன் அவமானப்படுத்தினை" என்றார். இதைக் கேட்டதும் ஔவையார் "சோழன் மணிமுடி வேந்தன்; அதனால் ஒரு காலை மடக்கினேன். புகழேந்திப் புலவர் ஒரு மகாவித்துவான்; அவருக்காக இரு கால்களையும் மடக்கினேன். நீயோ கல்வியறிவில்லாத வீண் புலமை பேசும் மூடர்; அதனால் இரு கால்களையும் நீட்டினேன்" என்றார்.

உண்மையாகவே நீரும், புகழேந்திப் புலவரைப் போன்றே கற்ற நிறைவுடைய புலவராகில் சோழனையும் சோழ நாட்டையும் புகழ்ந்து சந்திரனுக்கு உரித்தான ஒரு பதத்தை ஒரு பாடலின் ஈற்றடியில் மூன்றிடங்களில் அப்பதம் வருமாறு பாடச் சொன்னார். அதனை ஏற்ற ஒட்டக்கூத்தர் தமது சோழ மன்னனை முன்னிறுத்தியே பாடலைப் பாடினார். பாடல் இதுவாகும்.

"வெள்ளத் தடங்காச் சினவாளை வேலிக்கமுகின் மீதேறித்
துள்ளி முகிலைக் கிழித்து மழைத்துளியோடிறங்குஞ் சோணாடா
கள்ளக் குறும்பர் குலமறுத்த கண்டா வண்டர் கோபாலா
பிள்ளை மதிகண்டெடன் பேதை பெரிய மதியு மிழந்தானே"

ஒட்டக்கூத்தர் பாடிய பாடலைக் கேட்ட ஔவையார் உமது பாடலில் ஒரு சந்திரன் குறைகிறதே என்று சிலேடையாகக் கூறியதை அறிவோம்.

"ஒட்டா ஒரு மதி கெட்டாய்"

பின்பு புகழேந்திப் புலவரை நோக்கி நீரும் அவ்வண்ணம் பாடக்கடவீர் என்றார். புகழேந்திப் புலவர் தமக்கே உரித்தான நுண்மதியால் பாடிய பாடலை அறிவோம்.

"பங்கப் பழனத்து முழுவர்
பலாவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட் டெறியக் குரங்கிள நீர்
தனைக் கொண் டெறியுந் தமிழ் நாடா!

கொங்கர்க் கமரா பதியளித்த
கோவே ராச குலதிலகா!
வெங்கட் பிறைக்குங் கரும் பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே!"

புகழேந்திப் புலவர் ஔவையார் கேட்ட நிபந்தனைப்படி மூன்று பிறை அமையக் கூடியவாறு பாடினார். இதனைக் கேட்டதும் ஒட்டக்கூத்தர் வெட்கித் தலை குனிந்தார்.

## கூறாமல் சந்நியாசம் கொள்

தென்நாட்டில் ஒருநாள் ஔவையார் நெடுந்தூரம் நடந்து வந்த களைப்பால் ஒரு வீட்டின் வெளித் திண்ணையில் பசியுடன் இருந்தார். அச்சமயம் வெளியே வந்த வீட்டுக்காரனை நோக்கிய ஔவையார் "அப்பனே! எனக்கு மிகுந்த பசியாயிருக்கிறது. உண்ணுவதற்குச் சிறிதளவு கூழாயினும் தந்தால் பசியாறிப் போகலாம் என்றார். கிழவியின் பரிதாபமான நிலையைக் கண்டாலும், தன் மனைவியின் இரக்கமற்ற நிலை நோக்கி பயந்தவனாய் ஔவையை வெளித்திண்ணையிலே இருக்கவிட்டு வீட்டினுட் சென்றான். தன் மனைவி ஏசுவாளோ எனப் பயந்து அவளைச் சாந்தப்படுத்த எண்ணினான். முதலில் அவளின் முகத்தைத் துடைத்து ஒரு பெண்ணைப்போல அவளுக்குப் பேன் பார்த்து தலைசீவி தலையிற் சிக்கெடுத்து ஒப்பனை செய்து பயந்த குரலில் "வெளித் திண்ணையில் ஒரு கிழவி கூழுக்காகக் காத்திருக்கிறாள்" என்றான்.

அச்சமயம் அவனின் மனைவி சீறிப்பாய்ந்து கணவனைத் தூற்றி உன் பெருமைக்கு விருந்துமொரு கேடா? உனக்குத் தொலைக்கிறதுமன்றி ஊருக்கும் தொலைக்கவா? என்று கூறியவாறு கிடந்த பொருட்களால் அவன்மீது வீசி எறிந்து சுளகெடுத்து அவனை அடித்துத் துரத்தினாள். அச்சமயம் வீட்டுத்தலைவன் கடுந்துயரில் அவதியுறுவதை அறிந்த ஔவையார்,

"இருந்து முகம் திருத்தி ஈரொடு பேன் வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப - வருந்தி மிக
ஆடினாள் பாடினாள் ஆடிப்பழ முறத்தால்
சாடினாள் ஓடோடத்தான்"

என்னும் செய்யுளைப் பாடினார். பின்னர் கணவன் மிகவும் வருத்தத்துடன் வேண்டியபோது சற்று மனமிரங்கி உணவளிக்க அழைத்தாள். ஔவையார் உணவருந்த வந்ததும் வேண்டா வெறுப்பாக உணவை வீசிப் போட்டாள். அவள் அன்னமிட்டதை நோக்கிய ஔவையார்.

"காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய் திறக்க மாட்டாதே! - வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி எரிகின்ற தையையோ
அன்பிலா ளிட்ட அமுது"

என்று பாடினார். வீட்டுக்காரன் பின் வந்து வணங்கியபோது ஔவையார் அவனின் இல்வாழ்க்கையை இகழ்ச்சியாகக் கூறி அவனைத் துறவுபூண்டு வெளிச்செல்லுமாறு கூறிய பாடலை அறிவோம்.

"சண்டாளி சூர்ப்ப நகை தாடகையைப் போல் வடிவு
கொண்டாளைப் பெண்ணென்று கொண்டாயே! - தொண்டா!
செருப்படி தான்! செல்லாவுன் செல்வமென்ன செல்வம்!
நெருப்பிலே வீழ்ந்திடுதனேர்"

"பத்தாவுக்கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலும் கூடி யிருக்கலாம் - சற்றேனும்
ஏறு மாறாக யிருப்பனே யாமாயிற்
கூறாமற் சந்நியாசம் கொள்"

"ஏசி இடலி னிடாமையே நன்றெதிரிற்
பேசு மனையாளிற் பேயினிது - நேசமிலா
வங்கணத்தி னன்று வலிய பகை; வாழ்விலாச்
சங்கடத்திற் சாதலே நன்று"

மேற்கூறிய பாடல் மூலம் இல்லற வாழ்வில் கணவன் மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து விருந்து முதலான நல்லறம் பேணி ஈருடல் ஓருயிராய் ஒருமையுடன் வாழ்வதே இல்வாழ்க்கையாகும். ஒளவையார் தாமொரு பெண் இனமானாலும் பெண்ணின் அடக்கம் நற்பண்பு கணவனை அன்புடன் நேசித்து ஒருவரோடொருவர் தமது இன்ப துன்பங்களைப் பகிர்ந்து வரவுக்கேற்பச் செலவு செய்து சிறப்புடன் வாழலாமெனத் தெரிவித்தார். ஒளவையார் காலத்து வாழ்க்கை நெறி பிற்காலத்தில் அருகி வந்துள்ளமை புரிகிறது. இன்றைய நவ காலத்தில் கல்வியறிவும் புரிந்துணர்வும் நாகரிகத்தின் பேரால் வாழ்க்கைத் தரமும் மனித நேயமும் சிறப்படைந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாலு கோடி கவி பாடியது

முன்னொரு சமயம் சோழ மன்னன் தமது சமஸ்தானப் புலவர்களை நோக்கி நாளை பொழுது புலர்ந்ததும் நீவிர் நாலுகோடிக்குப் பாடல்கள் பாடி வரவேண்டுமென ஆணையிட்டான். மன்னனின் ஆணையை மீறமுடியாத புலவர்கள் மிகக் கவலையுடன் தமதில்லமேகினர். தமது பணியை நிறைவு செய்யாவிடின் மன்னனின் கடுந்தண்டனைக்கு ஆளாக வேண்டுமேயென வாடிய முகத்துடன் உடல் சோர்ந்து செய்வதறியாது தயங்கினார்.

அச்சமயம் அவ்வழியே வந்த ஒளவையார் அவர்களின் வாட்டத்தையும் கவலை தோய்ந்த முகங்களையும் நோக்கி அதன் காரணத்தைக் கேட்டார். புலவர்கள் மன்னனின் கட்டளையை விபரித்தனர். அச்சமயம் ஒளவையார் நீவிர் கவலையை விடுங்கள் என்று கூறிவிட்டுப் பின்வருமாறு பாடினார்.

"மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்"

"உண்ணீர் உண்ணீரென்றே உபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்"

"கோடி கொடுத்தும் குடிபிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி பெறும்"

"கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைகாக்
கோடாமை கோடி பெறும்"

மேற்கூறிய பாடல்களைக் கேட்டதும் புலவர்கள் தமது கவலை நீங்கிப் பெரு மகிழ்வடைந்தனர். யாவரும் பொழுது புலர்ந்ததும் மன்னனிடஞ் சென்று நாலு கோடிக்கான பாடல்களை ஒப்புவித்தனர். இப்பாடல்களின் சிறப்பை மெச்சிய மன்னன் புலவர்களுக்குத் தக்க பரிசில்கள் தந்து மகிழ்வடைந்தான். கூழுக்குப் பாடியான ஔவை நலிவுற்ற புலவர்களின் கவலையைத் தமது கல்விப் புலமையால் உய்வித்தார். (தொடரும்...

## மனம் குழப்பத்தில் இருக்கும்போது...!

ஒருமுறை புத்தர் தன்னுடைய சீடர்களுடன் பயணம் செய்துகொண்டிருந்தார். ஒரு ஏரியை எதிர்கொண்டபோது, அங்கிருந்த பெரிய ஆலமர நிழலில் அனைவரும் சற்று ஓய்வெடுக்கும் எண்ணத்துடன் தங்கினார்கள்.

புத்தர் தன்னுடைய சீடர்களில் ஒருவரை அனுப்பி ஏரியில் இருந்து குடிப்பதற்கு நீர் கொண்டு வரச் சொன்னார். சீடரும் தங்களிடம் இருந்த பானை ஒன்றை எடுத்துக்கொண்டு நீர்நிலையை நோக்கி நடந்தார். அந்த நேரத்தில், மாட்டு வண்டிக்காரர் ஒருவர் ஏரிக்குள் இறங்கி, ஏரியைக் கடந்து சென்றார். ஏரி கலங்கிவிட்டது. அத்துடன் ஏரியின் கீழ்ப் பகுதியில் இருந்த சேறும் சகதியும் மேலே வந்து நீரை அசுத்தப்படுத்தி பார்ப்பதற்கே உபயோகமற்றதாகக் காட்சியளித்தது.

இந்தக் கலங்கிய நீர் எப்படிக் குடிப்பதற்குப் பயன்படும்? இதை எப்படிக் குருவிற்குக் கொண்டுபோய்க் கொடுப்பது? என்று தண்ணீரில்லாமல் திரும்பிவிட்டார். அத்துடன் தன் குருவிடம் அதைத் தெரிவித்தார்.

ஒரு மணி நேரம் சென்ற பிறகு, புத்தர் தன்னுடைய சீடரை மீண்டும் ஏரிக்குச் சென்றுவரப் பணித்தார். நீர்நிலையருகே சென்று சீடன் பார்த்தான். இப்போது நீர் தெளிந்திருந்தது. சகதி நீரின் அடியிற் சென்று பதிந்திருந்தது. அந்தப் பானையில் தண்ணீரை அள்ளிக் கொண்டு சீடன் புத்தரிடம் திரும்பினான். புத்தர் தண்ணீரைப் பார்த்தார். சீடனையும் பார்த்தார். பிறகு மெல்லிய குரலில் சொல்லலானார்.

தண்ணீர் சுத்தமாவதற்கு என்ன செய்தாய்? நான் ஒன்றும் செய்யவில்லை சுவாமி! அதை அப்படியே விட்டுவிட்டு வந்தேன். அது தானாகவே சுத்தமாயிற்று! நீ அதை அதன் போக்கிலேயே விட்டாய். அது தானாகவே சுத்தமாயிற்று. அத்துடன் உனக்கு தெளிந்த நீரும் கிடைத்தது இல்லையா? ஆம் சுவாமி! நம் மனமும் அப்படிப்பட்டதுதான்... மனம் குழப்பத்தில் இருக்கும்போது நாம் ஒன்றும் செய்யவேண்டாம். அதை அப்படியே விட்டுவிட வேண்டும். சிறிது கால அவகாசம் கொடுக்க வேண்டும்.

அது தனக்குத்தானே சரியாகிவிடும். நாம் எந்தவித முயற்சியும் செய்ய வேண்டாம். மனதை சமாதானப்படுத்தும் விதத்தைப் பற்றி சிந்திக்கவும் வேண்டாம். அது அமைதியாகிவிடும். அது தன்னிச்சையாக நடக்கும். அத்துடன் நம்முடைய முயற்சியின்றி அது நடக்கும்.

# மானிப்பாய் பெரிய தம்பிரான் ஆலயம்

தொகுப்பு:
-மானிப்பாய் பெரிய தம்பிரான் ஆலய சைவ பரிபாலன அறநெறி மன்றம் –

இந்துமா சமுத்திரத்தின் "சிவபூமி" எனத் திருமூல நாயனாரால் போற்றப்பட்ட நாடே ஈழமணித் திருநாடு ஆகும். மேலும் நாரதா மாமுனி நாவினை வென்ற இராவணன் சைவநெறி தளராது சிவநீறு பூசி இசைத்திட்ட திருநாடாய் விளங்குகிறது. மேலும் நான்கு பக்கமும் கடலலை மோதிடும் அற்புத தீபகற்பமாகவும் விளங்கும் நாட்டின் வடபால் யாழ்ப்பாணத்தின் வடக்குத் திசையில் அழகுசேர் புண்ணிய பதிகளில் புகழ் சூடிட்ட இடமாக விளங்கும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிர்வாகத்தின்கீழ் உள்ள மானிப்பாய் வடக்கு J/137 பிரிவின் கீழ் பெரும் கோயிலாகவும் கிராமிய வழிபாட்டின் உச்சமாகவும் உச்சியோடை வீதியில் பல ஆலமரங்கள், அரசமரங்கள் மற்றும் மருதமரம் சூழ்ந்து இம் மானிப்பாய் பெரிய தம்பிரான் ஆலயம் விளங்குகிறது.

## ஆலய வரலாறு

இவ் ஆலயத்தில் பதினேழாம் நூற்றாண்டு அல்லது அதற்கு முற்பட்ட காலப் பகுதியில் இருந்தே வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. அதுபற்றிய ஆதாரம் எழுத்து வடிவில் காணப்படாதவிடத்தும் வாய்மொழி மூலம் கேட்டு வருகிறோம் அதன் பிரகாரம் மானிப்பாயைச் சேர்ந்த திரு நரம்பர் சின்னத்தம்பி என்பவரால் இவ் ஆலயம் பராமரிக்கப்பட்டு பின்னர் திரு வேலு அம்பலவி என்பவராலும் சங்குவேலியைச் சேர்ந்த திரு வேலுப்பிள்ளை கணபதி என்பவருக்கும் பின்னர், மானிப்பாயைச் சேர்ந்த திரு முருகேசு வல்லிபுரம் என்பவருக்கும் இவ் ஆலயம் பராமரிப்பதற்காக கைமாற்றப்பட்டுள்ளது. எனினும் காலத்திற்குக் காலம் புனர்நிர்மாண வேலைகள் இடம்பெற்றபோதும் 1954ஆம் ஆண்டு புனர்நிர்மாணம் இடம்பெற்றதற்கான வரலாறு இன்றும் எமது ஆலயத்தில் காணப்படுகிறது. மேலும் 1954ஆம் ஆண்டுக்கு முன்னரே இவ் ஆலயம் ஓடு வேய்ந்த கட்டிடமாகக் காணப்பட்டுள்ளது. அதாவது பிள்ளையாருக்கான தனியான மண்டபமும் துணைப் பிள்ளையார், பெரிய தம்பிரான், வீரபத்திரர், நாச்சிமார், கன்னிமார், நீலாசோதியர் முதலான தெய்வங்களுக்கான மண்டபமாகவும் வைரவருக்கான தனியான மண்டபமுமாக மடாலயமாகக் காணப்பட்டுள்ளது. மேற்படி காலப்பகுதியில் பூசாரிகள்மீது தெய்வங்கள் உருவரும் காட்சிகள் (கலையாடுதல்) இடம் பெற்றதாகவும் அறியமுடிகின்றது.

பெரிய தம்பிரானை அடைக்கலமான இடமாகக் கருதப்படும் சாடியடி பெரிய கோயிலின் பின்புறமாக வடமேற்கு மூலையில் கிடுகிலான கூரையுடன் கட்டிடமாகக் காணப்பட்டுள்ளது. அத்துடன் சாடியடிக்கும் பெரிய கோயிலுக்கும் இடையில் குளம் இருந்து பின்னர் அது அழிந்துபோய் உள்ளது. மானிப்பாயைச் சேர்ந்த திரு முருகேசு வல்லிபுரம்

என்பவரால் இவ் ஆலயம் சிறப்பாகவும் பக்தியுடனும் பராமரிக்கப்பட்டு உள்ளதுடன் வாராந்த வெள்ளிக்கிழமைகளில் விளக்கு வைத்தல் என்பனவும் இவராலேயே மேற் கொள்ளப்பட்டதுடன் வைகாசி மாத விளக்கு வைத்தல் எனச் சொல்லப்படும் கொடி யேற்றம், பெரும் பொங்கல் திருவிழா முதலி யன மாகியம்பதியைச் சேர்ந்த பூசாரி ஆறு முகம் என்பவராலும் பின்னர் திருநெல்வேலி யைச் சேர்ந்த பூசாரி ஆறுமுகம் என்பவ ராலும் வெகு விமர்சையாகவும் சிறப்பாகவும் பக்திபூர்வமாகவும் இடம்பெற்றுள்ளது. அத் துடன் திருவெம்பாவை, பங்குனி உத்தரம், சிவராத்திரி போன்றனவும் இக்காலப்பகுதி யில் இடம்பெற்றுள்ளமை சிறப்பம்சமாகும்.

பின்னர் 1980ஆம் ஆண்டுகளில் மானிப்பாயைச் சேர்ந்த திரு கந்தையா தம்பித்துரை என்பவரால் ஆலயம் பொறுப் பேற்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டதுடன் நீண்ட காலமாக பங்குனி உத்தரம், சித்திரைக் கஞ்சி, நவராத்திரி பூஜை, கார்த்திகை தீபம் (விளக்கீடு), திருவெம்பாவை போன்றவற் றுடன் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் விளக்கு வைத்தல் போன்றன திரு தம்பித் துரை, திரு சிவம், திரு சிவக்குமார், திரு சிவரூபன் போன்றோர்களால் மேற்கொள்ளப் பட்டுள்ளது. அத்துடன் திருவெம்பாவை பூஜை திரு க. துரைசிங்கம் அவர்களாலும், பொங்கல் வைபவங்கள் அந்தண சிவாசாரி யார்களான இரத்தினக் குருக்கள், நாகேஸ் வர ஐயா போன்றோர்களாலும் மேற்கொள் ளப்பட்டுள்ளது.

1999ஆம் ஆண்டு திரு கந்தையா துரைராஜா அவர்களால் ஆலயம் பொறுப் பேற்கப்பட்டு பராமரிக்கப்பட்டதுடன் செவ் வாய், வெள்ளிக்கிழமைகளில் திரு இ. வசந்த குமார், திரு து. ரமணன் அவர்களால் நடாத் தப்பட்டதுடன் பின்னர் 2003ஆம் ஆண்டு பாலஸ்தானம் இடம்பெற்று ஆலயம் முற்று முழுதாக புனரமைப்புச் செய்யப்பட்டு 2004 ஆம் ஆண்டு தை மாதம் கும்பாபிஷேகம் ஆகம விதிப்படி மானிப்பாய் மருதடி விநா யகர் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ பரமேஸ்வர ஜெயகுமார குருக்கள் அவர்களின் தலை மையில் வெகு விமர்சையாக இடம்பெற்று தொடர்ந்து 12 நாட்கள் சங்காபிஷேகமும் இடம்பெற்றது. அதன் பின்னர் தினமும் காலை 6.00 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும் திரு இ. வசந்தகுமார் அவர்களால் திரு து. சுரேந்திரனின் உதவியுடன் சிறப்பாக பூசை இடம்பெற்று வருகின்றது. திரு க. துரைராஜா அவர்களின் விடாமுயற்சியால் ஆலயத்திற் கான களஞ்சிய அறை, மடைப்பள்ளி, பிள்ளையார், வைரவர் ஆலய முன் மண்ட பங்கள், சமையலறை, அன்னதான மண்ட பங்கள் எனப் பல அடியவர்களின் உதவி யுடன் ஆலயம் சிறப்புற்றுக் காணப்படுகிறது. மேலும் பிள்ளையார், துணைப் பிள்ளையார், பெரிய தம்பிரான், வீரபத்திரர், நீலாசோதியர், வைரவர் போன்ற தெய்வங்களுக்கான ஐம் பொன்னிலான விக்கிரகங்கள் அவரவர் மடை உபயகாரர்களின் உதவியுடனும் திரு க. துரைராஜா அவரின் சிரத்தையினாலும் 2012ஆம் ஆண்டு வைகாசி மாதம் இணுவில் மகாதேவ குருக்களின் தலைமையில் பிர திஷ்டை நடைபெற்றுள்ளமை சிறப்பம்சம் ஆகும். ஆலயத்தில் தொடர்ந்து தைப் பொங்கல், பங்குனி உத்தரம், வருடப்பிறப்பு, சித்திரைக் கஞ்சி, ஆடிப்பிறப்பு, நவராத்திரி, கார்த்திகை தீபம் (விளக்கீடு), திருவெம் பாவை போன்றன இன்றும் வெகு விமர்சை யாகவும் சிறப்பாகவும் பக்திபூர்வமாகவும் இடம்பெறுகிறது. அத்துடன் வைகாசி மாத பெரும் பொங்கல் விழா சுந்தரமூர்த்தி சர்மா ஜீவசங்கர் ஐயாவினால் மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்று வருகின்றது.

**வைகாசிப் பொங்கல் வழிபாடு**

இவ் ஆலயத்தைப் பொறுத்தவரையில் ஆலயம் ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதிகளில் பூசாரிகளினாலும் பின்னர் அந்தண சிவாச்சாரியார்களாலும் வைகாசி மாதப் பெரும் பொங்கல் நடைபெற்று வருகின்றது. ஆரம்ப காலங்களில் விளக்கு வைத்தல் எனச் சொல்லப்படும் கொடியேற்ற விழா மாலை நேரங்களிலும் தற்போது நண்பகலிலும் இடம்பெற்று வருகின்றது. இக் கொடியேற்ற உற்சவம் சங்குவேலியைச் சேர்ந்த திரு க. சின்னத்துரை குடும்பத்தின் உபயமாகும். கொடியேற்றத்தைத் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் மதியமும் பூஜை நடைபெற்று அன்னதானம் வழங்கப்படும். அடுத்த வெள்ளிக்கிழமை சாடியடி கோயிலில் மாலை வளந்துப் பானையை பெரிய தம்பிரானாகப் பாவித்து அதற்கு வெள்ளை வேட்டி உத்தரியமும் கொண்டு பெரிய தம்பிரானை அலங்கரித்து உருத்திராட்ச மாலைகள் அணிவித்து கடாமுறுக்கி அதனையும் பெரிய தம்பிரானுக்கு அணிவித்துப் பச்சையரிசி, பயறு, தண்ணீர் கொண்டு எட்டுத் திக்கும் பதினாறு கோணமும் கைமாறி வீசுவார். அடுத்து வெற்றிலையில் திரியினைச் சுருட்டி அதனிலும் எட்டுத் திக்கும் பதினாறு கோணமும் நேர்ந்து கைமாறி வீசுவார். இவ்வாறு 3 முறை மேற்கொள்ளப்படும். காவல் செய்து அத்துடன் பெரிய தம்பிரானையும் வெள்ளிப்பிரம்பு, சவுளி, கடுக்கன் செகசரமும் கொண்டு காவல் செய்து அன்றைய தினம் இரவு பெரிய தம்பிரானுக்கு காவலாக அங்கேயே தங்கி மறுநாள் பச்சையரிசி பொங்கி அன்னதானம் வழங்கப்படும் செயற்பாடு ஆதிகாலம் தொட்டு இன்றும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது ஆகும். மாலை பண்டம் எடுக்கும் விழா ஆதிகாலத்தில் சங்குவேலியிலிருந்து எடுத்து வந்ததாகும். பின்னர் அது வழக்கற்றுப் போய்விட்டது. பாரம்பரிய சிறப்பம்சமான "கண்ணீறு" தெளிக்கும் நிகழ்வு இடம்பெற்று தொடர்ந்து விபூதி, பிரசாதம் வழங்கப்படும். பின்னர் மடை உபயகாரர்கள், பொங்கல் அடியவர்கள் மற்றும் பக்தர்கள் புடைசூழ எம்பெருமான் சாடியில் இருந்து பறைச் சத்தம், மேளச் சத்தம், மணிச்சத்தம் போன்ற ஆரவாரங்களுடன் புறப்படுவார்கள். ஆலயச் சூழலிலுள்ள அடியவர்கள் இல்லங்கள் தோறும் பூரண கும்பம் வைத்து படையல் படைத்து அடியவர்களின் பக்திப் பரவசத்தோடு எம்பெருமான் பெரிய கோயிலை வந்தடைவார்.

ஆலயம், ஆலய வீதிகள்தோறும் வர்ண ஒளிகளாலும், எம்பெருமானின் பக்திப் பாடல்களாலும் வண்ணமயமாகக் காட்சி அளிக்கும். அதிகாலை 5.00 மணியளவில் பூஜையுடன் ஆரம்பித்து விநாயகர் பொங்கல், பெரிய தம்பிரானுடைய வளந்துப் பானைப் பொங்கல், பறைச் சத்தம், மேளச் சத்தம் சகிதம் வெகு சிறப்பாக ஆரம்பமாகும். பின்னர் அனைத்து அடியவர்களினது பொங்கல் வைபவம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மடை பரவும் வைபவம் நடைபெறும். அதாவது வாழைக்குலைகள், பலாப் பழங்கள் மற்றும் ஏனைய பழ வகைகளுடன் எம்பெருமானுக்குப் பிடித்த பலகாரங்களுடன் இந்நிகழ்வு சிறப்பாக இடம்பெறும்.

நண்பகல் 12.00 மணிக்கு விநாயகருடைய விஷேட பூஜை இடம்பெறும். ஆலயச் சடங்கு இடையூறின்றி சிறப்பாக நடைபெற வேண்டி தேவதைகளை வேண்டுதல்- "பரிகலம் அழைத்தல்" எனவும் சப்த கன்னிகளை அழைத்தல் எனவும் அழைப்பர். அதாவது,

*அரிய காரியங்கள் பெரிய உழைப்பின்றி ஒருபோதும் முடிந்ததில்லை.*

"கங்காதேவி, சீதேவி, ஆனந்தவல்லி, ஞானப்பிரகாசி
விக்கிரம சுந்தரி இந்தத் தேவத் தவசியர் ஆலத்துப்
படமாட்டாத பல பலபரிகலா பருக்கு
மூன்று வழி கூட்டி..."

பெரிய தம்பிரான் முதலான தெய்வங்களுக்கு விசேட பூஜைகள் இடம்பெற்று பின்பு வைரவப் பெருமானுக்கு பூசைகள் இடம்பெறும். தொடர்ந்து ஊஞ்சல் பாட்டு நடைபெறும். எமது ஆலயத்தின் சிறப்பம்சமான "கண்ணீறு" தெளிக்கும் வைபவம் நிகழும். பின்வரும் கண்ணீறு பாடலுடன் இடம்பெறுவது எமது ஆலயத்தின் சிறப்பம்சமாகும்.

"முந்தி விநாயகனே மருகலால் புத்திரனே காப்பிட்டேன்
முன்முன்னாய் நில்லாமல் ஏகிப்போ கண்ணீறு..."

ஆலய அடியவர்களுக்கு விபூதி பிரசாதங்கள் வழங்கப்படும். தொடர்ந்து அன்னதானம் நடைபெற்று பூஜை இனிதே நிறைவேறும்.

மாலை 4.00 மணியளவில் கொடியிறக்கல் உற்சவத்தை தொடர்ந்து வைரவப் பெருமானுக்கு அபிஷேகம் இடம்பெற்று அந்தண சிவாச்சாரியார் பக்த அடியார்களுக்கு ஆசிகளை வழங்குவார். தற்போது கொடியேற்றம் முதல் பெரும் பொங்கல் வரை அலங்காரத் திருவிழாபோல் தனித்தனி உபயகாரர்களால் தினமும் நண்பகலில் பூஜை வழிபாடுகள், அன்னதானம் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

8ஆம் மடை என அழைக்கப்படும் அடுத்த சனிக்கிழமை மாலை சாடியடியில் அடியவர்களால் பொங்கல் இடம்பெற்று பூஜைகள் நடைபெறும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சித்தங்கேணி, அராலி, மல்லாகம், அளவெட்டி, ஏழாலை, தொல்புரம், சுழிபுரம், உடுவில், பலாலி, மீசாலை, சரசாலை, மாதகல், அச்சுவேலி, சிறுப்பிட்டி, புத்தூர், கரவெட்டி, சிறுவிளான், பொலிகண்டி, கொக்குவில், கைதடி, மறவன்புலோ போன்ற இடங்களில் பெரிய தம்பிரான் ஆலயங்கள் காணப்படுகின்றது.

### நீலா சோதியரின் துதி

தாருலகில் நில வண்ணனாகத் தோன்றித்
தவமுனிவன் காப்பது தீர வந்து
பேருலகில் சிவன் தன்னைப் போற்றி செய்து
பெரிய தெய்வ மென்பதோடு பேரினாலே
சீருவவு கொன்றையந்தார் சிறந்த நாதன்
சில உருவில்லா வளமை செப்புங் கோயில்
பாருலகில் திரு நீலா சோதையன் தான்
பரிந்து துயில் கொள்பவர் வினைகள் தீர்ப்பாம்.

# ஆசை

– **திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு** அவர்கள் –

எமது சமயம் மட்டுமல்ல, மற்றைய எல்லா மதங்களுமே "ஆசை"யை அழித்து ஒழித்து விடு என்று தூண்டுகின்றன.

ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்று கண்டார் புத்தர் பகவான். "அற்றது பற்றெனில் உற்றது விடு" என்றார் ஆழ்வார் களில் ஒருவர். திருமூலர் இன்னும் சில படிகள் மேலே சென்று "ஆசை அறுமின் காள் ஆசை அறுமின்காள் ஈசனோடாயினும் ஆசை அறுமின்காள்..." என்று கடவுள் மீதான ஆசையை கூடக் கண்டிக்கின்றார்.

மண்ணாசை, பெண்ணாசை, பொன் ஆசை என ஆசையை மூன்றாக வகுத்தனர் எமது முன்னோர். இப்போதும் கூறலாம், பொருள்மேல் பற்று, தன்மீது தான் கொண்ட பற்று, எப்படிப் பார்த்தாலும் இவற்றிற்கு அடிப்படை ஆசையேதான். இல்லையா!

பொருளை எடுத்துக் கொள்ளுங் கள்! வெளியே பார்க்கும்போது ஏதோ எம்மை வாழ வைக்கும் எமது அந்தஸ்தை உயர்த்தும் கருவியாகத் தோன்றும் பொருள், எத்தனையோ பேரின் கல்லறைக் கதவு களைத் திறக்க வைத்துள்ளது. இது வரலாறு கண்ட உண்மை. பூச்சிகொல்லி மருந்து உண்டு. அது எமக்கு வெளிப்படையாகத் தெரியும். பொருள், பண்டம், பணம் இவை ஆட் கொல்லி மருந்து என்றார் ஒரு சமணத் துறவி. இந்த இடத்தில் ஒரு கதை சொல்கிறேன்.

காட்டுவழித் துறவி ஒருவர் அவ் வழியே பயணித்துக்கொண்டிருந்தார். பாதை யில் தம்மால் பிற உயிர்கட்குக் குறிப்பாக, ஊர்வனவற்றிற்குத் தீங்கு வந்துவிடக்கூடாதே என்று கையில் வைத்திருந்த தடியால் நிலத் தில் தட்டிக்கொண்டே நடந்தார். திடீரென "ணங்" என்றொரு சத்தம் கேட்டது. தடியால் அந்த இடத்தை விலக்கிப் பார்த்தபோது அங்கே ஒரு புதருள் வெண்கலப் பானை ஒன்று மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அது நிறையத் தங்க நாணயங்கள் பளிச்சிட்டன.

தங்கத்தின் கைவரிசை துறவியிடம் பலிக்கவில்லை. ஐய்யோ! பானை நிரம்ப ஆட்கொல்லி இருக்கிறதே ஆபத்து என்று அந்த இடத்தைவிட்டு ஓடித்தப்பினார் துறவி.

அதே நேரம் அதே வழியால் வந்த திருடர் இருவர் கண்களுக்கு அகப்பட்டது இந்தப் பானை. வேட்டைதான். இருவரும் அதைக் கொட்டி எண்ணிப் பங்கிடுவது எனத் தீர்மானித்தனர். இரவு வரும்வரை காத்திருந்து இருட்டினிலே ஊருக்குள் பானையுடன் செல் வோம் என்பது அவர்களது முடிவு. மிக்க நல்ல கருத்தொருமித்த முடிவு.

ஆனால் பசி இருவரையும் வாட்டி யது. ஊருக்குள் போய் ஒருவர் உணவு வாங்கி வருவது என முடிவும் எடுத்தனர். யார் பானையோடு இருப்பது? யார் உணவு வாங்கச் செல்வது? தனி ஒருவனைப் பானை யுடன் விட்டுச்செல்ல அவர்களுக்குள் நம் பிக்கையின்மை வந்துவிட்டது. பானையுடன் இருப்பவன் தப்பி ஓடிவிட்டால்? கடைசியில் பிள்ளைகுட்டி மனைவிமீது சத்தியம் வாங்கிய

பின் ஒருவனைப் பானையுடன் காவலாக அமர்த்திவிட்டு மற்றவன் வேகமாக உணவு வாங்கச் சென்றான். ஆசை யாரை விட்டது?

அதுவும் பொன்னாசை. தங்க நாண யங்கள் பானை நிரம்ப. திடீரென பக்கத் திலே நின்ற மூங்கிலைப் பிடுங்கி கத்தியைப் போல் கூராக்கி வைத்துக்கொண்டான், தங் கத்துக்காகக் காவல் இருந்தவன். உணவுப் பொதியுடன் வந்தவன் உணவைக் கொடுத்து விட்டு நிமிர முன், கூரிய மூங்கிலை அவன் வயிற்றுள் பாய்ச்சினான். அலறி மண்மேல் சாய்ந்தான் குத்துப்பட்டவன்.

நம்பிக்கைத் துரோகம், ஒரு கணம் சிந்தித்தான் கொலை செய்தவன். மறு கணம் பொன்னாசை வென்றது. இறந்தவன் கொண்டு வந்த உணவை உண்டு பின் தங்கத்தோடு தப்பியோடி விடுவோம் என்று அவசர அவசர மாக உணவுப் பொதியை அவிழ்த்துப் பசி யாற உண்டான். அப்பாடா பசி மயக்கம் தீர்ந்தது. ஆனால், ஆனால் என்ன? வேறேதோ ஒருவித மயக்கம் அவனைத் தழுவியது. தலை சுற்றியது. கண்கள் இருண்டன. சரிந்து விழுந்தான் அவன். உணவுப் பொதி கொண்டு வந்தவன் உணவோடு இவனைக் கொல்ல விஷத்தையும் கலந்து வைத்த செய்தி இவனுக்குத் தெரியுமா என்ன? எனவே மிஞ்சியது தங்கப் பானையின் இரு பக்கத் திலும் இரு கொலைகாரப் பிணங்கள்.

காலையில் அந்தவழி சென்ற அதே துறவி மாலையில் அதே வழியால் திரும்பி வந்துகொண்டிருந்தார்.

ஐயனே! ஆட்கொல்லி இருவரைக் கொன்றுவிட்டது. இன்னும் எத்தனை பேரோ! தொடர்ந்து வேகமாக நடந்தார் துறவி.

பொருளாசைக்கு அடிபணியாதவன் துறவி!
பொருளின் தேவையை வென்றவன் ஞானி!

இவர்களுள் நாம் எந்த வகை? சிந்திப் போமா?


**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

# நந்தனின் பக்திச்சுவை

– **திரு பு. கதிரித்தம்பி** அவர்கள் –

தில்லையில் அந்தணர்கள் தீமூட்டி, நந்தன் வருகையை எதிர்பார்த்து நின்றனர். தில்லையம்பதியின் தெற்கு வாசலில் அந்தணர்கள் வேதம் ஓதி இருகை கூப்பித் தொழ, நந்தன் தீயின் ஊடாக தில்லைக் கூத்தன் திருவடியை வணங்கி, இறைவனுடன் இரண்டறக் கலந்தான். இவ் அதிசயத்தை, பிராமணர்கள் மாத்திரமன்றி வியாக்கிரபாதர், பதஞ்சலி முனிவர் போன்றவர்கள் கண்டு பேருவகை அடைந்தனர். தேவர்கள் பூமாரி சொரிந்தனர். இதனால் நந்தனின் இறைபக்தி உணரவைக்கப்பட்டது. எனவே இறையருளுக்கு ஈடாக உலகில் ஏதும் இல்லை.

எமது சமயம் "அன்பே சிவம்" என்று கூறுகின்றது. இறை அன்புள்ளவர்களை இறைவன் தானே வந்து ஆட்கொள்ளுகின்றான். காட்டவராயர் என்னும் மன்னன் கட்டிய கோவிலின் கும்பாபிஷேக தினத்தை மாற்றி இறையன்பு கொண்டு மனத்தில் பூசலார் கட்டிய திருக்கோவிலுக்கு எழுந்தருளி கும்பாபிஷேகத் திருவிழாவை நடத்தி வைத்தமை, அடியானின் பக்தியினை உலகிற்குக் காட்டுகின்றது.

இந்த வகையில் தவமுனி நந்தனாரை வரவேற்ற தில்லைவாழ் அந்தணர் மூவாயிரம் பேருக்கும், தில்லைக்கூத்தன் கனவில் அருளியிருந்தார். தில்லைச் சிவன் அருளிய கனவைக்கேட்ட அந்தணர்கள், "இது என்ன அதிசயக் கனவு. தவமுனி நந்தனார் யார்? அவரைப் பற்றி இன்றுவரை அறிந்திலோம், எம்பிரானின் திருவிளையாடலை யார் அறிவார்?" எப்போது தவமுனி நந்தனார் வருவார் என இமை கொட்டாது தீமூட்டி எதிர்பார்த்துக் காத்து நின்றனர் அந்தணர்கள். நந்தனார் நாலுமுழ வேட்டி உடுத்து, தோளில் உத்தரீயம் அணிந்து, மெலிந்த தோற்றத்துடன் விபூதி நெற்றியிலும் மார்பிலும் துலங்க உச்சியில் கூப்பிய கையனாய், வாய் பிதற்ற, இறைவனைக் காணவேண்டுமென்ற அவாவுடன் விரைந்து நடந்து தீ மூட்டிய தெற்கு வாசலுக்கு வருகை தருவதைக் கண்ட அந்தணர்கள் மெய் சிலிர்க்க இருகை கூப்பி, தலை தாழ்த்தி, வணக்கம் தெரிவித்து, தீயின் ஊடாக கோவிலுக்குச் செல்வதற்கு வழி வகுத்தனர். நந்தனார் கண்ணீர் மல்க இரு கைகளும் உச்சிமேல் குவித்த வண்ணம் தீயின் ஊடாக இறைவன் இருப்பிடத்தை அடைய, இறைவன் "மகனே, வா!" என அழைத்து தன்னடி சேர்த்துக்கொண்டார். இக்காட்சியைக் கண்ட அந்தணர்களும் பதஞ்சலி வியாக்கிரபாதரும், ஏனைய சிவனடியார்களும் ஆனந்தக் கண்ணீர் மல்கினார்கள்.

அப்பர் சுவாமிகள் அருளிய பின்வரும் பாடலைப் பாருங்கள்.

"சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போமல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லாராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"

எனவே இறைவனுக்குச் சாதியில்லை என்பது உணர்த்தப்பட்டு, இறை அன்புடையவன் உயர்ந்த சாதி என அறிய வைக்கின்றார்.

தமிழை அழியாது வளர்த்த ஔவைப் பாட்டியார்

"சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவாநெறி முறையில் மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதோர்
இழி குலத்தோர் பட்டாங் கினுள்ளபடி"

ஏழைகளுக்கு இட்டு உண்போர் உயர் குலத்தவரென அழைக்கின்றார். கொடாதவர்கள் இழி குலத்தவரென அறிய வைக்கின்றார்.

கற்ற பேரறிஞர்களும், இறை அன்பு உடைய அடியவர்களும் தொழிலைக் கொண்டு சாதி வகுத்தமையை தவறென இயம்புகின்றனர். எனவே இறை அன்புடைய பெரியோர்களே, இறைவன் ஒருவன்தான் பெரியவன் என எண்ணி இறை வழிபாடுகளில் ஈடுபடுங்கள். எஜமான் வீட்டில் அடிமையாக வயல் வேலை செய்து வந்த நந்தனின் இறை அன்பை அவனால் அறிய முடியவில்லை. தில்லைச் சிவனை ஒருமுறை தில்லை சென்று தரிசிக்க அனுமதி தாரும் ஐயா எனப் பலமுறை கேட்டும், வயல் செய்கையே நோக்காகக் கொண்ட எஜமான், நாளை தருகிறேன், நாளை தருகிறேன் எனப் பலமுறை கூறி ஏமாற்றினான். ஆனால் நந்தனாரோ தில்லையம்பதி இறைவனிடம் அளவு கடந்த பக்திகொண்டு, எப்போது அனுமதி தருவாரென எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில், நெல் அறுவடை முடிந்ததனால், தில்லைக்கு நந்தா சென்றுவாவென அனுமதி வழங்கினார். இந்த வார்த்தையைக் கேட்டதும், நந்தன் அளப்பெரும் உவகை அடைந்து ஆனந்தக் கூத்து ஆடினான். தில்லைச் சிவனைக் கண்டதுபோல அவன் மனம் பூரித்தது. நந்தன் நீராடினான் தனக்குரிய நாலுமுழ வேட்டியை அரையில் கட்டினான். தோளில் உத்தரியத்தையும் போட்டுக் கொண்டான். நெற்றியிலும் மார்பிலும் விபூதி நிறைய அணிந்தான். சிவ நாமங்களை கணப்பொழுதும் மறவாது ஓதிக்கொண்டிருந்தான். தில்லை செல்ல தனது எஜமானை வணங்கி சென்று வருகிறேன் என விடையும் பெற்றுக்கொண்டான். தில்லையில் தெற்கு வாசலை அடைந்தான். தீமூட்டி இருப்பதையும் அந்தணர்கள் கைகூப்பியபடி நிற்பதையும் கண்டு, பேருவகை அடைந்து அந்தணர்களைத் தொழ அந்தணர்கள் "தங்களுக்கே தீமூட்டப்பட்டதென்பதை அறிய வைத்தனர். தவமுனி நந்தனார் சிரமேல் கைவைத்து எம்பெருமானை நினைத்தபடி தீயின் ஊடாக இறைவனை அடைந்து இரண்டறக் கலந்தார்.

## சந்நிதி வேலன் கொடியேற்றம் சஞ்சலம் தீர்க்கும் மருந்தாகும்

சந்நிதி வேலன் கொடியேற்றம்
சஞ்சலம் தீர்க்கும் மருந்தாகும்
எந்நிதி எமக்குக் கிடைத்தாலும்
எதிலும் நிம்மதி கிடைக்காது
கந்தனுக்குக் கொடியே றிவீட்டால்
கவலைகள் எல்லாம் தீர்ந்துவிடும்
வந்த வினைகள் பறந்துவிடும்
வாழ்வில் நிம்மதி கிடைத்துவிடும்.

-வ. யோகானந்தசிவம்-

# அன்னையர் தினம்

– **திருமதி தவேந்திரநாதன் வசந்தகுமாரி** அவர்கள் –

கடந்த வைகாசி மாதம் 12ஆம் திகதி அன்னையர் தினம் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. வானொலி, தொலைக்காட்சி, முகநூல் போன்றவற்றில் எல்லாம் அன்னையரைப் போற்றிப் புகழ்ந்து வியந்து பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் பிரமிக்கக் கூடிய வகையில் அன்றைய தினம் கடந்துபோனது எனலாம். இந்நிகழ்ச்சிகளில் பலவற்றைக் கேட்க, பார்க்க முடியாதுவிட்டாலும் அன்றைய தினம் இரவு 7.30 மணியளவில் டான் தொலைக் காட்சியில் சொல்லாடுகளம் என ஒரு நிகழ்ச்சித் தொகுப்பினைப் பார்க்கக்கூடிய வாய்ப்புக் கிட்டியது. இச் சொல்லாடுகளத்தின் கருப்பொருள் அன்னையர் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற ஒரு தலையங்கமாக இருந்தது. நிகழ்ச்சியை ஆரம்பத்தில் இருந்து பார்க்க முடியாவிட்டாலும் நான் தொலைக்காட்சிப் பெட்டியை அழுத்தியதும் ஒரு விடயத்தை ஒரு உளவள ஆசிரிய ஆலோசகர் மிகவும் வேதனையுடனும் விறுவிறுப்புடனும் தனது கருத்தை வெளிப்படுத்திக்கொண்டிருந்தார்.

இக்களத்தில் பங்குபற்றிய ஒரு இளம் வயது உத்தியோகத்தரின் கருத்து அவரை இவ்வாறான நிலைக்குள்ளாக்கியது என்பதைப் புரிந்துகொண்டேன். இவ்விடயத்தை ஞானச்சுடரில் ஏன் குறிப்பிட விளைகின்றேன் எனில் ஞானச்சுடர் மலரானது ஆன்மீகத்துக்கூடாக சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனும் நோக்கில் மட்டும்தான். அவ் இளைஞனின் கூற்று குழந்தையைப் பெற்று பொலித்தீன் பைகளில் கட்டித் தெருவில் வீசிவிடும் பெண்களை எவ்வாறு அன்னையர் எனப் போற்றுவது? இக்கேள்வி என்னையும் சற்று சிந்திக்க வைத்தது. ஒரு சமூகத்தில் பல அவமானங்களைத் தாண்டி எத்தனையோ பெண்கள் பல சவால்களுக்கு முகங்கொடுத்து வாழ்ந்து வருகிறார்கள். ஆனாலும் ஒரு குழந்தையைப் பெற்று தெருவில் வைத்துவிட்டு தலைமறைவாவது என்பது ஒரு தாய்மையின் உச்சக்கட்டக் கொடூரமான ஒரு நிலை என்றுதான் குறிப்பிட வேண்டும். இக் கேள்விகளை தொடுத்த இளைஞனிடம் நான் கேட்கின்றேன், இவ்வாறான கொடுமையான நிலையை உருவாக்குவதில் ஆண்களின் பங்களிப்பு இருக்கவில்லையா? மகா பாரதத்தில்கூட கர்ணனை பேழையில் கட்டி கடலில் விட்டபொழுது ஏற்பட்ட அத்தாயின் நிலையை மிகவும் சிறப்பாக விபரிக்கப்படுகின்றது. அன்று குந்திதேவியின் வயிற்றில் கர்ணன் உருவாக்கப்பட்டான். அதற்கு யார் காரணம்? சிந்தியுங்கள்!

எல்லாத் தவறுகளையும் பெண்மையின்மீது சுமத்திவிட்டு சுகமாகத் தப்பிக்கொள்ளும் ஆண் சமூகம் இருக்கும்வரை வீதியில் வீசப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை கூடுமே தவிர குறையப்போவதில்லை. பெண்களைப் போகப் பொருட்களாகத்தான் இச் சமூகம் இன்று நோக்குகின்றது. இதனால்த் தான் பெண் தனது பெண்மையை இழக்கின்றாள். பொறுப்பற்ற கணவன்மாருடன் குடும்பம் நடாத்தி கூலி வேலைக்குப் போய் தான் பெற்ற பிள்ளைகளை வளர்த்தெடுக்க ஒரு தாய் படும் துன்பங்கள் சொல்லில் அடங்காது. அலுவலகத்திலும் சரி தொழில்

செய்யும் இடங்களிலும் சரி ஒவ்வொரு பெண்ணும் எவ்வளவு தூரம் இவ் ஆண் சமூகத்தால் சீரழிக்கப்படுகின்றாள் என்பதை அவள் வெளியில் கூறப்போவதில்லை. அவளைச் சீரழிப்பவர்களும் நல்லவர்களாக வாழ்ந்துகொண்டே இருப்பார்கள்.

சுவாமி இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் போல தனது தாயாக தனது சகோதரியாக எண்ணுகின்ற ஆடவர்கள் சமூகத்தில் எத்தனைபேர்? தனது மனைவியைக் கடைசிவரை அடுத்தவரிடம் கடமைப்படாது காத்து வருபவர்கள் எத்தனைபேர்? துரியோதனன் அவையிலே திரௌபதை துயில் களையப்படும்போது பார்வையாளர்களாக இருந்த அந்தப் பஞ்ச பாண்டவரே இப்படித் தான் வாழ்ந்தார்கள் என்றால் எம்மவர்கள் எவ்வளவு?

ஒரு பெண் திருமண பந்தத்தால் இணையும்போது பலவிதமான கௌரவமான சட்டங்கள்பூட்டி பெண் என்பவள் இப்படித் தான் வாழ வேண்டும் எனும் எண்ணத்துடன் வாழ்க்கையை ஆரம்பிக்கிறாள். அக்கட்டுக் கோப்புக்களில் வாழும் பெண்கள் பல உளவியல் ரீதியான நெருக்குதல்களுடன் தனது வாழ்நாளைக் கழித்துக்கொண்டிருக்கிறாள். இவர்களது உண்மைத் தன்மையை தன்னுடன் நெருங்கிப்பழகும் ஒரு பெண்ணிடம் தான் ஒப்புவிக்க முடியும். இவ்வாறான பல்வேறுபட்ட பெண்களுடன் நேரடியாக பழகக்கூடிய ஒரு தொழில் எனக்கு இறைவன் வகுத்ததன் காரணமாக அன்னையர் தினத்தை உளமாரக் கொண்டாடியவர்களுக்கு நன்றி கூறுவதுடன், பெண்மையை இழிவுபடுத்தும் இச் சமூகத்திற்கு வேண்டுகோள் ஒன்றையும் விடுக்கின்றேன். பெண்கள் என்றும் புனித மானவர்கள், அவர்களைக் களங்கப்படாது பேணிப் பாதுகாக்கும் முழுப்பொறுப்பும் ஆண் சமூகத்திடமே உள்ளது. எமக்கு ஏற்படும் பழி பாவங்கள் தங்களையும் சாரும். ஆகவே இவ் அன்னையர் தினத்தினைத் தொடர்ந்து போற்றி இவ்வையகம் வாழ் வாங்கு வாழ வழி அமைத்துக் கொடுங்கள் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

ஒரு சமூகத்தின் கண்கள் பெண்கள் தான் என்பது முற்றும் உண்மையான விடயம். இதனால்த்தான் பூமியைத் தாயாகவும் நீரைப் பெண்மைக்கும் ஒப்பிட்டுப் பார்க்கும் அதேவேளை தீக்கும் பெண்மையை ஒப்பிடுகிறார்கள். பஞ்ச பூதங்கள் அனைத்திலும் பெண்மையைக் கண்டு வழிபடும் எமது பாரம் பரியம் என்றும் போற்றப்பட வேண்டிய ஒன்றாகும். இந்த வகையில் எமது சந்நிதியான் ஆச்சிரமமும் ஒவ்வொருவருடைய குடும்பக் கஷ்டங்களை உணர்ந்து பெண்களிற்கும் பெண் பிள்ளைகளுக்கான கல்விச் செயற் பாட்டிற்கும் மிகவும் உறுதியாக நிற்கின்றது. பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு மாதாந்தம் கல்விச் செலவாக பெறுமதியான காசோலைகள் வைப்பில் இடப்படுகின்றது.

ஒரு கல்வி கற்ற சமூகத்தில் தலை நிமிர்ந்தால் மட்டுமே சமூகம் நிமிர்ந்து நிற்கும் என்ற எமது மதிப்பிற்குரிய மோகன தாஸ் சுவாமி அவர்களின் எண்ணத் தோற்றத்தினால் பல குடும்பங்கள் வாழ்வு பெற்று உள்ளன. அவரைப்போல் எமது சமூகத்தில் ஓர் ஐம்பது தர்ம சிந்தனையாளர்கள் எண்ணுவார்களாயின் பெண்மையும் போற்றப்படுவதுடன் மேற்கூறிய சமூகச் சீரழிவுகளும் நிறுத்தப் படும் எனக் கூறிக்கொண்டு மீண்டும் ஒரு வாய்ப்பு எழுதுவதற்கு கிடைக்கவேண்டும் என்று எல்லாம் வல்ல எனது வேற் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

*உள்ளத்தின் சிறந்த நலன்களை நாடுங்கள். மற்றவை தாமாக வந்து சேரும்.*

# படங்கள் தரும் பதிவுகள்



ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



உன்னதமான ஒவ்வொரு வேலையும் முதலில் முடிந்ததாகவே தோன்றும்.

# கதிர்காம யாத்திரை

## -எனது அனுபவம்-

– **செல்வி சி. நிலா** அவர்கள் –

இலங்கையிலே புகழ்பெற்ற முருகன் ஆலயங்களாக நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம், மாவிட்டபுரம் கந்தசாமி கோயில், செல்வச்சந்நிதி முருகன் கோயில், மண்டூர் முருகன் ஆலயம், வெருகல் கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், உகந்தைமலை முருகன், கதிர்காமம் முருகனாலயங்கள் பிரசித்தி பெற்று விளங்குகின்றன. இத்தனை முருகன் ஆலயங்கள் இருந்தாலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதாக செல்வச்சந்நிதி - கதிர்காமம்- உகந்தை முருகனாலயங்களைக் கூறலாம். சந்நிதி முருகனுக்கும் கதிர்காமத்திற்கும் இருக்கும் தொடர்புபோல் உகந்தை மலை முருகனோடு கதிர்காமத்தையும் ஒன்றிணைக்கலாம்.

கதிர்காமக் கொடியேற்றம் என்றால் சந்நிதியில் இருந்து வேல் அனுப்பும் வைபவம் வெகு விமரிசையாக நீண்டகாலமாக நடைபெற்று வருவது யாவரும் அறிவர். அதேபோன்று கதிர்காமத் தீர்த்தத்தன்று இரவு வேல் திரும்பவும் சந்நிதி ஆலயம் தேடி வருவதும் ஒரு நீண்டகால மரபு. இவ் இரு தினங்களிலும் வேல் அனுப்பும் வைபவம் மிகவும் பக்திபூர்வமாகவும், பார்ப்பதற்கு உணர்ச்சிகரமாகவும் இருக்கும். அடியார் கூட்டத்தின் "அரோகரா" கோஷம் விண்ணைப் பிளக்கும்.

இத்தகைய தொடர்புபட்ட இரு ஆலயங்களின் பூசை வழிபாடுகள்கூட ஒன்றாகவே காணப்படுகின்றன. கதிர்காமத்தில் பூசை செய்பவர்களை கப்புறாளை என்றும் செல்வச்சந்நிதியில் ஐயர் என்றும் அழைக்கிறோம். இரு ஆலயங்களிலும் வழிவழியாக வந்த சந்ததியினரே இப்பூசை வழிபாடுகளை மேற்கொள்கின்றனர். மந்திரம் எதுவும் இல்லாமல் வாயினை வெள்ளைத் துணியினால் கட்டி செய்யும் பூசையானது பக்தர்களின் மனம் முருகனோடு ஒன்றி வழிபடுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

கதிர்காமக் கந்தன் ஆலய உற்சவத்தையொட்டி செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து அடியார்கள் பாதயாத்திரையை ஆரம்பிப்பது வழக்கம். வருடா வருடம் வரும் வைகாசி மாத பௌர்ணமிக்கு ஒரு வார காலத்திற்கு முன்பாக சந்நிதி ஆலய முன்றலில் இருந்து இப் பாத யாத்திரை புறப்படும். நாட்டில் இடம்பெற்ற வன்செயல்களின் முன் இருந்த காலங்களில் இப் பாத யாத் திரை செல்லும் அடியார்கள் சந்நிதி ஆல யத்தில் காலைப்பூசை நிறைவடைந்ததும் ஆலய முன் வீதியில் வரிசையாக கிழக்கு மேற்காக அமர்ந்திருப்பார்கள். சந்நிதியைச் சூழவுள்ள மக்கள் ஒவ்வொரு சிறிய பனை ஓலைப் பெட்டியினுள் அவர்களுக்குரிய காலை உணவை வழங்கி வழியனுப்புவது வழமை என்றும் எமது குடும்பத்தினரும் இச்செயற்பாட்டில் ஈடுபட்டதாக எனது பெற்றோர் பாத யாத்திரை நினைவுகளை எம்முடன் பகிர்ந்துகொண்டுள்ளனர். எமது தாயார் கூறியதன் பிரகாரம் ஆரம்ப காலங்களில்

*வேகமாக முடிவு எடுப்பதைவிட விவேகமாக முடிவு செய்.*

சந்நிதி ஆலயத்தில் ஜேர்மன் சுவாமி (கௌரிபாலா) அவர்களின் வழி நடத்தலில் அடியார்கூட்டம் புறப்பட்டு கதிர்காமத்தை அடையும். அவரது மறைவின் பின் அவரோடு இணைந்து பாதயாத்திரையில் ஈடுபட்டுவந்த அமெரிக்கரான பற்றிக் ஹரிகரன் அடியார்களை வழிப்படுத்தி வந்ததாகவும் எவ்வித இடையூறுமின்றி அக் காலங்களில் இப்பாதயாத்திரை இடம்பெற்றது என் றும் அடியார்கள் இன்றும் கூறுவதைக் கேட்டுள்ளோம். நாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக சில காலம் தடைப்பட்டிருந்த இப் பாத யாத்திரை நிகழ்வானது அடியார் களின் உத்வேகத்தினால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு பாத யாத்திரையின்





மகிமையை உலகிற்கு உணர்த்தி வருகின்றது. கடந்த ஆறு, ஏழு வருடங்களாக பாதயாத்திரை யில் ஈடுபடும் அடியார்கள் சந்நிதி ஆலயத்தின் பூசை வழிபாடுகள் நிறைவடைந்தபின் சந்நிதி யான் ஆச்சிரமத்தை வந்தடைவார்கள். ஆச்சிரம சுவாமிகளும் அவர்களை வரவேற்று அவர் களுக்குரிய காலை உணவினை வழங்கியபின் ஆச்சிரம பூசை அறையில் பூசை வழிபாடுகளை முடித்து அடியார்களின் வழிச் செலவுக்கென ஒரு தொகை நிதியினை அளித்து அவர்களை வழி அனுப்புவது வழமை. இதுமட்டுமன்றி அவர்களது பயணம் சிறப்பாக அமைய இடை இடையே பல ஏற்பாடுகளையும் செய்து தானும் தனது குழுவினருடன் நேரில் சென்று அவர்களது தேவைகளை நிறைவு செய்வதும் வழமையானதாகும்.

கதிர்காமக் கொடியேற்றம் ஆரம்பமானதும் ஆச்சிரமத்திலிருந்து வருடா வருடம் தமது செலவிலேயே ஏறக்குறைய 35 பேர் வரையில் சுவாமிகள் வாகனமொன்றில் அடியார்களை அழைத்துச் செல்வது வழக்கம். எனக்கும் இவை எல்லாவற்றையும் பார்க்கும் பொழுது கதிர்காமத்திற்கு நானும் போக வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். கதிர்காமக் கந்தனை வணங்குவதற்கு அவனது அருளும் வேண்டுமல்லவா. ஏதோ ஒரு வகையில் சுவாமியின் அழைப்பின் பேரில் எனக்கும் சந்தர்ப்பம் கிட்டியது. சுவாமிகளால் அழைத்துச் செல்லப்படும் அடியார் கூட்டத்துள் உள்வாங்கப்பட்டு 2011இல் இருந்து இவ்வருடம் (2019) வரையில் எனது கதிர்காமப் பயணம் வருடா வருடம் தொடர்ந்து கொண்டே இருக் கின்றது.

எனவே ஒவ்வொரு பயணத்தின்போதும் எனக்கு உண்டான அனுபவங்களை வாசகர் களாகிய உங்களுடன் பகிர ஆவலாக உள்ளேன். திருவருளோடு குருவருளும் இணைந்து செய்த அற்புதங்களைத் தொடர சந்நிதி வேலவன் அருள வேண்டும்.

(தொடரும்...

# ஆவணிமாத வாராந்த நிகழ்வுகள்

**02.08.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**
சொற்பொழிவு :- "நினைத்ததைத் தரவல்லது திருமுருகாற்றுப்படை"
வழங்குபவர் :- திரு வே. சிவகுருநாதன் அவர்கள்
[காரைநகர்]

---

**09.08.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**
விடயம் :- "பக்திப்பாடல்"
வழங்குபவர் :- திரு செ. யோகராஜா குழுவினர்
(பக்கவாத்திய சகிதம்)

---

**16.08.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**
சொற்பொழிவு :- "சட்டமும் சமயமும்"
வழங்குபவர் :- திரு எஸ். சிவஸ்கந்தஸ்ரீ அவர்கள்
[சட்டத்துறை மாணவன், யாழ் பல்கலைக்கழகம்]

---

**23.08.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**
சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)
வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்
[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**30.08.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் ஆவணிமாத வெளியீடு

## 260ஆவது மலர்

வெளியீட்டுரை :- திரு க. ஸ்ரீச்சந்திரன்அவர்கள்
[ஆசிரியர் - அ.மி. கல்லூரி]
மதிப்பீட்டுரை :-திரு க. நடேசன் (தெணியான்) அவர்கள்
[இளை. அதிபர்]

பதிவு இல. QD/10/NEWS/2019

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

